சுதேசமித்திரன்

ஏப்ரல் 3'49 4 அணா



இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

காக்ஷி
வசீகரமான
உயர்தரமான
நடிப்பு
இசை
செவிக்கினிய
குலுங்கவைக்கும்
ஹாஸ்யம்
பக்ஷிராஜாவின்
பவளக்கொடி
மஹாலிங்கம்...ராஜகுமாரி... வரதன்...ஸரோஜினி
கிருஷ்ணன்...மதுரம்... லலிதா...பத்மினி
ஏப்ரல் 9உ வெளிவரும்
டைரக்ஷன். ஸ்ரீராமுலு நாயுடு... நாராயணன் கம்பெனி வெளியீடு...

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

பொருளடக்கம்

		பக்கம்
பூர்விகச் செல்வம்	'ராவி'	7
பால் கோவா	ஸ்ரீ. ராதாகிருஷ்ணன்	8
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
ரமாவைக் கேளுங்கள்	குங்குமம	17
நாமொன்று நினைக்க	வ. மகாலிங்க சாஸ்திரி	20
கலா மண்டபம்	சாண்டில்யன்	23
துஷ்யந்தலம்	நாகராஜன்	27
பெரிய புராணம்	பி. ஸ்ரீ	31
விடுதலைக் கவிஞருக்கு விடுதலை	லக்ஷ்மி அம்மாள்	33
நிலைக் கண்ணடி	விந்தியா	35
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	39
விளையாட்டுக் கருவிகள்	லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி	43
பூனைக் குட்டியும் அரசகுமாரனும் (சிறுவர் கதை)	பைங்கா நாடு	47

'மித்திரன்'' வாரப்பதிப்பில் தோனறும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கறபனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ பங்குனி௴ 21௳ ★ 1949-௵ ஏப்ரல்௴ 3௳ No. 9

விநோத ஏற்பாடு!

கள்ள மார்க்கட்டை ஒழிக்க சென்னை சர்க்கார் தயாரித்துள்ள மசோதாவின் அடிப்படையான நோக்கத்தை அனைவரும் அங்கீகரிப்பர். உண்மையில் இந்நோக்கம் காரியகரமாக அவர்கள் நெடுநாள் முன்பே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கவேண்டும். வாழ்க்கைக்கு அத்தியாவசியமான எல்லாப் பொருள்கள் விஷயத்திலுமே கள்ள மார்க்கட் அடட்டூழியம் சகிக்க முடியாத அளவை எட்டியிருந்த காலமுண்டு. பின்னர் துணி, மருந்து இன்னும் பல சில்லரைப் பண்டங்கள் விஷயத்தில் அக்கேடு பெரிதும் குறைந்து வந்திருக்கிறது. இன்னும் கள்ள மார்க்கட் செழித்துவரும் இனங்களில் மிகவும் முக்கியமானது உணவு தானியமே. ஆனால் இத்துறையில் உள்ள கோளாறை பரிகரிக்க தற்போதைய மசோதா உதவுமெனத் தோன்றவில்லை. இது குறிப்பாக வேறு பண்டங்கள் விற்பனையில ஈடுபட்ட வியாபாரிகளின் கொள்ளை லாப வெறியை ஒடுக்கவே உருவாகியிருக்கிறது. இரும்பு, ஸிமண்டு போன்ற இனங்களில் இன்னும் கள்ள மார்க்கட் செழித்து வருவது அனைவரும் அறிந்த விஷயம். இதையொழித்துக் கட்டத் தீவிர நடவடிக்கை அவசியமென்பதில் சந்தேகமில்லை.

இனியும கள்ள மார்க்கட்டில் கொள்ளை லாபம் சம்பாதிக்க எண்ணும் வர்த்தகர்களை இம்மசோதா மனமொடியச்செய்யும். அவ்வளவு கடுந் தண்டனை விதிக்க இம்மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. கள்ளமார்க்கட் பேரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள், இம்மசோதாவின்படி தங்கள் பண்டம் பறிமுதலாகி, அபராதம் செலுத்துவதோடு, ஆறுமாதம் முதல் ஆறு வருஷம் வரை சிறைவாசம் செய்யவும் நேரும். இக்குற்றத்தை மூன்று முறை செய்பவர்கள் மீண்டும் மீண்டும் மேற்குறித்த கடுந் தண்டனைக்கு உள்ளாவது மட்டுமில்லை. அவர்களை அத்தகைய வர்த்தகத்திலிருந்தே விரட்டி விடவும் இம்மசோதா சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கிறது. மேலும் இம்மசோதாவின்படி குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை தங்கள் கடை வாயிலில் ஒட்டும் நோட்டீஸ்கள் மூலமும், தாங்கள் எழுதும் கடிதங்கள் மூலமும் விளம்பரப்படுத்தியாகவேண்டும். மற்ற தண்டனைகளைவிட, பகிரங்கமாக மானத்தைக் குலைக்கும் இத்தண்டனை கள்ளமார்க்கட் வர்த்தகர்களிடை இன்னும் அச்சமூட்டுவது திண்ணம்.

கள்ள மார்க்கட் பேரங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சிலருக்கும் பங்கு உண்டு என்பது பகிரங்க ரகசியம். இனி அத்தகைய அதிகாரிகளைத் தண்டிக்கவும் இம்மசோதா விதி செய்கிறது. ஆனாலும் மசோதா தற்போது அமைந்துள்ள வகையில், அதிலுள்ள அதிகாரங்களை உத்தியோகஸ்தர்கள் தாறுமாறாகவும் பிரயோகிக்கக்கூடுமென்பதை நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. இந்த துஷ்பிரயோகத்தால் சீரான பண்ட வினியோக முறைக்கே கேடு நேரக்கூடுமென்பதும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.

பழியோரிடம், பாவமோரிடம் என்பதுபோல், இம்மசோதாவில் பத்திரிகைகளையும் தண்டிக்கும் முறையில் ஒரு விநோதமான பிரிவு சேர்க்கப்பட்டிருக்கிறது. இல்லாத கடமையொன்றை பத்திரிகைகள் தலையில் சுமத்தி, செய்யத் தவறினால் சிட்சிப்போம் என்று சர்க்கார் வெருட்டக் கிளம்பியிருப்பது ஆச்சரியமாகும். அதாவது, கள்ள மார்க்கட் குற்றங்கள்பற்றிய வழக்குகளின் விவரங்களைப்பற்றி சர்க்கார் அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகளை அப்படியே, அதுவும் குறிப்பிட்ட தேதியிலேயே பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டுமாம். அவைகளுக்குக் கட்டணம் எதுவும் கேட்கக்கூடாதாம். இதுவரை யாரும் எங்கும் கேட்டிராத ஒரு விநோதம் இது.

கள்ளமார்க்கட்டை ஒழிப்பதில் சர்க்காருக்கு எவ்வளவு சிரத்தையுண்டோ, அவ்வளவு சிரத்தை பத்திரிகைகளுக்கும் உண்டு. இந்த சிரத்தையைக் காரியகரமாக்க அவை தற்போது தங்களாலான எல்லா வகைகளிலும் முயற்சி செய்தே வருகின்றன. எனினும் இவ்விஷயத்தில் தாங்கள் குறிக்கும் ஒரு வழியிலேயே அவை நடந்துகொள்ள வேண்டும் என்று சர்க்கார் விதிக்க முற்படுவது யதேச்சாதிகாரப் பேயாட்டத்தைத் தவிர வேறென்ன?

—அடுத்தபக்கம்



சென்ற மாதக் கடைசியில் இந்தியா வந்திருந்த மிஸ்டர் அந்தோணி ஈடன் இந்தியப் பார்லிமெண்டின் அந்தரங்கக் கூட்டத்தில் பேசினர். பண்டித நேருவுக்குப் பக்கத்தில் கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறுர் மிஸ்டர் ஈடன்.

பத்திரிகைகளில் எதை எப்படிப் பிரசுரிப்பது, எதை விலக்குவது என்று முடிவு செய்வது பத்திரிகாசிரியர்களின் புனிதமான உரிமை. பத்திரிகைகள் சுதந்திரத்தின் அடிப்படையே இதுதான். இதையொட்டி தங்களுக்கு உசிதமானபடி எந்தத் தகவலையும் பிரசுரிக்கவோ, பிரசுரிக்காதிருக்கவோ அவைகளுக்கு உரிமையுண்டு. கட்டணத்துடன் கூடிய விளம்பரமானுலும் அதைப் பிரசுரித்தாக வேண்டிய கட்டாயமில்லை. கட்டணமுமின்றி, சர்க்கார் மேற்குறித்த குற்றங்களைப் பற்றி அறிக்கைகள் எவ்வளவு நீண்டவையாயிருந்தாலும் அவற்றைப் பிரசுரித்தாகவேண்டும் என்று பத்திரிகைகளுக்குக் கட்டளையிடுவது அக்கிரமமாகும். கள்ளமார்க்கட் குற்றங்கள் மட்டுமா, அவற்றைப் போன்ற, அவற்றைவிட கொடிய குற்றங்களும் எவ்வளவோ நடந்துகொண்டிருக்கின்றன. இக் குற்றங்களின் விவரங்களையெல்லாம் குற்றவாளிகள் ஜாப்தாவுடன் பிரசுரிப்பதொன்றையே பத்திரிகைகள் தங்கள் தொழிலாகக் கொள்ளுமாயின் அவை எத்தகைய காட்சியளிக்குமென்பது யாரும் ஊகித்துக் கொள்ளலாம். பத்திரிகை தர்மத்தைப்பற்றிய பரிபூரண ஞான சூனியமே இம்மசோதாவில் இத்தகைய ஒரு விதி சேர்க்கப்பட்டிருப்பதற்குக் காரணமாயிருக்கக் கூடும்.

சர்க்கார் பத்திரிகைகளுக்கு அனுப்பும் அறிக்கைகளில் தங்களுக்கு உசிதமாகத் தோன்றும் அளவை மட்டும் தங்கள் கஜட்டுகளில் பிரசுரித்துக்கொள்வார்களாம். ஆனுல் பத்திரிகைகள் மட்டும் அவற்றை அப்படியே பிரசுரித்தாகவேண்டுமாம். அதாவது தங்களுக்கு அனுபவ சாத்தியமில்லாத ஒரு காரியத்தை பத்திரிகைகள் மட்டும் செய்தேயாக வேண்டுமென்று வற்புறுத்த சர்க்கார் கூசவில்லை. இதைச் செய்யத் தவறும் பத்திரிகைக்காரர்களுக்கு சிறையோ, கடுமையான அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்போவதாக அவர்கள் பயமுறுத்துகின்றனர். மசோதாவின் அடிப்படையான நோக்கத்துக்கு மகத்தான ஆதரவு அளித்து வருவோரிடையும் வீணுக எரிச்சல் உண்டாக்குவதைத் தவிர இவ்விதியால் விரும்பத்தக்க பலன் எதுவும் விளையாதென்பதை சர்க்கார் உணர வேண்டுகிறேம்.

இதே சமயத்தில் அவர்களுக்கு இன்னொரு அடிப்படையான உண்மையும் நினைவிலிருக்க வேண்டும் அதாவது கள்ளமார்க்கட்டின் வெளிச்சின்னங்களை எவ்வளவுதான் ஓங்கியடித்தாலும், அவ் விபரீதம் மடிந்துவிடாது. அதன் வேரைக் களைந்தாலேயே அதை அடியோடு ஒழிக்கமுடியும். பண்டம் குறைந்து தேவை பெருகியிருப்பதே இக் கேட்டுக்கு மூலகாரணம். தேவையைப் பூர்த்தி செய்ய போதிய சரக்குகள் இருக்குமிடத்தில் கள்ளமார்க்கட் ஒருபோதும் தலைகாட்ட முடியாது. இந்நிலையைக் கூடியவிரைவில் விளைவிக்க வழியென்னவென்பதே சர்க்காரின் முக்கிய சிந்தனையாயிருக்கவேண்டும்.

பிரபல பிடில் வித்வான் ஸங்கீத கலாநிதி த்வாரம் ஸ்ரீ வேங்கடஸ்வாமி நாயுடுகாருவுக்குச் சென்ற வாரம் ரூ. 35000 கொண்ட பண முடிப்பு ஒரு அழகிய வெள்ளிப் பேழையில் வைத்து அளிக்கப்பட்டது. சென்னைக் கவர்னர், ராஜாஜி ஹாலில் பேழையை யும், தொகையையும் ஸ்ரீ நாயுடுகாருவுக்கு வழங்கியபோது எடுத்த படம்.



ஜூலியஸ் ஸோலர் என்ற ஜெர்மன் என்ஜினியர் தயாரித்த 5 தந்தியுள்ள ஜெர்மன் பிடில் இது. பிரபல வாத்திய சிருஷ்டிகர்த்தர்கள் தயாரித்த பிடிலின் நாதத்துக்குச் சரிசமமாக விருக்கிறதாம் இப்புதிய பிடில். இதை 60-டாலருக்கு விற்கிறாராம் ஸோலர். 400 வருஷங்களுக்குப் பிறகு இப்புதிய முறையில் பிடில் தயாராகிறதாம். நாத வெளிப்பாட்டுக்காகப் பல வழிகள் இதில் அமைந் துள்ளன. நடுவே பிரத்யேகமாக சிறு தந்தியொன்று அமைந்திருப்பதையும் காணலாம்.

அட்டைப்படம்

★ நோயும் மருந்தும் ★

ஒரு மலைச்சாரல். அதையடுத்து வண்ண மலர் வனம். அதனிடையே விளங்குகிறது அழகிய மணி மாடம். அதன் நிலா முற்றத்தின் மேல கன்னி யொருத்தி உலாவிக்கொண்டிருக்கிருள் தனியே, மாலைப் பொழுதிலொரு நாள்.

தற்செயலாகச் சோலையுள் பிரவேசிக்கிருன் ஒரு சுந்தர புருஷன். கோதையைக் காண்கிருன் வல்லியின் வனப்பில் தன் வசமிழக்கிருன்.

நம்பியின் நயனங்களும் கட்டழகியின் கயல் கண்களும் சந்திக்கின்றன வனிதையின் வேல் விழிகள் வீரனின் மனதில் வேட்கை மூட்டி விடுகின்றன. மையலால் மயங்கி வருந்துகிருன்; தன்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டாளின் உறவு பெறலாகும் பேறு வாய்க்குமோ என்று பெருமூச்செறிகிருன்.

பேரழகியை மீண்டும் நிமிர்ந்து பார்க்கிருன். அரிவையும் அகங்கனிந்து பரிந்து பாாத்து இன்நகை புரிகிருள். பின், நாணி மென் முகம் கவிழ்க்கிருள்.

வேறென்ன வேண்டும்? மனதிலெழுந்த மாளாக் காதலைத் தெரிவிக்க. தன் வாய்திறந்தொரு வார்த்தை சொல்லவேண்டுமா? 'கருத்தில் வேற்றுமையில்லை, சிந்தை ஒன்றியது; இனி நின் இணக்கம் வேண்டுகிறேன்' என்று கண்களாலன்றி வெறும் சொற்களால் இவ்வளவு தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கத்தான் இயலுமா?

இவ்வாறு அகத்தில் பெருகிய காதலை அவளது கனிந்து உருகிய பார்வையினால் உணர்த்தியதுகண்டு உளம் மிக மகிழ்கிருன். அழகன். கள்ளுண்டவன் போல் கொள்ளையின்பம் எய்துகிருன்.

அவளது மைதீட்டப்பெற்ற கண்களில் இருவிதப் பார்வைகளுள்ளதை எண்ணி வியந்து பாராட்டுகிருன்.

"ஒன்று வேட்கையை வெளிப்படுத்தி எனக்கு ஆருத்துயர் விளைவித்தது. மற்றொன்று ஆழ்ந்த அன்பைத் தெரிவித்து இன்பம் தந்தது

முன்னது இருந்துயர் நோய் உண்டாக்கியது பின்னது இன்மருந்தாய் அமைந்தது.

ஒன்று இன்னுமை அளித்தது மற்றொன்று இனிமை பயந்தது

இவளுடைய கண்களின் சிறப்புதான் என்னே!"

இருநோக்கு இவளுண் கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து

—குறள்

பண்டிகைகளுக்கு
வேண்டிய ஆபரணங்கள்
உமா கோல்டு
கவரிங் ஒர்க்ஸ்
உமா மஹால்
மசூலிப்பட்டிணம்.

★

அசல் தங்கத் தகட்டினுல் மூடப்பட்ட ஆபரணங்கள் 10 வருஷம் உத்திரவாதம். 800 டிசைன் கொண்ட கேட்லாக் இனும்.

★

ஆபரணங்கள் வி பி சார்ஜ்
0—15—0 அணு மாத்திரம்.

●

காட்லாக் விலை விகிதங்கள்
உள்நாட்டிற்கே பொருந்தும்.
வெளிநாடுகளுக்கு 25% அதிகம்.
Tel: 'UMA" Masulipatam.

பூர்விகச் செல்வம்

'ராவி'

அருமையினும் அருமை

★

பிதிரார்ஜிதம் என்றவுடனே பெற்ரோ(ர்)களிடமிருந்து மகன் பெறும் சொத்து என்று எவரும் தெரிந்துகொள்வர். ஆம், அதைப் பற்றியே இங்கே எழுதப்படுகிறது ஆனால் ஒருவனோ ஒருத்தியோ ஒரு தலைமுறையில் தன் பெற்ரோரிடமிருந்து பெறும் சொத்தைப் பற்றி இங்கு பேசப்போவதில்லை அப்படிப் பேசுவது சட்டமறிந்தவர் தொழில் நம்முடைய சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெற்று வழிவழியாக வந்த பெருஞ் சொத்தைப்பற்றியே இங்கு கவனிக்க உத்தேசம் அந்தச் சொத்து பல திறப்படும் நம் நாடு. நாம் பேசும் மொழி நம்முடைய பழக்க வழக்கங்கள் நம்முடைய உணவு உடை. ஆபரணம் முதலியன நம்முடைய ஒழுக்கங்கள். நீதிகள். ஆசாரங்கள், நம்முடைய குறிக்கோள்கள் நம் மதம் நம் தொழில் முறைகள். நம் அரசியல் முறை பொருளாதாரமுறை. சமூகமுறை போன்ற பல திறப்பட்டவை அச்சொத்தின் வகைகள். இவற்றைக் கெடாமல் காப்பாற்றியும் வளர்த்தும் வந்த பெரியோர்கள் மிகப் பலர் அப்படிப்பட்டவர்களில் அரசர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு. கவிஞர்களும் உண்டு; பக்தர்களும் உண்டு; சாதாரண மக்களும் உண்டு. இச்சொத்தின் மேனியும் மினுக்கும் பல வெளியோர்களின் கூட்டுறவால் மாறி அமைந்த காலங்களும் உண்டு; ஆனால் அதன் உள்ளொளி ஒருநாளும் மாறியதில்லை சிற்சில சமயங்களில் இது தன் ஒளி மழுங்கி அணைந்த சாம்பல் போலச் சோம்பிக் கிடப்பதுமுண்டு; ஆனால், இதன் அகத்தினுள் உள்ள தணல் தன் வெப்பத்தை இழந்ததில்லை இது தன் குணம் மாருமல் தன்னோடு உறவாட வரும் அந்நியரின் சொத்துக்களைத் தன் வசப்படுத்தித் தன் வளம் சிறக்க விளங்கும். தன்னை அழிக்கவரும் எதிரிகளைககூட இது மடக்கி அவர்களைத் தலைவணங்கச் செய்யும் இது காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்பட்டதன்று இதற்கு 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்.'

இன்றைய உலக நிலைமையில் இதற்கொரு தனிப் பெருமை உண்டாகியிருக்கிறது. இன்றைய உலகம் என்பது கடந்த ஐந்நூறுண்டுகளுக்குள் எழுந்ததே நீண்ட கால அளவில் ஐந்து நூறு ஆண்டுகள் எவ்வளவு மாத்திரம்? இந்தக் காலத்தில் உலக நாகரிகம்—ஐரோப்பிய நாகரிகம்—நாணல் போல் வளர்ந்தது ஆனால் அதற்கு உட்காழ்ப்பு இல்லை பார்வைக்கே பளபளப்பாய் இருந்தது; பிறருக்கு மோகத்தை அளித்தது ஆனால் இரண்டு பெரிய போர்களாகிய சோதனையுள் விழுந்தவுடன் அதன் மெலிவு அதற்குப் புலப்பட்டது 'என்பில் அதனை வெயில் போலக் காயுமே' என்றபடி அறமாகிய முதுகெலும்பற்ற அந்த நாகரிகம் பெருஞ் சோதனைக்கு முன் நிற்க மாட்டாமல் வாடி வதங்கி தவித்து நின்றது இந் நிலையில் நம் பிதிரார்ஜித சொத்தின் வார்சுதாரர்களாகி சுவாமி விவேகானந்தர், இரவீந்தரநாத் தாகூர் மகாத்மா காந்தி போன்றவர்களின் திவ்ய தேஜஸ் அவர்களின் கண்களிற்படவே, ஒளி தோன்றிய இடமான நம் தேசத்தை நோக்கித் தம்நாட்டத்தைத் திருப்பினுர்கள் இதுதான் இன்றைய உலக நிலை

இன்றைய நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? நமக்குரியனவற்றிலெல்லாம் அலக்ஷிய புத்தி கொண்டு. அயல் நாட்டானின் வாழ்க்கை முறைகளில் மோகமுற்று. நம்முடையனவற்றை இழந்து அந்நியனுடையவற்றையும் அனுபவிக்க முடியாமல் நிற்கிறோம்

எவ்வளவு நெருக்கடியான நிலை! எவ்வளவு முக்கியமான சமயம்! இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின், நிலம் என்னும் நல்லாள் நகும் தம் வறுமையை எண்ணிச் சோர்ந்திருப்பாரை, பூமாதேவி கண்டு நகைப்பாள் என்று வள்ளுவர் கூறுகிருர். பூமாதேவி தன்னிடம் இருக்கும் வளன்களையெல்லாம் வாரிக் கொடுககக் காத்திருக்கும்போது 'இல்லாதவர்களானோமே!' என்று ஏங்குவது ஏன்? என்று வள்ளுவர் கூறுகின்ருர். அதைப்பின்பற்றியே நாமும் கூறுவோம் நமக்குச் சொந்தமான. நம்முன்னோர்கள் நமக்கென விட்டு வைத்த பிதிராஜிதமான பெருஞ் சொத்து நம்மிடம் இருக்க 'என்ன செய்யலாம்?' என்று ஏங்குவானேன்?

'அச்சொத்து எங்கே இருக்கிறது? எப்படியிருக்கிறது?' என்ற கேள்வி எழுவது இயற்கையே. இதற்கு விடை ஒரு சொல்லில் சொல்ல முடியாது. ஓரிடத்தைமட்டும் குறிப்பிடவும் முடியாது நம் நாட்டின் பழக்க வழக்கங்கள் சித்திரங்கள், கட்டிடங்கள். இலக்கியங்கள் இசைப்பாடல்கள் ஒவ்வொன்றும் அந்த அருஞ் செல்வத்தைத் தம்முள் புதைத்து வைத்துக்கொண்டிருக்கின்றன. மேலே சொல்லிய கலைகளுள் மிகப் பழமையானவற்றில் அச்செல்வங்கள் மாசு மறுவற்று விளங்குகின்றன ஆகவே, நமக்குக் கிடைக்கக் கூடிய பழைய கலைகள் வாழ்க்கையின் பல அம்சங்களையும் எவ்வாறு காட்டியிருக்கின்றன என்பதை நாம் அகக் கண்ணுற் காணமுடியுமானுல் எவ்வளவோ நல்லதாகுமன்ருே? அறிவளவிலாவது அவற்றைப்பற்றி அறியலாமன்ருே? உணர்ச்சியில் ஊறக்கூடிய அளவுக்கு இடம் கொடுக்கலாமன்ருே? அனுபவத்திற் கொண்டு வரக கூடியவற்றைக் கொண்டு வரலாமன்ருே? ஆகவே, இக்கட்டுரைகளின் மூலம் பண்டைக் காலத்து நம் நாட்டு நிலைமை, மக்களின் வாழ்க்கை, தொழில் வகைகள், வியாபாரத்துறைகள், அரசியல் முறைகள், வழிபாட்டு வழிகள், பொழுதுபோக்குத் துறைகள், கலையமைதிகள் இவற்றைத் தொகுத்து வரைய விருப்பம்.

இங்கு ஒரு விண்ணப்பமும் எச்சரிக்கையும். இந்தியா முழுமையும் ஓருடலாக இருக்கும்போது. அவ்வுடலில் ஓா உறுப்பை மட்டும் வளமுறச் செய்ய முயல்வது போலவும், அவ்வுறுப்புக்கும் உடலுக்கும் சம்பந்தமில்லையென்று கருதுவது போலவும். சிலர் தமிழகத்தை இந்தியாவிலிருந்து தனித்துப் பார்க்க விரும்புகின்றனர். இந்திய நாகரிகம் ஒரு முழுப பண்டம். அதனைத் துண்டாக்குதல் விரும்பத்தக்கதன்று தமிழுக்குரிய தனி ஆற்றலையும் சிறப்பையும் நாம் போற்றுவோம் ; நம்மாலியன்றவளவு அதனை வளமுறச் செய்வோம்; ஆனால் அதனிலோடும் இரத்தமும் அதற்குரிய சக்தியும் இந்திய உடல் முழுமைக்கும் உண்டு என்பதை நாம் மறக்காமலிருப்போமாக அடுத்த வாரத்தில், நம்தமிழகத்தின் வரலாற்றை அறியக் கருவிகளாயிருப்பவை யாவை என்பதை ஆராய்வோம்.

—



காஷ்மீரப் போர் முனையில் போர் வெகு உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. நமது துருப்புக்கள் கிராமம் கிராமமாகக் கைப்பற்றிக் கொண்டு எதிரிகளை விரட்டி வந்தனர் தமிழ்நாட்டு வீரர்கள் உயிரைத் திரணமாக மதித்துப் போர் புரிந்து தம் சாகஸத்தினால் மதராஸ் ரெஜிமெண்டுக்கே அழியாப் புகழைத் தேடிக் கொடுத்துக்கொண்டிருந்தனர். அவ்வீரர்களது தைரியமும் நுண்ணறிவும் சென்ற மஹாயுத்தத்தின்போது வெளியானதுபோல் இம்முறையும் உலகிற்குத் தெளிவாகியது நமது வடக்கத்திய சகோதரர்களின் அபிப்பிராயத்தில் தமிழ்நாடு இன்னும் ஒரு படி உயர்ந்தது என்பதெல்லாம் நேயர்கள் கண்கறிந்தது தான்

ஆனால் நம் வீரர்களின் மத்தியிலேயே திருஷ்டி பரிகாரம்போல ஒருவன் வந்து மாட்டிக்கொண்டிருந்தானென்பது பலருக்குத் தெரிந்திராது அவன்தான் சுப்பையா. அவன் பக்கமாக ஒரு எலி வந்தால் கூட. அது சற்று நின்று அவனை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்து விட்டுத்தான் போகும். அது கண்ணுக்கு மறையும் வரையிலும் நடுங்கிக்கொண்டு கிடப்பான் சுப்பையனும் காஷ்மீரப் போர் முனைக்கு வீரர்களைச் சல்லடை போட்டுச் சலித்தெடுத்த ராணுவ அதிகாரிகளை சுப்பையனின் கம்பீரமான முறுக்கு மீசை ஏமாற்றிவிட்டதுபோலும், பாவம்! அவனிடம் அந்த மீசைக்குத் தகுந்த வீரம் இல்லையென்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

சுப்பையன் வந்து சேர்ந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் அவன் யோக்யதை எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. சண்டை போட இவன் தகுதியற்றவனென்று அறிந்துகொண்ட அவனது கம்பெனி அதிகாரி அவனுக்குத் தகுதியான ஒரு வேலை கொடுத்தார். ஆபத்தொன்றும் அதிகமில்லாத வேலை அது. அவன் இரவில் பாராக் கொடுக்கும் வேலைக்கு நியமிக்கப்பட்டான். எதிரிகள் யாரேனும் நெருங்குவதாகத் தோன்றினால் ஓடிச்சென்று அறிவிக்க வேண்டியது அவன் பொறுப்பு.

சுப்பையன் இந்த வேலையை ஏற்றுக்கொண்டது முதல் இராத்தூக்கம் அவனுக்கு மாத்திரம் கெட்டதோடல்லாமல் அடிக்கடி பாசறைகளில் நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருந்த வீரர்களின் தூக்கமும் கெடத் தொடங்கியது இருளில் கண்டதையெல்லாம் 'எதிரி' என்றெண்ணிப் பயந்து அலறியடித்துக்கொண்டு அனுவசியமான தடுமாற்றங்களுக்கெல்லாம் வழியேற்படுத்தினான் அவன். தயை மிகுந்த கம்பெனி' அதிகாரி அவன் மீது இரக்கம் கொண்டு அவனைத் தன் சொந்த வேலையாளாய் வைத்துக்கொண்டார். வேலைநேரம்போக மற்றப்போதெல்லாம் அருகிலிருந்த கிராமங்களில் இஷ்டம்போல் சுற்றி வந்தான் சுப்பையன்.

உயிர்மேல் அளவற்ற ஆசை சுப்பையனுக்கு இருந்தது என்பது நமக்குத் தெரிகிறதல்லவா? கிட்டத்தட்ட அந்த உயிருக்குச் சமானமாக அவன் நேசித்தபொருள் ஒன்று உண்டென்றால் அதுதான் பால்கோவா. அது கிடைப்பதென்றால் அதற்காக எதையும் தியாகம் செய்ய அவன் தயார்தான் தான் இருப்பது போர் முனையில் என்னதான் ஜாக்கிரதையாக இருப்பதானாலும் எந்த நிமிஷத்திலும் மரணம் சம்பவிக்கலாமென்ற எண்ணம் சிலசமயம் அவன் மனதில் உதிப்பதுண்டு அப்படிச் சாவதானால்கூட அதற்குமுன் முடிந்தவரை பால்கோவாவைத் தின்றுவிட்டுத் தான் சாகவேண்டும்- வீரஸ்வர்க்கத்தில் நமக்கென்று யார் பால்கோவா பண்ணித் தரப்போகிறார்கள்? இப்போதிலிருந்தே சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டு, தன் தீர்மானத்தைக் கிரியாம்சையிலும் காட்டி வந்தான் சுப்பையன்

சுற்று வட்டாரத்தில் பால்கோவா ஓரே இடத்தில்தான் கிடைத்து வந்தது நம் துருப்புகளின் கைவசமிருந்த ஒரு கிராமத்து மிட்டாய்க் கடை. வேலை முடிந்ததும் சுப்பையன் நேரே விரைவது அங்கேதான். காஷ்மிரி பாஷையில் பால்கோவாவுக்கு ஏதோ வாயில் நுழையாத ஒரு பெயர் ஆனால் அந்தப் பெயரைப்பற்றி அவன் ஏன் கவலைப்பட வேண்டும்? அவனைப் பொறுத்தவரையில் வாயில் நுழைய வேண்டியது பால்கோவா மட்டும்தானே? திருப்பித்திருப்பி அவன் 'பால்கோவா' பால்கோவா என்று அடித்துக்கொள்வதைப் பார்த்த மிட்டாய்க்கடைக்காரன் அது சுப்பையனின் பெயர்போலும் என்றெண்ணி அவனைப் 'பால்கோவா' என்றே குறிப்பிடத் தொடங்கினான் நாளடைவில் மிலிடரி காம்பிலும்கூட அவனை எல்லோரும் கேலியாக பால்கோவா என்றே அழைக்கத் தொடங்கினர். வேலை மும்மரத்தில் அவன் சற்றுப் பால்கோவாவை மறந்தால் கூட அவன் நண்பர்கள் அவனை மேறபடி பெயரால் அழைத்து அவன் வாயில் நீர் ஊறும்படி செய்து வந்தனர்.

ஒருநாள் காலை வழக்கம்போல் மிட்டாய்க் கடைக்குச் சென்ற சுபபையன் கண்ணீரும் கம்பலையுமாயிருந்த கடைக்காரனைக் கண்டான் அவனுக்குத் தெரிந்த அரைகுறைப் பாஷையின் மூலம் சுப்பையன் கிரகித்துக் கொண்ட விஷயம் அவன் நெஞ்சைப் பிளப்பதாயிருந்தது முந்தின இரவில் எதிரிகள் சிலர் வந்து கடைக்காரனின் ஆடுமாடுகளையெல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் திருடிக் கொண்டு போயவிட்டனராம். "மாடில்லை—பாலில்லை பாலில்லை—பால்கோவா இல்லை இந்த மூலமந்திரம் அவன் மூளையில் உதயமாகி ஒரு கலக்கிக் கலக்கியது கடைக்காரன் துக்கத்தையும் மீறியது

சுப்பையனின் துக்கம். அவர்களிருவரும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழுதிருந்தால்கூடப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டிருக்கவேண்டியதில்லை

அந்த ஊரிலேயே வேறு யாரிடமும் மாடு கிடையாது அருகிலிருந்த மற்ற கிராமங்களிலிருந்து மாடுகளை முன்பேயே கடத்திச் சென்றுவிட்டனர் எதிரிகள். கறக்கிற மாடாக ஒன்ருவது இருந்தாலல்லாமல் பால்கோவாவுக்கு வழி? என்ன செய்வதென்றறியாமல் சுப்பையன் திகைத்தான் 'உங்கள் காப்டனிடம் சொல்லி என் மாடுகளை எப்படியாவது மீட்டுகொடுத்தால் உங்களுக்குக் காசில்லாமலேயே வேண்டிய பால்கோவா தருகிறேன்'' என்று கடைக்காரன் ஒரு புறம் ஆசை காட்டிக்கொண்டிருந்தான்.

சுப்பையன் சற்று யோசித்தான் எதிரியின் இந்தக் கேவலமான திருட்டுச் செய்கைக்காக காப்டன் அதிகச் சிரமம் எடுத்துக்கொள்வாரென்று அவனுக்குத் தோன்றவில்லை. வேறு ஒரே வழிதானுண்டு நிமிஷத்துக்கு நிமிஷம் அவன் உறுதி பலப்பட்டது தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தான் எதிரி ஆட்கள் நியாயமான முறையில் நம் துருப்புக்களுடன் போராடி கிராமத்தில் புகுந்திருக்கமுடியாது. அவர்கள் செய்தது கேவலம் திருட்டு. இப்போது சுப்பையன் செய்யப் போவதும் திருட்டு. முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும்.

பால்கோவா வேண்டியது அவனுக்கு மட்டும்தானே? அதன் பொருட்டு அவன் உயிர் நீப்பது தான் அழகு. வீணுக ஏன் ஒரு கூட்டம் வீரர்களை ஆபத்துக்குள்ளாக்க வேண்டும்? இம்மாதிரியான பல அறிவு ததும்பும் எண்ணங்களெல்லாம் அவன் மனதில் தோன்றின

எதிரிகள் எந்தப்பக்கம் போனுர்கள்?'' என்று பல்லைக் கடித்த வண்ணம் கேட்டான் சுப்பையன்.

''அதோ அந்தப்பக்கம்...'' என்று கடைக்காரன் கையை நீட்டிக் காட்டினுன் சுப்பையன் கட்டாயமாக ஏதாவது ஏற்பாடு செய்வான் என்றுதான் அவனும் நம்பினுன்

* * * *

பொழுது சாய்ந்தால் கூடாரத்தை விட்டுக் கிளம்பும் வழக்கமில்லாத சுப்பையன் இன்று நல்ல இருளில் பதுங்கிப்பதுங்கி நடந்து சென்றுகொண்டிருந்தான் நல்ல பனி பெய்துகொண்டிருந்தது சில மைல் தூரத்திற்கப்பால் இருந்த எதிரிகள் முகாமை நோக்கித்தான் செல்கிருன். ஓசைப்படாமல் சென்று ஒரு மாட்டையாவது திரும்ப இழுத்துக் கொண்டு வந்துவிடலாமென்பது அவன் எண்ணம்.

அவன் கையோடு ஆயுதமெதுவும் கொண்டு போகவில்லை. ஆயுதங்களின் மீது அவனுக்கு நம்பிக்கையில்லாமலில்லை ஆனுல் அவனது அவநம்பிக்கையெல்லாம் தன் மீதே தான். அவசரம் வரும்போது ஆயுதத்தை உபயோகிக்கத் தைரியம் வருமா என்று சந்தேகமாயிருக்கும் போது வீண் சுமை எதற்கு? கடவுள் கொடுத்த கால்களிரண்டும் அவனைக் காப்பாற்ற முடிந்தால் தான் உண்டு. இல்லாவிடில்...... அப்புறம் என்ன? எதற்கும் அந்த ஒரு துண்டு பால்கோவா இருக்கவே இருககிறது.

எதிரி முகாம் போட்டிருந்த அந்தக் கிராமத்தின் எல்லைக்குள் பிரவேசித்துவிட்டான் சுப்பையன் ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்த வீடுகளின் கொல்லைப்புறமாக மெல்லப் பதுங்கிப் பதுங்கிச் சென்ருன் அடிக்கடி ஜேபியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்—கடைக்காரர் கடைசியாகக் கொடுத்திருந்த பால்கோவாத் துண்டு பத்திரமாய் இருக்கிறதா என்றறிய அந்தப் பிராணபத்தான நிலையில்கூட அவன் மனதில் ஒரு உற்சாகமூட்டியது அத்துண்டு.

அவன் கண்கள் இருளில் அங்குமிங்கும் துருவின அவன் தேடியதெல்லாம் அந்த நாலு கால்கள், இரண்டு கொம்புகள், ஒரு வால் இவை கொண்ட ஒரு மிருகம் தான். அது எங்கும் காணப்படாமல் போகவே அவன் இதயம் மெதுவாக அமுங்குவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு

இந்தப் பரிதாபகரமான நிலையில் தான் அவன் காதுகளில் தேனைப் பொழிவதுபோல் வந்து விழுந்தது 'அம்மா' வென்ற அலறல்! அந்த சப்தம் சிறிதும் சந்தேகத்துக்கிடமளிக்கவில்லை ஒரு மாடு தான் அப்படி அலற முடியும் அடித்துக்கொள்ளும் நெஞ்சத்தோடு சப்தம் வந்த திக்கை நோக்கிச்சென்ருன் சுப்பையன்

ஆஹா! என்ன காட்சி! நாம் சுப்பையனின் உச்சி குளிர்ந்தது' என்று சொல்லக்கூடாது அந்தக் கிடுகிடுக்கும் குளிரில் அது பொருந்தாது தான் ஆனுல் வேறு என்ன சொல்வது அவன் தேடி வந்த மிருகம் அங்கே புல் தரையில் படுத்துக்கொண்டு நிதானமாய் அசை போட்டுக்கொண்டிருந்தது.

ஆயிரமானுலும் அது வெறும் மிருகந்தானே? தன் பொருட்டு அந்த உயர் வகுப்பைச் சேர்ந்த மானிடன் எத்தகைய இன்னல்களையும்பொருட்படுத்தாமல் வந்திருக்கிருனென்று அதற்குத் தெரியவில்லை முதலில் அது தன்னைக் கண்டு எழுந்து நிற்பதைக் கண்டதும் சுப்பையன் அது தனக்கு மரியாதை செய்வதாகதான் எண்ணினுன். ஆனுல் மாடுகளின் பரிபாஷையில் 'தாதா பாபா' என்று கெஞ்சிக்கொண்டு அவன் அதைநெருங்கின பின்தான் உண்மை விளங்கிற்று.

''உய்......'' என்று ஒரு முறை கர்ஜித்து விட்டுக் கொம்புகளைத் தாழ்த்திக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்தது மாடு திரும்பிப் பாராமல் ஓடத்தொடங்கினுன் சுப்பையன் ஓடினதென்னமோ வேகமாய்த் தான் ஓடினுன் - ஆனுல் முற்றிலும் தவருன திசையில்தான் ஓடியிருந்தான். இருளும் பயமும் சேர்ந்து அவனுக்குத் தலைகால் புரியாமல் செய்துவிட்டன. பாவம்! என்ன செய்வான்?

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய சுப்பையன் எதன் மேலோ தடுக்கி எட்டுக் குட்டிக்கரணங்களுடன் விழுந்தான். இன்னும் அந்த மாடு பின்னுல் அவ

னைத்துரத்திக்கொண்டுதான் வந்துகொண்டிருந்தது. மறுபடி எழுந்து ஓட்டத்தைத்தொடங்காவிட்டால் அவன் கதி அதோகதிதான் அவன் எழுந்திருக்க யத்தனித்தபோதுதான் வேறொரு அற்புதம் நிகழ்ந்தது

நல்ல சமயத்தில் தடுக்கிவிட்ட அந்த மேடு 'அரே சைத்தான்!' என்று சபித்துக்கொண்டு எழுந்து நின்றது தூங்கிக்கொண்டிருந்த ஒரு பாராக்காரன் — அப்போதுகூடச் சுப்பையனுக்குத் தன் தவறு தெரியவில்லை. முதலுக்குப் பயந்து பாம்பு வளையில் கைவிட்டதுபோல் அவன் மாட்டிற்குப்பயந்து ஓடி நேரே எதிரியின் முகாமிற்குள் நுழைந்திருப்பது அவனுக்கு இன்னும் புலனாகவில்லை அவன் ஸ்மரணையெல்லாம் 'மாடு—துரத்துகிறது' என்பதொன்றுதான். அந்தச் சமயத்தில் மாட்டைத் தவிர வேறு எதிரிகள் யாரும் இருப்பதாகவே அவன் நினைக்கவில்லை.

ஏதோ கூவிக்கொண்டு எழுந்து நின்ற பாராக்காரன் பார்வை கீழே விழுந்து கிடந்த சுப்பையன் மேல் விழுமுன், பின்னால் "உய்..." என்ற கர்ஜனையுடன் ஓடி வந்து கொண்டிருந்த அந்த பூதாகாரமான உருவத்தின் மேல் விழுந்தது தூக்கக் கலக்கத்தில் அதைப் பிசாசு என்றெண்ணிப் பயந்துகொண்டு பயங்கரமாய் ஏதேதோ அலறிக்கொண்டு ஓடத் தொடங்கினான் பாராக்காரன் சுப்பையனுக்கும் அவனுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கக் காத்திராமல் அவனைத் துரத்தத் தொடங்கியது அம்மிருகம்

"அப்பா பிழைத்தோம். காஷ்மீரத்து மாடுகள் இவ்வளவுபொல்லாதென்று தெரிந்திருந்தால்..." என்று பெருமூச்சு விட்டான் சுப்பையன் ஆனால் அவன் மனதில் துவேஷ உணர்ச்சி எழுந்துவிட்டது அதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டுவந்த நன்மை என்ன பாடு படுத்திவிட்டது இந்த மாடு? இதைச் சும்மா விட்டு விட்டுப் போவதா? திரும்பிப் போகுமுன் கையாற நாலு கல்லாவது எறியாமல்.........' என்று முணுமுணுத்துக் கொண்டே கற்களைத் தேடத் தொடங்கினான் அருகிலேயே கிடந்த சில உருண்டைக் கற்களை இருட்டில் தடவிப் பார்த்து எடுத்தான்.

மாடு இருளில் மறைந்து எத்தனையோ நேரமாயிற்று ஆனால் துவேஷம் யாரை விட்டது? அந்த உருண்டைக் கற்களை ஒவ்வொன்றாக எறியத் தொடங்கினான் கண்மூடித் திறப்பதற்குள் நாலு கற்கள்-'விர்'ரென்று பறந்தன அவை அளித்த பலன் தான் சுப்பையனைத் திகைக்க வைத்தது.

'டமார், டமார்' என்ற நாலு சப்தங்கள்—கண்ணைப் பறிக்கும் மின்னல்போன்ற வெளிச்சங்கள்—மறு நிமிஷம்.........? வானையளாவியெழும் தீ 'சட பட' வென்று ஒன்றை ஒன்று அடுத்தாற்போல் பலகுண்டுச் சத்தங்கள் 'ஹோ' வென்றலறிக்கொண்டு மனதர்கள் அல்லோலகல்லோலமாய் அங்குமிங்கும் ஓடும் காட்சி. மின் வெட்டுப்போல் சுப்பையன் மனதில் உண்மை தோன்றியது அவன் எறிந்தவை கற்களல்ல—எரி குண்டுகள், அவன் தடுக்கி விழுந்த எதிரி பாராக்காரன் வசம் இருந்த குண்டுகள் அவை. நம் துருப்புகளும் கவச மோட்டார்களும் வரும்போது அவற்றைத் தாக்குவதற்காக அவன் வைத்திருந்த அதே குண்டுகளினால் சுப்பையன் எதிரிகளுக்கே சேதம் விளைவித்து விட்டான். அதுவும் அவன் எறிந்த குண்டு சரியாக ஆயுதக் கிடங்கைப் போய்த் தாக்கியிருக்கிறது நூற்றுக் கணக்கான டன் நிறையுள்ள வெடிமருந்தில் நெருப்புப் பட்டால்...... சேதத்திற்குச் சொல்லவேண்டியதில்லை. இனி தானும் அருகில் நிற்பது ஆபத்து என்று உணர்ந்ததும் தன் முகாமை நோக்கி ஓடத் தொடங்கினான் சுப்பையன்

குடல் தெறிக்க ஓடி வந்துகொண்டிருந்த சுப்பையனை நம் வேவுகாரர்கள் சிலர் கண்டனர் எதிரிகள் முகாமில் சற்று நேரமாக நிகழும் தடபுடல்களுக்குக் காரணமறியாமல் விழித்துக்கொண்டிருந்த காப்டனுக்கு தன் தைரியச் செய்கையையும் அதன் விளைவையும் விவரித்தான் சுப்பையன் மாட்டைப்பற்றிய பிரஸ்தாபமே அதில் வராமல் பார்த்துக்கொண்டான் வேலைமெனக்கெட்டு எதிரிகள் முகாமில் புகுந்து அவர்களிடையில் பெருத்த சேதத்தை ஏற்படுத்திய சுப்பையனின் சாமர்த்தியத்தை எல்லோரும் மெச்சினர் இந்தப்புற்றிலும் பாம்பிருக்குமா என்றல்லவோ நினைத்தோம்" என்றனர் மதராஸ் ரெஜிமெண்ட்டின் புகழ் இன்னும் ஏறியது

எதிரிகள் விட்டு ஓடிய அக்கிராமத்தை அன்றிரவே நம் துருப்புகள் வசப்படுத்திக்கொண்டன மிட்டாய்க் கடைக்காரன் மாடுகள் மீட்கப்பட்டன. சுப்பையனுக்கு வேண்டிய அளவு பால்கோவா கிடைத்தது இன்னமும் கிடைத்து வருகிறது காசில்லாமலே ஆனால் இப்பொழுதெல்லாம் அவனை யாரும் 'பால்கோவா' என்று அழைப்பது தானில்லை.

இன்னமும் சுப்பையன் அந்த மிட்டாய்க் கடைக்குப் போகிறபோதெல்லாம், அந்தக் கடைக்காரனின் மாட்டுக் கொட்டகையில் புகுந்து சற்று நேரமாவது அதற்கு (தன்னைத்துரத்திய அந்த மாட்டிற்கு) சொறிந்து கொடுத்துச் சிசுருஷை செய்துவிட்டுத்தான் வருகிறான் அவன் அன்பின் மர்மம் அந்த ஜந்துவுக்கும் அவனுக்குமன்றி வேறு யாருக்குத் தெரியும்?



தொடர்கதை

சொப்பன வாழ்க்கை

'ஆர்வி'

முன் கதை

★

பங்களூரில் தொழிற்சாலைஒன்றில் மானேஜராக இருக்கிறான் விசுவநாதன். பானுமதி என்ற யுவதியிடம் அவன் கொண்டிருந்த நட்பைச் சந்தேகித்து அவன் மனைவி சுசீலா அவனிடம் சச்சரவிட்டுக் கொண்டு சென்னையிலிருக்கும் தன் சகோதரன் வீட்டுக்கு வருகிறாள் மறுநாளே விசுவத்தின் சகோதரன்சுவாமியும் லீவு நாட்களைச்சென்னையில் கழிக்க வந்து சேருகிறான் இந்த நாட்களில் விசுவம்—பானுமதியின் நட்பு புதிய கட்டத்தை நெருங்குகிறது. சுசீலா வந்தது அவள் சகோதரன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அதே சமயத்தில் சுசீலாவுக்கு எதிர் வீட்டிலிருக்கும் சீதா என்ற பெண்ணின் சினேகம் ஏற்படுகிறது. குமார், சுசீலா, சீதா மூவரும் ஒரு நாள் சினிமாக் காட்சிக்குச் செல்லுகிறார்கள். குமார். சீதாவிடம் யாருக்கும் தெரியாமல் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுக்கிறான். சீதா வேறு இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விடுகிறாள். குமாரும், சுவாமியும், இதனால் மன அமைதி குலைந்து உட்கார்ந்திருக்கின்றனர்.

விசுவம் தொழிற்சாலையிலிருந்து வீட்டுக்குக் கிளம்புகிற சமயத்தில் அவன் கையில் ஒரு துண்டுக கடிதத்தைக் கொடுத்தான் வேலைக்காரன். பானுமதிக்கு உடல் நிலை சென்ற இரண்டு நாட்களாகச் சரியாய் இல்லை என்பதே அதில் கண்டிருந்த விஷயம்.

கிட்டத்தட்ட சுவாமியும் சுசீலாவும் சென்னையிலிருந்து புறப்பட்ட அதே சமயத்தில்தான் இந்தத் தகவல் கிடைத்தது. பானுமதியைப் பாராமல் இவ்வளவு நாள் இருந்ததற்கு என்ன சமாதானம் கூறுவதென்று அவனுக்கு விளங்கவில்லை. சுசீலாவின் பிரிவு நிரந்தரமானதா என்பதும், தான் எவ்வளவு தூரம் பானுமதியிடம் பழகுவது என்பதும் அவன் மனத்தில் முடிவற்ற பிரச்னையை எழுப்பிவிட்டிருந்தது. பானுமதியின் தாய் ஊரிலிருந்து வந்துவிட்டாளா இல்லையா என்பது அந்தக் கடிதத்தில் குறிப்பிட வில்லை. போகாமல் இருந்துவிட எவ்வளவோ முயன்றும் மனசுக்குள் பெருகிவருகிற துடிப்பு அவனைப் பானுமதியின் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தது.

இன்னும் அவள் தாய் ஊரிலிருந்து வரவில்லை. உதவிக்கு ஒரு சமையற்காரி மட்டிலுமே வீட்டிலிருந்தாள். பானுமதி கட்டிலில் படுத்திருந்தாள் விசுவம் பயந்தபடி அவள் உருமாறிப் போய்விட வில்லை. ஏதோ இரண்டு நாளாக ஜலதோஷமும் தலைவலியும் தான் மற்றப்படி படுத்திருநதாளே யொழிய நோயின் சின்னங்கள் அவளைச் சிறிதும் பாதித்ததாகத் தெரியவில்லை. எடுத்த எடுப்பில், தன்னை வரவழைக்கத்தான் இந்தச் சூழ்ச்சியோ என்றுகூட நினைத்தான் விசுவம். ஆயினும் தன்னை மன்னிக்கும்படி வேண்டுகிற பாவனையில் பரபரப்புடன் அவளருகில் சென்று, ''முன்னமே சொல்லியனுப்பக் கூடாதா, பானு?'' என்று கேட்டான்

அருகில் சென்று பார்த்தபோது பானு தன்னை அலங்கரித்துக் கொள்ளாமலிருககும்போது பன்மடங்கு யௌவனத்தோடும் அழகோடும் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது முன் பக்கத்துத் தலைமயிர் லேசாகச் சிலும்பிக் கிடப்பதும் முகம் சீதளத்தினால் சிறிது வெளுத்திருப்பதும் கார் காலத்துச் சந்திரனை அவனுக்கு நினைப்பூட்டின பேசாமல் தன்னையே பார்ககின்ற அவளுடைய விழிகளைப் பாராமல் சுற்றுமுற்றும பார்த்துவிட்டு, 'உடம்பில் ஜுரம இருக்கிறதா?'' என்று கேட்டான்.

பானுமதி தலையை அசைத்தாள். அந்த அசைப்பின் பொருளில் நம்பிக்கையில்லாதவன்போல போர்வையிலிருந்து அவள் கைகளை எடுத்துத் தொட்டுப் பார்த்தான். அந்தக் கர ஸ்பரிசத்தின் இனிமையைத் தவிர அதிலிருந்த உஷ்ணத்தைச் சிறிதும் அவன் உணரவிலலை.

மனச்சாட்சியை அடியோடு பறிகொடுத்துவிட்டு, ''உடம்பு கொதிக்கிறாப் போல இருக்கிறதே!'' என்றான்.

பானுமதி முகத்தைத் திருப்பிக்கொண்டு தன் கையை மெதுவாக அவன் பிடியிலிருநது விடுவித்துக்கொண்டாள். தன்னுடைய பாசாங்கையெல்லாம் அவனுடைய பாசாங்கு மிஞ்சியடிக்கிறதே என்ற பாவனையில் அவள் மனசுக்குள் சிரித்துக்கொண்டாள். ஆனாலும் உடம்பு சரியாய் இல்லை என்பது உண்மைதான். தலையை இப்பொழுது கூட வலிக்கிறது, ஜலதோஷம் 'முட்டிக்கொண்டிருப்பதால்... அதெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டில்லை. தன் மனத்திலிருந்த வலியைத்தான் அவளால பொறுக்க முடியாமலிருந்தது. அதனால் உடம்பு எங்கேயாவது கொதிக்குமா, என்ன?

"பானு, நான் போய் யாராவது ஒரு டாக்டரை அழைத்துக் கொண்டு வரட்டுமா, சொல்லேன்" என்றான் விசுவம்.

"வேண்டாம்!"

பின்னே தனக்கு என்ன வந்துவிட்டதென்று விசுவத்துக்கு ஆளனுப்பினாள் அவள்? அவனுக்கே தெரியாமல் அப்படி என்ன ஒரு வசீகர சக்தி இருக்கிறது அவனிடம்? விசுவம் தனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டான். கோமளமான இந்தச் சுந்தரியின் காதலுக்கு உலகத்தில் ஈடான பொருள் எதுதான் இருககிறது என்று அவன் மனம் எண்ணமிடடது. அடியோடு மறந்துவிட நினைத்த பாசமெல்லாம் மீண்டும் தலை தூககின. அவளுடைய இணக்கத்துக்கு முன்பாக தன்னுடையது என்று சொல்லிக்கொள்ளககூடிய எதையும் துறப்பது ஒரு பெரிய காரியமாகத் தோன்றவில்லை...

பானு அவனை உட்காரும்படி சொன்னாள் கட்டிலுக்கு அருகில் உள்ள நாற்காலியில் விசுவம் உட்கார்ந்துகொண்டான். பக்கத்து ஸ்டூலில் இருந்த எடிகொலோன் பாட்டிலை எடுத்துப் பார்த்துக்கொணடே, "எத்தனை நாளாக இப்படி இருக்கிறது?" என்று கவலையுடன் விசாரித்தான்.

பானு மிகவும் மெல்லிய குரலில், "இரண்டு நாளாக" என்றாள். அவளுடைய முகத்திலே அழகாகக் குழி விழுகின்ற கன்னப் பிரதேசத்தில் நகம் பதிந்து, காயம் காய்ந்துபோன வெளுப்பு ஒன்று லேசாகத் தென்படடது என்ன அது என்று கேட்க வாயெடுத்துவிடட சமயம்! திடீரென்று கடைசியாக அன்று இரவில் அவர்கள் பிரிந்த ஞாபகம் வந்தது. பேசாமல் தன்னை அடக்கிக்கொண்டான்.

சுசீலாவின் பந்தங்களை அடியோடு அறுத்துக்கொண்டு பானுமதியுடன் புது வாழ்வு தொடங்குவதா என்ற முடிவோ, நிச்சயமோ ஒன்றும் ஏற்படவில்லை. இன்றுள்ள மனநிலையில் பானுமதியிடம் தனக்குள்ள பழக்கம், ஏற்படவேண்டிய உறவு எவ்வளவு தூரம் போக வேண்டும்? அப்படியானால் பானுமதியின் நிலைமை என்னவாகும்? அந்தக் கவலை அவளுககல்லவா இருக்க வேண்டும? இப்படி அவன் குருட்டு யோசனை செய்துகொண்டிருக்கையில், பானுமதி எழுந்து உட்கார்ந்து, "உங்கள் மனைவி ஊரிலில்லை என்பது உண்மைதானா?" என்றாள்.

வேறு ஒரு சமயமாய் இருந்தால் விசுவத்தின் கோபம் எல்லை கடநது போயிருக்கும்! "உனக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னார்கள்?" என்று மட்டுமே கேட்டான்.

"அம்மா எனக்கு எழுதியிருக்கிறாள்."

விசுவம் இதற்குப் பதில் சொல்லவில்லை. தனக்குத் தெரியாமல் என்னென்ன நடந்திருக்குமோ? மேலும் அவள் அம்மா இன்னும் எதையெல்லாம் எழுதியிருககிறாளோ?

"சுசீலா ஊருக்குப் போயிருப்பது உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன் நான் சொல்ல ஒரு சமயம் மறந்திருப்பேன். ஆனால் அவளைப் பற்றி நாம் எதற்குப் பேசவேண்டும்...?"

"இதற்கெல்லாம் எனக்கு அர்த்தம் தெரிகிறது" என்றாள் பானுமதி.

அறையில் சிறிது மௌனம் நிலவியது. சமையற்காரி அந்தச் சமயத்தில் வந்து விளக்கைப் போடடு விடடுச் சென்றாள். பானுமதி அவளைக் கூப்பிட்டு, "இதோ பார்—இவரும் இங்கே சாப்பிடுவார்...எல்லாம் இருக்கிறதோல்லியோ?" என்று கேட்டாள். வீட்டிலே சில சமயங்களில் ஏதாவது தேவைப்பட்டுக்கொண்டே இருநதது. ஆகவே சமையற்காரி எதையும பார்க்காமல் சொல்வதற்கில்லை மத்தியான்னமே நெய் இல்லாததுபோல ஒரு ஞாபகம்...

சற்றைக்கெல்லாம் அவள் ஒரு பாத்திரத்துடன் திரும்பிவந்து, 'வெண்ணெய்தான் கொஞ்சம் வேண்டும்போல் இருக்கிறது. நான் கடைக்குப் போய் விட்டு வந்து விடுகிறேன்" என்றாள் மெதுவாக...

பானு எழுந்திருக்க முடியாமல் எழுந்து பீரோவைத் திறந்தாள். விசுவம இந்தச் சமயத்தில் தன் மணிபர்சைத் திறந்து ஐந்து ரூபாயை எடுத்து நீட்டி, "இதோ பணமிருக்கிறது பானு இதைக் கொடுத்து அனுப்பு!" என்றான்.

'வேண்டாம்—பரவாயில்லை' என்று வாக்குவாதங்கள் நடந்தன. விசுவத்துக்குத்தான் கடைசியில் வெற்றி "ஆனால் நான் இங்கே சாபபிடப்போவதாகச் சொன்னாயே...அத்தை காத்திருப்பாளே" என்றான் விசுவம்.

"இவ்வளவு நாள் நான் காத்திருந்ததற்கு ஒருவரும் கவலைபபடவில்லையே!"

விசுவம் இதற்குச் சிரித்து மழுப்பிக்கொண்டே, "வரவேண்டாம் என்று எந்த வாய் அன்று சொன்னதோ தெரியவில்லை!" என்றான்.

"எதற்காக அப்படிச் சொன்னேன் என்பதை உங்கள் மனசு அறியும்!" என்று சொல்லிக்கொண்டே அவள் தன் கட்டிலில் சாய்ந்து கொண்டாள். தலைப் பக்கத்துத் தலையணையை எடுத்துத் திருப்பிப் போடும்போது அடியில் ஒரு கவர் கிடந்ததைக் கண்டான் விசுவம்...'பானுமதி' என்ற குண்டுகுண்டான எழுத்துக்களும் தெரிந்தன. பானுமதி இதை மறுபடியும உள்ளே தள்ளிவிட்டு அதன்மேல் சாய்ந்து உட்கார்ந்து கொணடாள்.

விசுவம் என்ன நினைத்தானோ 'என்னமோ நாற்காலியை விட்டு எழுந்து கட்டிலருகில் சென்று, "பானு—எனக்கே என்னைக் கண்டால் வெறுப்பாய்

இருக்கிறது. நீ சொல்வதைத் தட்டிப்போக எனக்கு விருப்பமும் இல்லை; தைரியமும் இல்லை—ஆனால் இதை மடடும் எனக்குச் சொல்லிவிடு. என்றால் இனிமேல் இந்த நிலையைப் பொறுக்க முடியாது'' என்றான்.

பானுமதி நடுங்குகின்ற குரலில். ''நீங்கள் எதைச்சொல்லச் சொல்லுகிறீர்கள் ?'' என்று கேட்டாள்.

"உனக்குத் தெரியும் என்ன சொல்லவேண்டும் என்பது! சுசீலாவைப் பற்றி நீ ஒருவார்த்தைகூடப் பேசக்கூடாது அது என் சொந்த விஷயம்...சொல்லேன், பானு...ஒரு வார்த்தை!" என்றான் விசுவம்.

பானுமதியின் முகம் சிவந்தது கோபத்தினால்...

"வீட்டில் நான் மட்டும்தான் இருக்கிறேன். என்ன வெட்கக்கேடு இது! நாற்காலியில் போய் உட்காருங்கள். எந்த வேளையில் உங்களைப் பார்த்தேனோ...என் வாழ்க்கை பாழாகத்தான் போகிறது! நான் உங்களையும் குட்டிச் சுவராகத்தான் அடிக்கப் போகிறேன்—உங்களை அழைத்ததே பிசகு...உங்களைச் சாப்பிட்டுப் போகும்படி சொன்னது அதை விடப் பிசகு. ஆனால், நான் என்ன செய்வேன்... சாப்பிட்டுவிட்டு உங்களைப் போகச்சொல்லப்போகிறேனா என்பதே எனக்குத் தெரியவில்லை" என்றாள் ஏதனாலோ அழுகை தொண்டையை அடைத்தது அவளுக்கு.

விசுவம் அவளருகில் உட்கார்ந்து கொண்டான் தயங்கவில்லை; அவள் தடுக்கவுமில்லை "இந்த ஒரு மாதம்போல நான் என்ன பாடுபட்டேன் என்பது உனக்கு எப்படித் தெரியும்? சுசீலா—இது தவறாய் இருக்கலாம். ஆனால் இதற்கு நானோ அல்லது நீயோ பொறுப்பல்ல. தெரிகிறதா பானு?" என்றான்.

பானுமதியின் இரு கன்னங்கள் வழியே கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. விசுவம் பேசி முடித்ததும் அவள் எழுந்து "என்மேல் தப்பு இல்லாமல் இல்லை. என்னுடைய சுயநலம் என் கண்களை மறைத்து விட்டன! இது எப்படிச் சாத்தியம்? இதோ பாருங்கள் உண்மையாக நீங்கள் என்னிடம் அபிமானமும் அன்பும் கொண்டிருக்கலாம் ஆனால் நீங்கள் எனக்கு எப்படி உரிமையாக முடியும்! நீங்கள் பிறருடைய சொத்து-உலகத்தில் தனக்கு என்று இருப்பதை விட பிறர் சொத்தின்மேல் விருப்பமும் ஆசையும் கொள்வதே அதிகமாய் இருக்கிறது...இந்த வார்த்தை இருவருக்குமே பொது!" என்றாள் ஆவேசத்துடன்.

பெண்களின் உணர்ச்சி மிகுந்த வார்த்தைகளுக்குப் பழகியவன் போல விசுவம் அமைதியாக உட்கார்ந்திருந்தான் ஏதோ ஒன்றைத் தவிர சுசீலாவை விட இவள் பல அம்சங்களில் சிறந்தவள் என்று கூறமுடியாது. இவளைச் சமாளிப்பது அவனுக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. பானு அவனை அப்புறமாகஉட்காரும்படி கேட்டுக்கொண்டே தன் தலையணையை எடுத்துக் கீழே கிடந்த கவரை அவன் கையில் கொடுத்தாள்.

அந்த எழுத்தைக் கண்டதும் விசுவம் திடுக்கிட்டுப் போனான். சுவாமியின் கையெழுத்தல்லவா இது!

18

இரண்டு விஷயங்களைப் பற்றி விசுவம் மிகவும் தீவிரமாகச் சிந்தித்து வந்திருக்கிறான். நெடுநாள் பழகியும பானுமதியின் குணச் சித்திரம் அவன் மனசில் பதியாமலே இருந்து வந்திருக்கிறது. இவள் எப்படிப் பட்டவள்? நாகரீகம் முதிர்ந்த பெண்களைப் போல ஆரம்பத்தில் பழகினாள்...தோற்றத்திலும் ஒரு வரையறையைத் தாண்டவில்லையே தவிர நாகரீகத்தின் புதுமைச் சின்னங்கள் இருந்தன லஜ்ஜையற்றவள்போல உபசாரம் செய்தாள்; ஏற்றுக் கொண்டாள். விரும்பி அழைத்த இடத்துக்கு விருப்பத்துடனே வந்தாள்...ஆனால் நெருப்பின் தன்மை இவளிடத்தில் இருக்கிறது. இவள் பழமையும், புதுமையும் கலப்படமான ஒரு புது சிருஷ்டியோ? பணம் ஒன்றே குறியாக நிற்கும் ஒரு புது வர்க்கமோ? அப்படியும இல்லை! இவளுடைய உண்மை அந்தரங்கத்தின் லட்சியம் என்ன? தாயும மகளும். 'இனி வேறு வழியில்லை; யாரையாவது தனதுபண்ணிச் சார்ந்து இருந்து முன்னுக்கு வரவேண்டியதுதான்' என்று பேசி முடிவு கட்டிக்கொண்டு தன்னிடம் இவள் பழக, அவள் விட்டுச் சென்றிருக்கிறாளோ? இருக்கும்போலத் தோன்றியது தான் ஏமாந்தவனில்லை அதைப் புரிந்துகொள்ளாமலிருக்க! ஆனால் பானுமதி

யின் பச்சைக் கிளி போன்ற முகத்தைக் கண்டதும் தன்னிடம் இவள் ஏமாந்து வருகிருள் என்ற நினைப்பே உறுதிப்பட்டு வந்தது சுசீலாவின் சம்பந்தத்தை உதறிவிடவோ மேல் நாட்டினரைப்போலத் தொடர்பை அடியோடு அறுத்துக்கொண்டு விடவோ தன்னால் முடியாது என்பது அவனுக்கே தெரியும்? பின் ஏன் பானுமதியிடம் இவ்வளவு நெருங்கிப் பழகுகிறன்? உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவனுக்கு உயர்ந்த பண்பு இருக்க வேண்டும்! உயர்ந்த நோக்கம் இருக்கவேண்டும்! கிடைத்த வரையில் லாபம் என்ற முறையில் நடந்துகொள்வது சிறந்த மனிதனுக்கு அழகல்ல. ஆனால் அவன் ஏன் பானுமதியிடம் இவ்வளவு நெருங்கிப் பழகவேண்டும்? புரியவில்லை...புரியாமலும் இல்லை...தெளிவாகப் புரியவில்லை...ஒன்று!

இரண்டாவது இவள் எந்த அளவுக்குத் தைரியமாய் இருப்பாள்—எவ்வளவு தூரத்துக்குத் துணிவாள்! சமூகத்தையே எதிர்க்கும்படியான அவ்வளவு துணிவு இவளுக்கு உண்டா? சோதனைகள் நேர்ந்தால் தாங்கி நிற்கக்கூடிய துணிவு உண்டா? துணிவு இருந்தாலும் தன்னை வேண்டி எதிர்த்து நிற்க வேண்டுமே. ஒரே ஆதரவான தாயை விட்டுவிட்டு. தன் சுபிட்சமான எதிர்கால நம்பிக்கையையும் விட்டுவிட்டு என் காதல்தான் சிறநதது என்ற நம்பிக்கை இவளுக்கு இருக்கவேண்டுமே இருக்குமா? அதுவும் என்னிடம? அதுவும் புரியவில்லை...அடியோடு புரியவே இல்லை....

பானுமதி பேசும்போது இந்தச் சிந்தனைகள் மீண்டும் அவன் மனத்தில் தோன்றியவண்ணமே இருந்தன எதற்கும் தவறைச் செய்துவிட்டால் அதன் தீவிரத்திலிருந்து மீண்டு வருகிற உபாயம் தோன்றியே தீரும் என்ற நம்பிகையில் ஊறியவன் அவன் தவறு செய்வதற்குத்தான் முதலில் தைரியம் வேண்டும். அந்தத் தைரியத்தை எக்காரணம் கொண்டும் கைவிடக்கூடாது என்ற நிச்சய புத்தியுடன் அவளருகில் உட்கார்ந்தான். ஆனால் அந்தத் தைரியமனைத்தும் இந்தக் கவரைக் கையில் வாங்கியவுடன் பஞ்சாய்ப் பறந்துபோயிற்று.

சுவாமியின் கடிதம் விசித்திரமாய் ஆரம்பித்து விசித்திரமாய் முடிந்திருந்தது. மூச்சுவிடாமல் முதலிலிருந்து கடைசிவரையில் படித்தான். சாரம் இதுதான்: அண்ணு அவளிடம் நெருங்கிப் பழகும் விஷயம் பெற்றேர்களுக்கும் சரி, மன்னி முதலியவர்களுக்கும் சரி, தெரிந்து இருக்கிறது. இதில் நேர்மைப் பிசகு எதுவுமில்லை. ஆனால் உலக வாழ்க்கையில் ஒரு நியதி உண்டு வரம்பு மீறிப் போவது நியாயத்தை மீறிப் போவதற்குச் சமம். நியாயம் தவறும்போது நடத்தை—எண்ணம் முதலியன தவற அதிக நாள் ஆகாது பெரிய மனசு வைத்து, மன்னியின் கஷ்டத்தை உணர்ந்து,' இந்தக் குடும்பத்தின் நல்ல பெயர் நிலைக்கும்படி அண்ணுவைச் செய்யவேண்டியது பானுமதியின் பொறுப்பு! இது தான் கடிதத்தின் முக்கிய சாரம்! சுவாமியா இவ்வளவும் எழுதியிருக்கிறுன்?

சுவாமிக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? அந்தக் கடிதத்தில் சுசீலாவின் வாக்கியத்தின் அமைப்பு சிறிதும் இல்லை; ஆனால் அவளுடைய மனக் கருத்தின் சாரம் இருந்தது இவனுக்கு என்ன இவ்வளவு தைரியம்? எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்துவிட்டது? நேற்றய வாண்டுப் பயல்!

சுசீலாவின் கஷ்டத்தில் இவனுக்கு அக்கறை! விசுவத்துக்கு அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை. ஆனால் அவனுடைய அதிர்ச்சியில் இந்த எண்ணங்களோ உணர்ச்சிகளோ தலை தூக்க மறுத்து விட்டன! அவன் எல்லாவற்றையும் அறிவான்! அதைச் சமாளிக்கும்படியான தைரியம் அவனுக்கு எப்படியோ ஏற்படும்! இவ்வளவு நாளும் வெளியில் தெரியாமல் எவ்வளவு தவறுகள் செய்யவில்லை. அப்பொழுது இருந்த தைரியமும் உறுதியும் இன்றுமட்டும் அவனைக்கைவிடப் போகின்றனவா என்ன?

பானுமதி எப்பொழுதோ படுக்கையிலிருந்து எழுந்து போய்விடடாள். அவளைக் கூப்பிட அவனுக்குத் தைரியம் வரவில்லை. வெண்ணெய் வாங்கப் போன சமையற்காரி வந்துவிட்டாள்! சமயமும் தவறிவிட்டது...செய்வது புரியாமல் அவன் வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். அரை மணி நேரம் கழிந்த பின்பு சமையற்காரி அவன் உட்கார்ந்திருக்கும் இடம் வந்து, "சாப்பிட வருகிறீர்களா?" என்ருள்.

தூக்க நிலையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தவன் போல, "ம்– சாப்பிடவா? பானு எங்கே?..." என்ருன் விசுவம்.

பானுமதியின் குரல் வந்தது. "இதோ இங்கே இருக்கிறேன்...நீங்கள் சாப்பிட உட்காருங்கள். என் சாப்பாட்டை இங்கேயே போட்டு விடுவாள்."

பானுமதியின் முகத்தில் சோகத்தின் நடுவே ஒரு களையற்ற சிரிப்புத் தோன்றி மறைந்தது நீர் வற்றிய குளத்தின் சேற்று நீரிலே செந்தாமரை ஒன்று பூத்ததுபோல இருந்தது அந்தக் காட்சி. அவள் ஹாலைத் தாண்டிய உள்பக்கத்து அறையின் கதவுப் படியருகில் உட்கார்ந்திருந்தாள். அவள் அவனேடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட முடியாது என்பதை அவன் கண்டு கொண்டான். காரணத்தைத் தான் அந்தச் சிரிப்புச் சொல்கிறதே...

"அதோ, அவருக்கு எதிர்த்தாப்போலவே இலையைப் போடு...என் தட்டைக் கொண்டுவந்து இப்படி வை" என்ருள் பானு. அநதப் பேச்சிலே ஓர் அழுத்தம் இருந்தது. வெறுப்பில்லை; வேகம் இருந்தது. ஏதோ நடக்கவிருந்த அபாயம் விலகியதைப் போன்ற நிம்மதியிருந்தது; நிச்சயமும் இருந்தது...

வெறும் யந்திரத்தைப்போல விசுவம் சாப்பிட்டு முடித்தான். பானுவும் சாப்பிட்டு முடித்தாள். அசட்டுச் சிரிப்புடன், "நான் அந்தக் கடிதத்தை என்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறேன். தேடாதே" என்று சொல்லியவாறே முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

"எங்கே கிளம்புகிறீர்கள்? அவள் இன்றைக்கு வீட்டுக்குப் போகவேண்டும என்று சொல்லுகிருள். எனக்குத் துணை வேறே யார்?" என்ருள்,

விசுவம் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை திடீரென்று பானுமதியிடம் அநுதாபம் பெருகிவந்தது இன்றுமட்டுமல்ல; என்றென்றைக்குமே தன் துணையை நாடிநிற்பவள்போல அவள் அவன் கண்களுக்குத் தோன்றினுள். என்றென்றைக்குமே தன் துணையை யாசித்துக் கேட்பது போல அவள் வேண்டுகோள் ஒலித்தது. எது மனச்சாட்சி, எது சத்தியம், எது கடமை என்ற தெளிவேயில்லாத ஒரு குழப்பத்தில் அவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

'பீரோவைத் திறந்து புதுக் கம்பளிப் போர்வையை எடுத்துக்கொள்ளுங்கள். நான் போர்த்திக்கொண்டதை எடுத்து இங்கே போட்டுவிடுங்கள்" என்ருள் பானு, சற்றுத் தொலைவிலிருந்தே.

"நீ எங்கே படுத்துக் கொள்வாய்? இல்லாவிட்டால் ஒன்று செய்தால் என்ன? காரில் உட்கார்ந்துகொள் என் வீட்டுக்குப் போய்விடுவோம் எனக்கும் இதையெல்லாம் மாற்றிக் கொள்ளவேண்டாமா?" என்ருன்.

"ஏன், என் படுக்கை முள்ளாகக் குத்தும்போலிருக்கிறதா உங்களுக்கு?"

"சேச்சே!"

"பின்னே என்ன? இதுவும் வீடுதானே?"

"இது வீடு இல்லை. உன் தலை. சொன்னுல் புரிந்தால்தானே? நான் அத்தையிடம் கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. நடுச் சாமம் ஆனுலும் அவள் நான் வருவேன் என்று காத்திருப்பாள் சாப்பிடாமல்.. அப்படி இங்குதான் இருக்க வேண்டுமென்ருல் நான் போய் சொல்லிவிட்டாவது வந்துவிடுகிறேன்... உனக்கும் அங்கு வந்தால் துணையாக இருக்குமே என்று...' விசுவம் பேசிக்கொண்டே இருந்தான்.

பானுமதியின் சிரிப்பு அவன் பேச்சைத் தடை செய்தது.

"என்னை யாரென்று கேட்டால் என்ன சொல்வீர்களாம்?"

"ஏன்? என்..." விசுவத்துக்குமேலே சொல்வதற்கு யோசனையாகப் போய்விட்டது.

"புது ..என்ரு?" என்று பானுமதி கேட்டு அவனை மேலும் திகைக்கச் செய்தாள். விசுவம் அசட்டுச் சிரிப்புடன், "இதென்ன பேச்சு. நீ யார் என்பதைச் சொன்னுல் போகிறது" என்ருன்.

பானுவின் கண்களில் பரிகாசத்தின் அலை ஒன்று எழும்பியது. "இந்த மாதிரி விஷயங்களில் பெண்களின் பேச்சுக்குப் புருஷர்கள் மதிப்புக்காட்ட வேண்டும். பெண்கள் போட்டிக்கு உத்தியோகம் பார்க்க வருகிருர்களேயென்று புருஷர்கள் இதற்கெல்லாம் யோசனை சொல்லவந்தால்? அது கிடக்கட்டும்! இது நம் இரண்டு பேருக்குமே அவமானமில்லையா? சொல்லுங்களேன்!" என்று கேட்டாள் பானுமதி.

"சரி, சரி...பீரோ சாவி எங்கேயிருக்கிறது, சொல்! உன் அழகான வேலைக்காரி போய்விட்டாளா? பார்! எனக்கு நிம்மதியாகத் தூங்கவேண்டும்...நீ எங்கே படுத்துக்கொள்வாய்? உனக்குப் படுக்கை?

"ஒரு தலைகாணியும் அந்தப் பெட்ஷீட்டையும் மட்டும் இப்படி எடுத்துப் போடுங்கள். இப்படிக் கீழேயே படுத்துக்கொள்கிறேன்."

"வேறே கிரஸின் லைட் இல்லையா? இதை அணைத்துவிட்டு அதை ஏற்றி வைக்கலாமே!"

"வேண்டாம்; இதுவே எரிந்துவிட்டுப் போகட்டும்.

விசுவம் படுத்துக்கொண்டான். சற்று நேரம் பொறுத்து அவள் 'தூங்கி விட்டீர்களா?" என்று குரல் கொடுத்தாள்!

விசுவம் கண்களை மூடிக்கொண்டே சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான். காதால் கேட்டுக்கொண்டு பதில் சொல்லாமல் இருந்தான்.

பானுமதி பெருமூச்சுடன் புரண்டு படுக்கும் சப்தம் கேட்டது. நடுச் சாமம் இருக்கும். விசுவம் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்து "பானு! வீட்டுக்கே போய்விடலாமா? பானு" என்ருன்.

"பேசாமல் தூங்குங்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு" என்ருள் அவள்.

"அம்மா எழுதியிருந்தாள் என்ருயே, பொய் தானே? சுவாமி எழுதியிருந்ததைத் தானே சொன்னுய்?"

"ஆமாம்; தூங்குங்கள். எனக்குத் தூக்கமாய் வருகிறது!" என்ருள் பானு.

(தொடரும்)

அன்புள்ள கீதாவுக்கு!

13

காஞ்சனாவைப்பற்றிப் பலர் பல விதமாகச் சொல்கிறார்களாம். காஞ்சனாவின் தாயார் ஒரு பணக்காரர் குடும்பத்தில் பிறந்தவளாம். அவளுக்குக் கலியாணப்பேச்சு நடந்துகொண்டிருக்கையில் ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்ததாம். அதில் பார் விளையாட்டுக்கள் செய்த மோகன் என்ற பேர்வழியைக் கண்டு காஞ்சனாவின் தாயார் மட்டுமில்லை, அந்த பிராந்தியமே அப்படியே மயங்கிப் போய்விட்டதாம்: வெள்ளை வெளேரென்று கட்டுமஸ்தான சரீரம் அகன்ற மார்பு விசாலமான நெற்றி. பளிச்சென்ற கண்கள். கைகளிலும் கால்களிலும் சதைகள் குலுங்க அவன் நடந்து வரும்போது தம் தம் என்று ஆண் யானையொன்று நடந்து வருகிற மாதிரி இருக்குமாம். ஆட்டத்தைப் பார்ப்பதற்குக்கூட அவ்வளவு ஜனங்கள் வரமாட்டார்களாம். மோகனைப் பார்ப்பதற்காகவே பாதிபேர் வருவார்களாம்.

ஒரு நாள் சர்க்கஸுக்குப் போயிருந்த போது காஞ்சனாவினுடைய தாயாரின் கண்களும் மோகனுடைய கண்களும் திடீரென்று சந்தித்தனவாம். என்ன ரகசியம் பேசிக்கொண்டனவோ, மறுநாள் காலையில் எழுந்தால், காஞ்சனாவின் தாயாரை வீட்டில் காணவில்லையாம். சர்க்கஸ் கம்பெனியில் மோகனைக் காணவில்லையாம். காஞ்சனாவினுடைய தாயாரின் பெற்றோர்கள் எங்கெங்கோ தேடிப் பார்த்தார்களாம் ஒன்றும் பிரயோஜனமில்லையாம். இரண்டு பேரும் கல்கத்தா போய்ச் சேர்ந்தார்களாம். காஞ்சனாவின் தாயார் வீட்டைவிட்டுப்போகும் போது கொஞ்சம் நகைகளும் ரொக்கமும் கொண்டுபோயிருந்தாளாம் அது ஆகிறவரை மோகன் இவளுடன் இருந்தானாம். அது ஆனவுடனே இவளை நிராதரவாய் விட்டுவிட்டு வேறு யாரையோ 'சிநேகம்' செய்து கொண்டு போய்விட்டானாம் அப்பொழுது காஞ்சனா மூன்றுவயதுக் குழந்தையாம் அப்புறம் அங்கு இருக்கப்பிடிக்காமல் காஞ்சனாவின் தாயார் சென்னைக்கே வந்து தனியாக இருந்து வருகிறாளாம். இந்த மாதிரி ஒரு சாரார் சொல்கிறார்களாம்.

மற்றும் சிலர் சொல்கிறார்களாம். இவளுக்கு சினிமாவில் நடித்துப் பெயரும் புகழும் பெற வேண்டுமென்ற ஆசையுண்டாகி ஒரு படத்தில் நடிக்கப்போய் படமுதலாளியின பரிபூரண அன்புக்குப் பாத்திரமாகி அவனே கதி என்று இருந்துவிட்டாள் என்று. திடீரென்று முதலாளி திவாலாகி ஒருநாள் விஷத்தைச் சாப்பிட்டுவிட்டு அவரை நம்பியிருந்த எத்தனையோ பேரை நடுத்தெருவில் விட்டுவிட்டுப்போய் விட்டாராம். அவர்களில் இவளும் ஒருத்தியாம்.

நல்ல குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, இவளுடைய துர்நடத்தை பிடிக்காமல் இவளைத் தள்ளிவிட்டுக் கணவன் வேறு கல்யாணம் செய்துகொண்டுவிட்டானாம். தாலி கட்டின தோஷம் மாதாமாதம் ஜீவனாம்ச தொகை ஏதோ அனுப்பி வருகிறானாம். இந்த மாதிரி ஒரு தகவலாம்.

இன்னும் இவளைப்பற்றி இந்த மாதிரி கன்னா பின்னாவென்று எத்தனையோ பேர் எத்தனையோ விதமாகச் சொல்கிறார்களாம். மொத்தத்தில் நடத்தை சரியில்லையென்று தெரிகிறது.

இவளுக்குப் பந்துக்கள் என்று சொல்லிக்கொள்ள யாருமே இல்லையாம. காஞ்சனா ஒரே பெண்தானாம் இவளுடைய பிரபஞ்சமெல்லாம் அவள்தானாம். அவளுக்கு நல்ல படிப்பைச் சொல்லி வைத்து அவளையாவது நாலுபேர் முன்னிலையில் தலையெடுக்கும்படி செய்ய வேண்டுமென்பது இவளுடைய எண்ணமாம். அதற்காகவே எவ்வளவோ கஷ்டப்பட்டு காஞ்சனாவுக்கு படிப்பு சொல்லி வைத்துக் கொண்டிருந்தாளாம்.

காஞ்சனாவும் நன்றாகத்தான் படித்து வந்தாளாம். ரொம்பவும் அழகாக இருப்பாளாம். எந்த மாதிரி டிரெஸ் செய்துகொண்டாலும் அது அவளுக்குப் பொருத்தமாக இருக்குமாம்.

காஞ்சனா டிரெஸ் செய்து கொண்டு பீச்சுக்குக் கிளம்பினாளென்றால், திருவிழாவில் சுவாமிக்கு முன்னும் பின்னும் ஜனங்கள் போகிறமாதிரி பலர் போவார்களாம். ஏற்கெனவே விகாரந்தட்டியிருக்கும் அதுகளை மேலும் பைத்தியமடிப்பதற்காக தன்னுடைய அழகிய கருவிழிகளை ஒரு சுற்று சுற்றுவாளாம். அதுகளெல்லாம் மந்திர சக்தியால் கட்டுண்டதுகள்போல இந்த உலகத்தையே மறந்து, செய்வது இன்னதென்று தெரியாமல் அப்படியே சொக்கிப்போய் விடுங்களாம். எங்கே போகிறோம், என்ன பேசு

கிரேும் என்பதை மறந்து அதுகள் அசட்டுப் பிசட் டென்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசும பேச்சுக்களைக் கேட்டு காஞ்சனு மனதுககுள்ளாகவே 'இப்படிககூட வா அசடுகள் இருக்குங்கள்?' என்று சிரித்துக்கொள்வாளாம்.

நடக்கும்போது கால் கட்டை விரலையே பார்த்துக்கொண்டு செல்லமாட்டாளாம். அல்லது பார்க்கும் புருஷர்கள் மீது வைத்த கண்ணை எடுககாமல் பார்த்துக்கொண்டே இருக்கவும் மாட்டாளாம். காக்கை 'கா' என்றால் யாரோ ஒருத்தி கணவனைப் போய்ச் சேர்த்துக் கட்டிக்கொண்டாளாமே. அந்தமாதிரி 'பூதங்கி'த் தனமும் செய்யமாட்டாளாம். அதாவது வரம்பு மீறியும் போக மாட்டாளாம். சுத்த கட்டுப்பெட்டி என்று அலக்ஷ்யமாக இருந்துவிடவும்விட்மாட்டாளாம். பாம்பென்று மிதிககவும முடியாமல் பழுதையென்று தள்ளிவிடவும் முடியாமல் இவள் படுத்தி வைத்தபாடு, அந்த சாமர்த்தியம் எல்லோருக்குமே வந்துவிடாது என்றுதான் ஆச்சரியமாய்ச் சொல்லிககொண்டார்களாம்.

கோபாலன் பாவம். இவள் வீட்டுவாசல் வழியாக மோட்டார் சைகிளில் போன நடைக்கு கணக்கு வழக்கே கிடையாதாம் இத்தனை மணிக்கு இவள் மாடி மேல் நின்றுகொண்டிருப்பாள் இத்தனை மணிக்கு தெரு பக்கம் வருவாள். இத்தனை மணிக்கு கண்ணாடிக கெதிரில் நின்றுகொண்டு அலங்காரம் செய்துகொள்வாள். இத்தனை மணிககு பீச்சுக்குக் கிளம்புவாள் இதெல்லாம் கோபாலனுக்குத் தலைகீழ்ப் பாடமாம.

இந்தப் பசங்கள் 'ஆ' வென்று கொசு புகுவதுகூடத் தெரியாமல் வாயைப் பிளந்துகொண்டு அவளைப் பார்க்கும்போது, பதிலுக்கு அவள் தன்னுடைய அகன்ற விழிகளை விரித்து ஒரு பார்வை பார்ப்பாளாம். "என்னுடைய பிரபஞ்சமே நீதாண்டா அப்பா!' என்று கொஞ்சி வரவேற்கிற மாதிரி இருக்குமாம் அந்தப் பார்வை.

இதை நம்பி மறு நிமிஷமே ஏதாவது ஒரு சாக்கை' வைத்துககொண்டு இந்த 'அப்பாவிப் பசங்கள் அவளுடைய வீட்டிற்குச் சென்று அவளுடன் பேச்சு வார்த்தை கொடுத்துப் பார்க்குங்களாம், ஏதோ முன்பின் தெரியாத மூன்ருவது மனிதர்களுக்குப் பதில் சொல்கிறமாதிரி கேட்ட வரைக்கும் பதில்சொல்லி அனுப்பி விடுவாளாம் அப்பொழுது அவளுடைய பார்வையிலும் பேச்சிலும் காணப்படும உதாசீன பாவம் சற்று நேரத்துக்குமுன்பு நம்மை அவ்வளவு ஆதரவுடன் வரவேற்ற பேர்வழி 'இவள்தானு என்ற சந்தேகம் வந்துவிடுமாம் வெறும் அப்பாவிப் பசங்கள் என்று தெரிந்தால் அதுகளுடன் தானுக வேவலுவில் பேசி மீதி பசங்களை, 'இதென்ன புரிந்துகொள்ள வே முடியாத புதிராக இருக்கிறதே' என்று திக்கு முக்காடச் செய்து விடுவாளாம்.

இதனுல் அவள் யாரையுமே கிட்ட நெருங்கவிடவில்லையாக்கும் என்று நினைத்துவிடாதே. குறிப்பிட்ட ஒரு சிலருக்கு அவள் ஹிருதயத்தில் இடம் ஒதுக்கிவைத்திருந்தாளாம். ஆனுல் பிறர் அதை அறிந்துகொள்ளமுடியாத வகையில் அவ்வளவு ஜாககிரதையாக நடந்து கொண்டாளாம்.



அந்தமாதிரி ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தை அலங்கரிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்களில் கோபாலனும் ஒருவனும்.

ஆனுல் கோபாலனிடம் முதலிலேயே ஒரு நிபந்தனை போட்டு விட்டாளாம். 'நான் என்னவோ உன்னைத் தவிர வேறு யாரையும் இனி ஸ்வப்பனத்தில்கூட நினைக்கப் போகிறதில்லை. இதில் சந்தேகத்துக்கே இடமில்லை ஆனுல் படிப்புமுடிகிறவரை நம்மிடையே இந்தமாதிரியான ஒரு சினேகம், இருப்பதாகப் பிறருக்குத் தெரியவேகூடாது என்று சொல்லிவிட்டாளாம் கோபாலனும் சரி என்று ஒப்புக்கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடந்து வந்தானும.

இதன் மத்தியில் கோபாலன் அவளுக்குப பண்டமாகவும், பணமாகவும, செலுத்திய காணிக்கைக்குக் கணக்கு வழக்கே கிடையாதாம். விதம்விதமான சேலைகள், ஜாக்கெட்டுகள் தைலங்கள் பவுடர்கள், ஸ்னேக்கள், வாங்கிக் கொடுத்தபடிதானும் சினிமா, டிராமா, சங்கீதக் கச்சேரிகளுக்கு ரிஸர்வு டிக்கெட்டுகள் வாங்கி முன்னதாகவே அனுப்பி வைத்து விடுவானும் 'எதற்கு இவ்வளவு வீண் செலவு செய்கிறீர்கள்?' என்று அவளே சில சமயங்களில் மனச்சாட்சி தாளாமல் அலுத்துக் கொள்வாளாம.

இந்த மாதிரி இரண்டு பேரும் காதற்கடலில் கொஞ்ச நாட்கள் உல்லாசப் பிரயாணம செய்து கொண்டிருந்தார்களாம்.

ஒருநாள் எதிர்பாராத விதமாய் ஏதோ அவசர வேலையாக கோபாலன். காஞ்சனுவின் வீடடுக்குப் போயிருந்தானும் அப்பொழுது காஞ்சனு வீட்டில் இல்லையாம்.

அவளுடைய தாயார் மாத்திரம்தான் இருந்தாளாம். காஞ்சனாவின் தாயார் சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தாளாம் கூடத்தில் மேஜைமீது இருந்த ஒரு கடிதம் கோபாலன் கண்ணில் பட்டதாம் உடனே அவன் அதை எடுத்துப் பார்த்தானும்.



ஆசைக்கினிய காஞ்சனாவுக்கு!

இன்று மாலை 4 மணிக்கு.....ல் உன்னை எதிர் பார்க்கிறேன் அவசியம் தவறாமல் வந்து சேரவும். சாக்குப் போக்குகள் சொல்லி நின்றுவிடக் கூடாது மற்றவை நேரில்.

இப்படிக்கு
உன் பிரியன்,

ரங்கராஜன்.

—என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்ததாம்.

அவ்வளவுதான் 'என்ன? எங்கே வந்தாய்? அவசரமாகப் போய் விடுகிறாயே? காஞ்சனா இப்பொழுதுதான் அவளுடைய சிநேகிதி ஒருத்தி வந்து கூப்பிட்டாள் அவளுடன் போயிருக்கிறாள் என்ன சமாசாரம்?' என்று சமையலறையிலிருந்து காஞ்சனாவின் தாயார் கேட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்தாளாம்.

கோபாலன் பதிலே சொல்லாமல் திரும்பிக்கூடப் பார்க்காமல் 'விர்' ரென்று போய்விட்டானும்.

'அடேயப்பா! இந்தப் பெண்களின் சாகஸம்தான் என்ன!' என்ற கோபம் அவனுக்கு அப்பொழுது கட்டுககடங்காமல் வந்திருக்குமல்லவா?

'ஆமாம்! வஸந்தாவின் வீட்டிலேயே முக்கால்வாசிப் பொழுதும். மீதி வேளைக்குக் காஞ்சனாவின் வீடு. இதன் மத்தியில் வகுப்பில் பத்மஜாவுக்குக காதல் கடிதம்! இதை எந்த நியாயத்துடன் சேர்ப்பது என்று கேட்கிறாயா?

எனக்கும அதுதான் விளங்கவே மாட்டேனென்கிறது!

உலகத்திலே யாருக்கும் தன்னுடைய தப்பு தெரியாது. பிறத்தியார் தப்புதான் தெரியும் என்று சொல்கிறார்களே, அந்த நியாயத்தைச் சேர்ந்ததோ என்னவோ?

உடனே கோபாலன் காஞ்சனாவுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினானும். 'இது ஏதோ விபரீதத்தில் முடியப் போகிறது' என்று காஞ்சனாவுக்கு ஓர் இறுதிக் கடிதம் எழுதியிருந்தான் என்று முன் கடிதத்தில் எழுதியிருந்தேனல்லவா? அதுதான் இந்தக் கடிதம்.

முதல் நாள் கோபாலன் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறான். மறுநாள் காஞ்சனா கொலைசெய்யப்பட்டிருக்கிறாள் இந்தக் கடிதம்தான் போலீஸார் கையில் அகப்பட்டிருக்கிறது.

போலீஸார் தன்னைத் தேடும் தகவல் தெரிந்து கோபாலன் தலை மறைந்து விட்டான்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்கிற மாதிரி மேலே மேலே விசித்திரமான தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அவசரப்படாதே.

இப்படிக்கு உன் அன்புள்ள,

ரமா.

நாமொன்று நினைக்க...!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எல்

சௌ. காந்திமதி சௌ. செல்லம் இவர்களின் விவாக தினமாகிற வெள்ளிக்கிழமைக்கு முதல் நாள் முதற்கொண்டே மேல மாம்பலம் அலங்கார சோபிதமாயிருந்தது

பட்டுப்புடவைகள் உடுத்தி, வைர நகைகள் பூண்டு வாசனைகள் பூசி புஷ்பம் தரித்து தாம்பூலச் சிவப்புடன் விளங்கும் அதரங்களில் புன் சிரிப்புத்தவழக் கையில் வெள்ளிக் கிண்ணி சிமிழிகள் ஏந்தி ஊருக்குக் கல்யாணம் சொல்லும் பெண்கள் தெருவில் தோகை விரித்த மயில்கள் போல்நடந்துவரும்காட்சி அமோகமாயிருந்தது.

வீட்டுக்கு வீடு பெண்கள் மறுநாள் கட்டிக்கொள்ளவேண்டிய புடவைகளைப் பொறுக்கி எடுப்பதிலும் அவைகளுக்கு ஏற்ற ரவிக்கைகளை ஓதுதுப்பார்த்துச் சேர்த்துவைப்பதிலும் அதிக நேரத்தைச் செலவு செய்தார்கள்

யுவ புருஷர்கள் அப்படியே அங்கவஸ்திரம் ஷர்ட்டுகளைத் தீர்மானித்துத் தனியே எடுத்து வைத்தார்கள்,

சாப்பாட்டு ரஸிகர்கள், சமயநூர் சாமினுதன்தான் ஸெட்டுடன் வந்திருக்கிருன் சாப்பாடு "ஸ்பெஷாலிடி" என்பதில் சந்தேகமில்லை" என்று உத்சாகத்தினுல் குதித்தார்கள்.

ஸங்கீத ரஸிகர்கள், நாயனுபுரம் "பிரதர்ஸ்" நாகஸ்வரகோஷ்டி, மாப்பிள்ளை அழைக்கவே வந்து சோந்துவிட்டதை விசாரித்தறிந்து குதூகலத்துடன் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டார்கள்.

கச்சேரிப் பிரஸ்தாபங்களில் மஹாவித்வான்கள் விச்வனுதபுரம் மஹாராஜப்பையர் (மூன்று ராஜப்பையர்களுக்குள் "மஹா" பட்டம் பெற்றவர்) கூடலூர் மணி பாகவதர். ரத்னுகாம் லக்ஷ்மணையங்கார் ஸங்கீத ஜீவன்ராவ் இவர்களின் பெயர்கள் நடமாடின.

வைதிகர்கள், "ஐயர் நன்ருய்ச் செலவுசெய்ய திட்டம் போட்டிருப்பதாய் கேள்வி' என்று தங்கள் ஸபை அங்கத்தினர்களுக்குள் ஆசீர் வசனங்களுடன் புகழைப் பரப்பினர்.

பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோருக்கும் வேங்கிட சுப்பையர் அகத்துக் கல்யாணமே பேச்சாக விருந்தது

சிவராமன், வேங்கிடசுப்பையர் இவர்கள் முறையே சியாமளாம்பாபுரம் பிரபுவும், மாப்பிள்ளையும் ஆனதால் மேற்படி கிராமத்திலிருந்து ஒரு பெரிய கோஷ்டி வந்து இறங்கியது அதில் நாம் அறிந்த சீனு வாத்தியார், சேஷு சாஸ்திரிகள். மணி சாஸ்திரிகள், ஜோஸ்யம் ராகவ அய்யங்கார், அய்யாப்பயல் இவர்களின் வரவைப் பிரத்யேகமாய் நாம் குறிப்பிடுவது தகும்.

சம்பந்திகள் வந்தார்கள். நாகபூர் சம்பந்தி வந்து இறங்கினது தேவேந்திரன் தேவதைகள், தேவ ரிஷிகள். தேவ ஸ்திரீகள் இவர்களுடன் விமானங்களில் வந்து இறங்கினது போல் இருந்தது.

முத்துசாமியுடன் வந்தவர்கள் சிலரே. அவர்கள் ஐயர் பங்களாவுக்கு அடுத்த பங்களாவில் ஒரு பாகத்தில் இறக்கப்பட்டார்கள்.

மாப்பிள்ளை அழைப்பின்போது ஜகன்னுத்துடன் முத்துஸ்வாமியை ஓத்துப்பார்த்த ஜனங்கள் ஒருமனதான அபிப்பிராயத்தைக் கொடுக்கவில்லை. எதிலும் நவீனம், புராதனம் என்று இரண்டு உண்டல்லவா! ஒன்றைப் புகழ்கிறவர்கள் மற்றென்றை இகழ்வது வழக்கம். அநேகமாய் கக்ஷி புரிகிறவர்கள் பக்ஷபாதமுடையவர்களாயிருப்பார்கள் பக்ஷபாதத்தினுல் குணதோஷங்களை உண்மையான மனதுடன் விசாரிப்பதில்லை. இதனுல தோஷத்தை சிலாகிப்பதும் குணத்தை நிந்திப்பதும் ஏற்பட்டுவிடுகிறது. அநீதி பிறக்கிறது. தத்துவ சோதனையில் ஊக்கமுள்ள பெரியவர்கள் பக்ஷபாதமற்ற மனதுடன் ஒவ்வொன்றையும் பரீக்ஷித்துப் பார்த்துப், பழயது, புதியது என்பதற்காகக் கண்மூடித்தனமாய் ஒரு தீர்மானம் செய்யாமல் கக்ஷிப்பிரிவுகளில் மடடமான புத்தியுடன் மாட்டிக்கொள்ளாமல் உண்மையான குணதோஷங்களை விளக்கி நன்மையைப் போற்றித் தீமையைத் தவிர்க்கின்றனர். இதையே ஸ்ரீ காளிதாஸகவியும் கூறுகிருர்.

வெளித்தோற்றத்தையே மதிப்பிடும் ஸ்தூல திருஷ்டிகள் அலங்காரத்திற்குத்தான் முதல் பரிசு அளிப்பார்கள். வஸ்த்ரேண. வபுஷா, வாசா, வித்யயா. வினயேன ச" என்ற கிரமப்படி முதலில் வஸ்திரம் அல்லது "டிரஸ்" கௌரவிக்கப்படுகிறது. பின்னர். உருவம், ஒய்யாரம்; அடுத்தபடியாகப் பேச்சுத்திறமை. இவைகள் மூன்றையும் யாரும் கண்டு முதலில் பிரமித்துவிடுவார்கள். வித்யையின் தராதரத்தை சிலரே மதிப்பிட முடியுமாதலால் கௌரவிக்கப்படும் வரிசையில் அது நான்காவது ஸ்தானத்தைப் பெறுகிறது கடைசியாக உள்ள 'வினயம்' தான் உண்மையாக கௌரவத்திற்குப் பாத்திரமாக வேண்டியது ஆனுல் அதைப் பார்த்தமாத்திரத்தில் அறிந்துவிட முடியாது. நன்கு ஆராய்ந்துதான் அறிய வேண்டும். அப்படி ஆராய்பவரும், அறிந்து கொள்பவரும் அரிது. ஆனுல் வித்யையின் பலன் வினயம் "வித்யா ததாதி வினயம்" என்று மற்றொரு சுலோகம் இதைச் சொல்லுகிறது வினயத்தை உண்டுபண்ணுத வித்யை தன் பலனை அடையாததோடு விபரீதத்தையும விளைவிக்கும் இபபடியெல்லாம் சூக்ஷ்மமான விசாரம் செய்வது ஸாமான்யருக்குச் சாத்யமாகாது அதன் ஆராய்ச்சி வெளித் தோற்றததுடன் நின்றுவிடுகிறது. அந்த மோகத்திலிருந்து வெளிச்சததை அடையவேண்டுமானுல் மஹான்களின் வாக்யங்களை வழிகாட்டிகளாய் அங்கீகரித்துப்பின் பற்ற வேண்டும். ஆனுல் இருளே

பழக்கமாகி விட்டால் வெளிச்சத்தைத் தேடும் நினைவே ஒழிந்துவிடும் அத்தகைய மாந்தர் தனி உணர்ச்சியைப் பெருமல் பொது உணர்ச்சியிலேயே ஆட்டு மந்தைபோல் ஊர்ந்து செல்லுகின்றனர்

ஆகையால், அக் கூட்டத்தில் பெரும்பாலோர் மதிப்பு ஜகன்னுத் பேரில் பெருகியது அவன் முகத்தில் உதயோகக்களை ஒளி வீசியது பருத்த மூக்கும் கரைந்த கன்னங்களும், தடித்த உதடுகளும் கனத்து முன் வந்த தாவாக்கட்டையும், விழித்த பார்வையும் மேடிட்ட நெற்றியும், சிறு வளையமிட்ட காதுகளும், நீண்ட கழுத்தும், மெலிந்து நீண்ட உடலும் மங்கிய மழமழப்பான செம்மேனியும், உயர்ந்த முழங்கால்களும், விரிந்தபாதங்களும் ஜகன்னுத்தின் அங்க லக்ஷணங்கள் அவற்றை, இடைவிடாமல் சீவிச் செப்பனிடப்பட்ட தலைகிராப்பும், அழகிய வரம்பிட்ட மூக்குக்கண்ணுடியும் தொங்கும் அங்கியும், தழைந்த தொடை உடையும், கனத்த கால் பூட்ஸூம். கண்ணிய நிலைக்கு உரித்தானவையாக்கின.

அவன் பக்கத்தில் வீற்றிருந்த முத்துஸ்வாமி இவற்றிற்கு முற்றிலும் மாருன அங்க லக்ஷணமுடையவன் நுனியில் சற்று வளைந்த உன்னத நாசியும், சதைப் பற்றுள்ள கன்னங்களும் இதழ் போன்ற உதடுகளும். சீரான தாவாக்கட்டையும், அரை வாசி மூடிய கண்களும். அகண்டு பின் செல்லும் நெற்றியும், பெரிய வளையமிட்ட காதுகளும், சங்குபோன்ற கழுத்தும், அதிகப் பருமனும் உயரமுமில்லாத காத்ரமும் எழில் பொழியும் சுவர்ணச் சாயையும், பதிந்த, பொருத்தமான முழங்கால்களும், பத்மம்போன்ற பாதமும் அவனுடைய அங்க லக்ஷணங்கள் அவற்றை அடர்ந்த, தலை நிறைந்த, கரிய குழல் முடிப்பும், நெற்றிச் சந்தனரேகையும், கழுத்தைச்சுற்றி மாலைபோல் அணியப்பட்ட புதிய ஜரிகை துப்பட்டாவும், அரையில் பாதம் வரையில் தழைய தரித்த சேலம் வேஷ்டியும், காலில் மாட்டிய லேசான செருப்பு ஜோடியும், அவன் சோபையை எடுத்துக் காட்டின

பர்வத சிகரம்போல் ஒய்யாரமாயும் உறுதியுடனும் வீற்றிருந்த ஜகன்னுத்தின் அருகில் சாதம் நிறைந்த முத்துஸ்வாமியின் முகம் முழுமதிபோல் பிரகாசித்தது. ஐச்வர்ய லக்ஷ்மி ஜகன்னுத்தின் முகக்களையில் ஜ்வலித்தாளேயாளுல் முத்துஸ்வாமியின் முகக்களையில் வித்யா தேவதையின் விகாஸ லக்ஷ்மீ தாண்டவமாடினுள். ஆனல் உலகம் கவிதையின் கண்ணுெளியைப் பெருதாகையால் வெவ்வேறு வித பிரமைக்கு உள்ளாகிறது அங்கு நின்ற ஆடவர்களில் பலர், முத்துஸ்வாமியைக் கண்காக்ஷிசாலைக்கு அனுபபலாமென்றும், பொழுது விடிந்ததும் விவாஹத்திற்குப் பூர்வாங்கமான "வபன"த்தின்போது அவனுக்கு ரங்கூன் கிராப்பைவைத்துவிடும்படி ரகசியமாய் சிகையலங்காரியிடம் சொல்லிவைக்க வேண்டுமென்றும், அவன் பிதுரார்ஜிதமான முத்துக் கடுக்கனை ஏலத்தில் விட்டால் ஐந்து ரூபாய்க்கு யாரும் சீந்தமாட்டார்கள் என்றும். மூக்குக்குத்திய மாடானதால் அவனை கயிறுபோட்டு இழுக்கச் செல்லத்திற்குச் சௌகரியமாயிருக்கும் என்றும் அவன் அயன் ஸ்திரீ பார்ட்டுக்கு லாயக்கானவனென்றும், அவனைப் பார்த்தால் பிருஹன்னளை வேஷத்தில் அர்ஜுனனைப் பார்ப்பதுபோலிருக்கிறதென்றும் இன்னும் பலவிதமாயும் பரிகாசமாய் பேசிக்கொண்டு பொழுது போக்கினுர்கள்

பெண்களில் பலர் ஜகன்னுத்தைப் பற்றி அவ்வண்ணமே பரிகாசப் பேச்சுக்கள் பேச விரும்பினுலும், பணக்கார உறவினர்களின் காதில் விழுந்துவிட்டால் என்ன செய்கிறது என்று பயந்து ரகசிய ஜாடைகளினுலேயே தங்கள் விமர்சங்களை வெளியிட்டுக்கொண்டார்கள்.

'காந்திமதி அகமுடையான் நிறம் எப்படி?'' என்ருள் சந்திரா.

"எண்ணெய் தடவிய பயறு போன்று பளபளப்பானது'' என்ருள் பதிலுக்கு விமலா.

'மூக்குத்தான் மாப்பிள்ளை முகத்தை மறைக்கிறது'' என்ருள் இந்திரா.

'திருவாடுதுறை நந்திபோல்'' என்றுஓடடிச்சொன்னுள் மனோரமா

"நெற்றி எப்படி'' என்ருள் பத்மினி.

முனிஸிபாலிடிக்கு எங்க்ரோச்மெண்டு வரி செலுத்தும் குறடு போல்'' என்று பதிலுரைத்தாள் முத்து மீனுக்ஷி

"காந்திமதி அகமுடையான் பக்கத்தில் செல்லத்தின் அகமுடையான் உடகாந்திருப்பதைப் பார்த்தால் இது மாபபிள்ளை அழைப்பா? அல்லது நாலாவது நாள் ஊர்வலமா? என்று சநதேகமாயிருக்கிறது'' என்ருள் மஞ்சுளா

அதைக் கேடடுப் பெண்களெல்லாம சிரிப்பை மறைத்துககொண்டு சிரித்தார்கள்

"இருந்தாலும் செல்லம் முதல் பிரைஸ் தடடிவிட்டாள்'' என்ருள் மாலதி

'உனக்கும் கூடிய சீக்கிரம் அப்படியே கிடைககும், ஏங்கிப் போகாதே!'' என்ருள் ஸுசீலா, அவளை முழங்கையால் இடித்துக் கொண்டு.

இப்படி உல்லாசமாய் ஸல்லாபம் செய்துகொண்டு வழி நடந்தார்கள் பெண்கள்.

ஆண்களின் பகுத்தறிவிற்குப் பெண்களின் இயற்கை அறிவு மேன்பட்டது. இதையேதான் மேற்குறித்த சம்பாஷணைகள் விளக்குகின்றன.

மறுநாள் நடந்த விவாக மகோத்ஸவத்தின் விமர்சைகளை வருணிக்கத் தேவையில்லை எல்லாம் வழக்கம்போல்தான் ஆனல் ருசிகரமான சில அம்சங்களைமட்டும் தள்ளிவிட முடியாது.

மாலையிடும்போது மாமா சிவராமன் தோளில் வாகனமேறிய காந்திமதி தன்னை எதிர்நோக்கி மாலையும் கையுமாய் மற்ருெரு உயர்ந்த வாகனத்தில் ஏறிக்கொண்டு விரைந்து வரும் நாயகனை ஆவலுடன் கடாக்ஷித்தாள்.

புகைப்படம்பிடிப்பவன் விசையை இழுத்ததும் "லென்ஸ்'' ஆகிற கண் திறந்து மூடுவதுபோல் அவளுடைய கண் திறந்து மூடியது உள்ளே பிடிபட்டச் சாயையை 'டெவலப்'' செய்யக் காந்திமதி சிரத்தைஎடுத்துக் கொள்ளவில்லை சற்று கனத்துத் தொய்யத் துவளும் அவளுடைய கடாக்ஷ ரேகை பக்கத்தில் செல்லம் போடும் மாலையைத் தலை வணங்கி ஏற்றுக்கொள்ளும் முத்துஸ்வாமியின் முகத்தை நாடியது பின்பு காந்திமதி கண் என்னும் கருவியை உபயோகப்படுத்தவே மறந்துவிட்டாள் என்று சொல்லலாம். விவாகம் நடந்ததே அவளுக்கு ஸ்வப்னமாயிருந்தது. உபாத்தியாயர் தன்னை எழுப்பிக் கூறும் வார்த்தைகளை ஒரு யந்திரப் பதுமைபோல் அவள் அனுசரித்து வந்தாள்

செல்லமோ "டார்ச்சு'' லைட்டைப் போடுவதுபோல் தன் முழு பார்வையினுல் முத்துசாமியை அடிக்கடி கவனித்து வந்தாள் வாத்தியாருடன் போட்டிபோடுபவன்போல் அவன் சிரத்தையுடன் திடமாய் உச்சரித்து வந்த மந்திரங்களை ஒரு அக்ஷரம் விடாமல் அவள் காதில வாங்கிக் கொண்டாள் ஹோமம் முதலிய கிரியைகளில் அவன் ஈடுபட்டிருக்கும் போது அவனுடைய காரியங்களைத் தானும் கூடச் செய்பவள்போல் மானஸிகமாய அனுசரித்து வந்தாள். பக்கத்திலிருப்பவர்கள் பரிகாஸத்திற்கெல்லாம் அவன் சிரிக்காவிட்டாலும் தான் சிரித்து உத்சாகமளித்தாள். தம்பதிகள் ஒருவருக்கொருவர் கையைப் பிடித்துககொள்ள வேண்டுமென்று உபாத்தியாயா சொல்லும் போது விரலைமட்டும் நீட்டாமல்

முத்துசாமி கையில் தன் முழுக் கையைக் கொடுத்தான் நெருங்கி உட்காரும்படி உபாத்தியாயர் உத்திரவிட்ட போது அது தனக்குத்தான் என்று ஏற்றுக்கொண்டு அப்படியே பிரியத்துடன் அனுஷ்டித்தாள் ஒரு தரம் எழுந்திருந்து உட்காரும்போது உபாத்தியாயர் உத்திரவுக்கு முன்னேயே செல்லம் நெருங்கி உடகார்ந்ததில் முத்துசுவாமி அக்னிக்கு நேரில் உட்கார முடியாமல் வடக்கே தள்ளி உட்காரும்படி ஆகிவிட்டது வாத்தியார் கொஞ்சம் தெற்கே தள்ளி உட்காரும்படி அவளுக்குச் சொல்லவேண்டியதாயிற்று இதைக் கவனித்துக்கொணடிருந்த ஒரு "அம்மாமி" செல்லம் இப்போதே ஆத்துக்காரர் மடியில் உட்கார்ந்து விடுவாய் போலிருக்கிறது" என்று சொல்லிப்பக்கத்திலிருந்தவர்களை நகைக்கச் செய்தாள். செல்லம் இதைக்காதில் கேட்டுக்கொண்டும் கோபித்துக்கொள்ளவில்லை அவளும் சிரிபபவர்களுடன் சிரித்துக்கொண்டாள் அபபோது ஒரு பெண் "கிளாஸ்மேட் தானே?" என்று சொன்னது முத்துசாமி காதில் விழுந்தது அவன் சொன்னவளை ஒரு கடைக்கண்ணால் ஆராய்ந்தான் அதை வெகுமானமாக அவள் நினைத்துக்கொண்டாள்

ஸாயங்காலம் நலங்கு இடும்போது ஒரு கேலிக்கூத்து நடந்தது. மதுரப்பாடடியின் ஆத்துக்காரர் கல்யாணத்திற்கு வந்திருந்தார் அவர் மயிலாபபூரில ஒரு கனவான் வீட்டில் வெகுகாலமாய் வேலைசெய்துகொண்டுவந்தார். அவர் பெயர் கல்யாணராம அய்யர் வயது எழுபதுக்குக் குறையாது அதில் திடசரீரம். இபபோதும் அண்டாவை ஒரு மூச்சில் புரட்டுவார் உத்சாக புருஷர் யாரோ காலையில் தலையில் சுற்றிய புஷ்பத்தை நரை மயிரில் கழன்று விடாமல்ஸாயங்காலம்வரையில்பாதுகாத்து வந்தார். சிவராமன் நலங்கு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கல்யாணராமஅய்யரைக் குதூகலத்துடன் அழைத்தார்— என்ன கல்யாணராமஅய்யர்! குழந்தைகள் நலங்கு இடும்வழிதெரியாமலும் சங்கோசத்தினாலும் திக்குமுக்காடுகிறார்கள் வீண் காலதாமதமாகிறது பெரியவர்கள் குழந்தைகளுக்கு வழி காண்பித்தால் நன்றாயிருக்கும் என்னசொல்கிறீர்? பக்கத்தில் ஒரு பட்டுப்பாய் விரிக்கச் சொல்லுகிறேன் நீர் உடகாருவதாயிருந்தால் உமக்கு ஒரு ஜோடி மாப்பிள்ளை வேஷ்டியும் மதுர அம்மாமிக்குப் பட்டுபபுடவை ரவிக்கையும் இதோ 'ஸாங்கிஷன்" செய்கிறேன் கல்யாண வேடிக்கைதானே! ஏன்? சங்கோசமாயிருக்கோ?" என்று வெகுண்டையாக ஆரம்பித்தார். அங்கிருந்தவர்கள் பூராவாக மிக்கக் குதூகலத்துடன் சிவராமனின் பிரேரணையை ஆமோதித்தார்கள். கிழவரும் "சங்கோசமென்ன? எனக்கு ஆக்ஷேபணையில்லை நான் ரெடி!' என்று பதில சொலலிக்கொண்டு ஒருதரம் எம்பிக் குதித்தார் அப்போது அவர், தான் பதினாலு வயது யுவனாகி விட்டதை நிரூபித்தார்போலும். தாழ்வாரம், முற்றம், கூடம் முழுவதும் இருந்த பெண்டுகள் புருஷர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். ஒரு சிறு பெண்கள் கோஷ்டி உடனே மதுரப்பாடடியிடம் சென்று பாட்டியை வட்டமிட்டுக்கொண்டு நலங்குக்கு எழுந்திருக்கும்படி கூப்பிட்டுக் கைகொட்டிச் சிரித்தார்கள். உத்சாக வெள்ளம் அளவு கடந்து பெருகியது சிவராமன் சம்சாரம் மீனாமட்டும் 'இந்தக் கேலிக்கூத்தெல்லாம்தான் இவருக்குப் பிடிக்குமே" என்று சற்றுச் சலிப்புடன் முணுமுணுத்தாள்.

மதுரப்பாட்டி 'போங்கோடி போங்கள்! உங்களுக்கு வேலையில்லை! என்று முகத்தைத்திருப்பிக்கொண்டாள் அதற்குள் ஒரு பெண் சிவராமனிடம், 'ஆத்துக்காரர் வந்து நலங்குக்கு அழைக்கவேண்டுமாம், அப்போதுதான் பாட்டி எழுந்திருப்பாளாம்" என்று செய்தி சொன்னாள். இதைக் கேட்ட கிழவர் "அது எப்படி முடியும்? எல்லாம் சம்பிரதாயப்படி நடக்கட்டும். பெண்தான் பிள்ளையைப் பாட்டுச்சொல்லி நலங்குக்கு அழைப்பது வழக்கம்' என்று கர்ஜித்தார் "என்ன பாட்டு தாத்தா!" என்று கேட்டாள் ஒரு சிறுமி உடனே தாத்தா "நலுநநு லேசிராரா, நந்தகுமாரா" என்று வணக்கத்தையும் லஜ்ஜையையும் அபிநயித்துக்கொண்டு ஒரு பெண் பாடுவதுபோல் பச்சைக்கிளி கூவும் த்வனியில் பாட ஆரம்பித்துவிட்டார் சிரிப்பு தீபாவளிப் பட்டாசுபோல் இடைவிடாமல் வீடெல்லாம் எதிர் ஒலி கேட்கும்படி வெடித்தது சிவராமன். "ஒன்ஸ் மோர்" என்று சத்தம்போட்டார் இந்தச் சந்தடிகளில் செல்லம் முத்துசுவாமியைப் பார்த்துச் சிரிப்பை அடக்கமுடியாதவள்போல் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். முத்துசாமியும் மந்தஹாஸ வதனத்துடன் விநோதங்களை அனுபவித்து வந்தான்.

காந்திமதியும் சிரிக்காமலில்லை ஆனால் அவள் சிரிப்பு சந்தேகத்துடனும். ஹ்ருதயத்தில் ஒட்டாததாயுமிருந்தது, ஏனெனில் ஜகன்னாத், "பார் இந்த முட்டாள்களை" என்று சொல்லுவதுபோல் அவளை நோக்கிச் சிரித்தானே ஒழிய விநோதங்களை அனுபவிக்கும் ரீதியில் சிரிக்கவில்லை

ஜகன்னாத்துக்கு இந்த விளையாட்டுகள் திருப்தி அளிக்கவில்லைபோலும். கீழ்த்தரத்தவர்களின் விகட விநோதங்களில் மேல்த்தரத்தவர்கள் கலந்துகொள்வது மதிப்பிற்கேற்றதில்லை என்று எண்ணினான்போலும்.

இந்த அமர்க்களங்களுக்கு நடுவே உபாத்தியாயர் புகுந்து "இப்படிப் பொழுது போக்கிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நலங்குக்குப் பிறகு காரியங்கள் இல்லையா? ஹூம்! ஹூம் சீக்கிரம் ஆகட்டும்" என்று வெருட்டினார் சில புருஷர்கள், பாடுகிறவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள் அவர்களைப் பாடச் செய்தாலும் கேட்கலாம்' என்று ஞாபகப்படுத்தினார்கள் அதற்குமேல் நலங்கு நடந்தது அதில் உஷாவின் பாட்டு கவர்ச்சிகரமான ஒரு அம்சம்.

கல்யாணத்தில் வேறு குறிப்பிடக் கூடிய விசேஷமில்லை

அய்யாப் பயல்மட்டும் பக்ஷணங்களை நினைத்தபோதெல்லாம் அளவுக்கு மிஞ்சித் தின்றுவிட்டு வாந்தியும் சுரமுமாகக் கிடந்தான் சீனு வாத்தியார் அவனால் ஏற்பட்ட கவலையினால் சற்று உத்சாகம் குன்றி கிலேசப்பட்டுக்கொண்டார்.

முத்துசாமிக்கு வைரக் கடுக்கன் கல்யாணப் பரிசாக அளிக்கப்பட்டது மாப்பிள்ளை அலங்காரத்தில் அவனைப்பார்த்தால் திருஷ்டியாய்ப் போய்விடும்போலிருந்தது. முத்துசாமியின் தாயார் கண்குளிர அந்தக் காக்ஷியைப் பார்த்தாள். ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தாள் செல்லத்தைத் தன் வயிற்றில் பிறந்த பெண்ணைப்போல அபிமானித்தாள் தழுவி முத்தமிட்டுக்கொண்டாள் மஹா ஆசார சீலரான. உத்தமரான தன் பர்த்தாவின் அனுக்ரஹம்தான் இந்த வைபவங்களுக்குக் காரணம் என்று உள்ளம் பூரித்தாள்.

(தொடரும்)



கலா மண்டபம்

சினிமாவும் சங்கீத டைரக்டரும்

சாண்டில்யன்

சங்கீத டைரக்டர்! பெயரே ஒரு விசித்திரம் சங்கீதத்தை டைரக்ட் செய்வதாவது? சங்கீதம் என்ன ரயிலா, பஸ்ஸா அதன் போக்கை சரிப்படுத்தி டைரக்ட செய்வதற்கு? இருந்தாலும் சினிமாவில் மெட்டு அமைத்துக் கொடுத்து பாட்டை இசைக் கருவிகளுடன் பொருத்திக்கொடுக்கும் சங்கீதவாத்தியார்கள் இப்படித்தான் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தென்னிந்திய சினிமாத் தொழிலின் பல விசித்திரங்களில் இதுவும் ஒன்று

மேல் நாட்டிலிருந்து சினிமாக் கலை நமக்குக் கிடைத்ததன் பயனாகவும், அதன் உபயோகத்தை நமது நாட்டுப் பண்புக்கு ஏற்ப பதனப்படுத்திக் கொள்ள நமக்கு சக்தியில்லாததாலும் சினிமாவில் சங்கீதத்துக்கும் ஒரு டைரக்டர் ஏற்பட்டார். மேல் நாடுகளில் பெருவாரியாக உள்ளது ஆர்கெஸ்ட்ரா சங்கீதம். அநேக இசைக் கருவிகளைக் கிளப்பிவிட்டு நாதத்தை ஒன்றுபடுத்தும் ஒரு முறையை அவர்கள் கையாண்டு வருகிறார்கள் இப்படிப்பட்ட ஒரு முறையில் 40 அல்லது 50 வாத்தியக்காரரைக் கட்டி மேய்த்துஸ்வரங்கள் அதிகக்குளறுபடியாகாமல் பாதுகாக்க ஒரு கண்டக்டர் அல்லது டைரக்டர் அங்கு நியமிக்கப்படுகிறார். அதேமாதிரி ஆர்க்கெஸ்ட்ராவை வைத்து அதே முறையில் நிர்வாகம் பண்ண வேண்டிய அவசியம் இங்கு இல்லாவிட்டாலும் நமது சினிமா சங்கீத வாத்தியார்கள் டைரக்டர் என்ற பெயரை விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன்பு காஞ்சீபுரம் நாயனாப் பிள்ளை அவர்கள் கூட மேடைமேல் கச்சேரி செய்யும் போது 8, 9 வாத்தியக்காரர்களைக் கட்டித்தான் மேய்த்தார். அவரை சங்கீத டைரக்டர் நாயனாப் பிள்ளை என்று அழைத்தோம். இல்லை, ஏன்? கர்நாடக சங்கீதத்தின் உயர்ந்த நிலை என்னவென்றால், ஸ்வர, தாள, ஸ்தானங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு யார்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

'பவளக் கொடி மீதிலாசை மறப்பேனே நானே' என்று கிளம்பிய அர்ஜுனனுக்கு உதவ கிருஷ்ணன் (டி. ஆர். மகாலிங்கம்) ஜெயதிலகத்துடன் புறப்படுகிறார் பக்ஷிராஜா 'பவளக்கொடி'யில்

சினிமாவும் சங்கீத டைரக்டரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

எதைப்பாடினாலும் பக்கவாத்தியக்காரர்கள் அவர்களோடு சேர்ந்து சுருதிபேதமில்லாமல் வாசிக்கக்கூடிய தன்மை ஏற்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சுத்த சங்கீதத்தை ஒழுங்காகச் சொல்லிக்கொடுக்கும் வாத்தியார் தேவையே தவிர கோலை வைத்துக்கொண்டு வாத்தியக்காரர்கள் முன்னால் கூத்தாடும் டைரக்டர் தேவையே இல்லை.

ஆனால் எதிலும் மேல்நாட்டை அல்லது குறைந்தபக்ஷம் வடநாட்டையாவது காப்பி அடித்துதான் தீரவேண்டும்என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் நமது, சினிமாத்தொழில் நிர்வாகிகள், கிளாரினெட், பஞ்சோ, ஸாரங்கி முதலிய பல வாத்தியங்களை சங்கீத டைரக்டர் தலையில் கட்டி "ஆகட்டும் ட்யூன்கொடுங்கள்" என்கிறார்கள் இந்த வாத்தியங்கள் சங்கீத டைரக்டருக்கு பழக்கமில்லையாகையால் அவர் இங்கிலீஷ் தியேட்டர்களுக்கும் ஹிந்துஸ்தானி படம் ஓடும் கொட்டகைகளுக்கும் டிக்கெட் வாங்க ஆரம்பிக்கிறார். அவற்றிலும் திருட தோதாக வர்ண மெட்டுகள் அகப்பட்டாவிட்டால் கிராமபோன் கம்பெனிகளில் போய் தவம் கிடக்கிறார்.

இப்படிக் கிருட்டுப் பிழைப்பை நாம் எவ்வளவு நாள்தான் நடத்துவது? ஏன் நடத்த வேண்டும்? என்று யாரும் யோசிப்பதாகக் காணோம். ஏதோ கர்நாடக சங்கீதத்திலும் கர்நாடக சங்கீத வாத்தியங்களிலும் இல்லாத தொனிகளை எங்கிருந்தோ பிடித்துக்கொண்டு வந்துவிடலாம் என்ற இந்த மேளமடைக் தன்மையை என்னவென்று சொல்வது? சமுத்திரம் போன்ற ஒரு சங்கீத முறை நம்மிடமிருக்கிறது. அதில் சற்று மூழ்கி அடியில் கிடக்கும் நவரத்தினங்களை எடுத்துக கொண்டுவர ஆள் குறைந்திருப்பது சினிமாத் தொழிலின் துர்ப்பாக்கியம் என்று சொல்வதா? அல்லது இப்பொழுதுவரும் வர்ண மெட்டுகளால் காதைத் துளைத்துக்கொள்ளும் நமது துர்ப்பாக்கியத்தைச்சொல்வதா?

இதற்கெல்லாம் காரணம் ஒன்றுதான் கர்நாடக சங்கீதத்தில் ஆழ்ந்த ஞானமற்றவர்கள் பெருவாரியாக சங்கீத டைரக்டர்கள் ஆகிவிடுகிறார்கள் சமுத்திரத்தில் மூழ்கி முத்து எடுக்கத் தெரியாதவன் அலை ஓரத்தில் நின்று கிளிஞ்சலை பொறுக்கும் கதையாக சங்கீத டைரக்டர்கள் மேல் பூச்சான ஞானத்தோடு வர்ணமெட்டுகளை அமைக்கிறார்கள். இதனால்தான அநேகமாக கழிபட்டுப்போன வர்ணமெட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன. சினிமாபாட்டு ஆத்மாவைத் தொடும்படியாயில்லை என்றால் அது யார் பிசகு?

சினிமா சங்கீத வாத்யாராயிருக்க வேண்டியவர் (இனிமேல் இவர் இஷ்டப்படி இவரை டைரக்டர் என்றே அழைப்போம்) மேடைச் சங்கீத வித்வானை விட அதிக ஞானம் படைத்தவராயிருக்க வேண்டும். ஏனென்றால் மேடைச் சங்கீத வித்வான் தான் பாடுவதற்கு புது வர்ணமெட்டுகளை அமைத்துக்கொள்கிறார். சங்கீத டைரக்டரோ இதரர்களுக்கு மெட்டு அமைத்துக்கொடுக்கிறார். மேடையில் பாடும் மனிதன் ஏற்கனவே கச்சேரிகளில் அடிபட்டு பதமடைந்தவர். இங்கு பாட்டுச் சொல்லிக்கொள்பவர் நேராகத் தலையைக் காட்டாததால் அடிபடாதவர். அடி விழுந்தாலும் திரையில் தோன்றும் இவர் நிழலுக்குத்தானே விழும்

[illegible] பிறருக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் ஒரு விஷயத்தில் நாம் சினிமா சங்கீத டைரக்டரைப் பார்த்துப் பரிதாபப்படத்தான் வேண்டியிருக்கிறது. சினிமா நடிகர், நடிகைகள் பலபேர் நல்ல சங்கீத ஞானமில்லாதவர்கள் அநேகருக்குக் குரலும் பூஜ்யம். ஆனால் நல்ல ஆளைப் பாடச்சொல்லி அந்தப் புகழை இவர்கள் தலையில் கட்டலாமென்றாலோ அதற்கு இவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. இன்னொருவர் பாடினால் நடிக்கவர மாட்டேன் என்றுசொல்கிறார்கள்.

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

சினிமாவும் சங்கீத டைரக்டரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

பாபநாசம் சிவன் அவர்கள் ஒரு முறை ஒரு நடிகையிடம கெஞ்சியது எனக்குத் தெரியும். ஒரு படத்தில் கதாநாயகி பாட ஒரு அருமையான ராகமாலிகையை சிவன் எழுதினுர் அதை அந்தப் படத்தில் நடிக்கும் நக்ஷத்திரம பாட முடியாது என்று அபிப்பிராயப் பட்டு இதை இன்னுரை விட்டுப் பாடச் சொன்னுல் எனக்குத் திருப்தியாயிருக்கும் என்று சொன்னுர். அவர் பிரார்த்தனை பலிக்கவில்லை. நல்ல வேளையாக அந்தப் படமும் பிடிபட வில்லை. இந்த விஷயத்தை நான் சொன்னதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு நமது நடிகர் நடிகைகளுக்குப் பாடவேண்டும் என்பதிலிருக்கும் பிடிவாதம் எவ்வளவு என்பதைக் காட்டவே சொன்னேன். "ஐயோ, உன் குரல் கட்டையாக இருக்கிறதே இத்தனை சங்கதிகளுக்கு வளைந்து கொடுக்காதே" என்று சங்கீத கர்த்தா சொன்னுலும் "மாட்டேன் பாடித்தான் தீருவேன்" என்று பிடிவாதம் செய்கிருர்கள். இதனுல் சங்கீத டைரக்டர் அந்தக் குரலுக்குத் தகுந்த ஒரு வர்ண மெட்டைப் பிடிக்கிருர். அது அநேகமாக வடநாட்டு சங்கீதமாகவோ, வெளிநாட்டு சங்கீதமாகவோ அமைந்துவிடுகிறது.

இப்பொழுது நல்ல கர்நாடக சங்கீதம் தெரிந்தவர்கள் சிலர் சங்கீத டைரக்டர்களாக வந்திருக்கிருர்கள். ஆனுல் சினிமா சங்கீதம் உயர்வடைய வேண்டுமானுல் திருட்டும் பிடிவாதமும் மறைந்தே ஆகவேண்டும். சங்கீத மெட்டமைப்பவர் கிராமபோன் பிளேட்டுகளிலிருந்தோ, ஹிந்தி பிலிமைப் பார்த்தோ வர்ண மெட்டு திருடுவதை நிறுத்த வேண்டும் குரல் வளையாத நடிகர் நடிகைகள் பாடத்தான் பாடுவேன் என்று பிடிவாதம செய்து நமது குரல் வளையைப் பிடிப்பதை நிறுத்தவேண்டும. படத்தில் நல்ல அம்சங்கள் மாத்திரமே வரவேண்டும என்ற ஒரு எண்ணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டும், குரலைக் காட்டி உருவத்தின் எழிலால் ஏற்படும் வசீகர சக்தியை ஒழிக்க வேண்டும் என்று நடிகைகளைக் கேட்டுக்கொள்கிறேன். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுகிறவன் கதையாக கர்நாடக சங்கீதத்தை வைத்துக கொண்டு வர்ண மெட்டுக்கு அழ வேண்டாம் என்று சங்கீத டைரக்டர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அழுகையை நிறுத்தினுல் உங்கள் பாட்டு அழுகையாயிராமல் நிஜப்பாட்டாகவே இருக்கும். ஜனங்களும் செவிக் கின்பம் பெறுவார்கள். சங்கீதத்தை நல்ல வழியில் டைரக்ட் செய்ததற்காக உங்களுக்கு சங்கீத டைரக்டர் என்ற பெயர் நிலைத்தாலும் நிலைக்கும். அப்பொழுது அந்தப் பெயரை இவ்வளவு ஆட்சேபனை சொல்லும் நான் கூட ஆட்சேபிக்கமாட்டேன்.

ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி டைரக்ஷனில் தயாராகும் 'தேவமனோஹரி'யின் கதா நாயகி பானுமதி.

சினிமா விசாரணைக் கமிட்டி

சினிமாவைப்பற்றி விசாரிக்க சர்க்கார் ஒரு கமிட்டி நியமிக்கப் போவதாக செய்தி இலாகா மந்திரி ஸ்ரீ ஆர். ஆர். திவாகர் டொமினியன் பார்லிமெண்டில் அறிவித்திருக்கிறார். சினிமா என்ன குற்றம் செய்துவிட்டது? ஏன் அதை விசாரிக்க வேண்டும் என்று நாம் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதை ஒரு வழியாக விசாரித்துவிட வேண்டியது அவசியந்தான் என்பதை நமது 'கலாமண்டபத்'தைப் படித்துவரும் அன்பர்கள் உணர்ந்திருப்பார்கள் ஆனால் சர்க்கார் அதை ஒழுங்காக விசாரிப்பார்களா என்ற ஒரு விஷயத்தில்தான் எல்லோருக்கும் சந்தேகம் ஏற்படும். எருமை மாடு குளத்தில் விழுந்த மாதிரி ஏற்கனவே கொஞ்சநஞ்சமிருக்கும் தெளிவையும் குட்டை குழப்பும் கமிட்டியை நியமிப்பதானால் சினிமாவைப் பற்றி விசாரணை நடத்தாதிருப்பதே உசிதம்.

கமிட்டியை அமைக்கும்போது கண்ட ஆசாமிகளை நியமிக்காமல் சினிமாவில் உண்மையாக சிரத்தையுடையவர்களும் லாபமோ நஷ்டமோ அதிலேயே மூழ்கிக் கிடப்பவர்களும் கொண்ட கமிட்டியை நியமிப்பதானால் சர்க்கார் கமிட்டி நியமிக்கட்டும் இல்லையானால் சும்மா இருக்கட்டும். சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுப்பதில் அர்த்தமில்லை.

சில மாகாணங்களில் சர்க்கார் சென்ஸார் போர்டு அமைத்திருப்பதைப் பார்த்தால் கமிட்டிகளை அமைப்பதில் அவர்களுக்கிருக்கும் கெட்டிக்காரத்தனத்தை நாம் ஊகிக்கலாம். சில சென்ஸார்போர்டுகளில் படத்தொழிலில் வெற்றி பெருமல் திவாலானவர்கள், வாழ்க்கை சப்பிட்டுப்போன கிழங்கள், மேடையிலிருந்துஅந்தர்த்தானமான சங்கீத வித்வான்கள் இவர்களை எல்லாம் நியமித்து பிலிமில் எதை வெட்ட வேண்டும், எதை வைக்கவேண்டும் என்ற நிதானமில்லாமல் வேலை நடந்து வருகிறது. தமிழ்ப் படங்களுக்கு தமிழ் தெரியாதவர்கள் சென்ஸாராக வருவதுகூட நமக்குத் தெரியும். இதெல்லாம் உருப்படுகிற விஷயமா என்பதை யோசிக்க வேண்டும்?

கமிட்டியை நியமிக்கிறதானல் பொது ஜனங்களால் வெகுமானிக்கப்பட்ட நல்ல அறிவாளிகள், உயர்ந்த நடிகர்கள், ஒழுங்காக சினிமாத் தொழில் நடத்தும் முதலாளிகள், நல்ல லக்ஷியத்துடன் படம் எடுக்கும் ஆர்வமுள்ள டைரக்டர்கள், சினிமா விஷயமறிந்த சினிமா ஆசிரியர்கள் இவர்களை நியமித்து நாலுபேர் ஒப்புக்கொள்கிற முறையில் சினிமா கமிட்டியை நியமிக்க வேண்டும்.

11000 அடியைப்பற்றி மசோதா இருக்கிறதைப்பற்றியும் ஸ்ரீ திவாகர் பிரஸதாபித்திருக்கிறார் அடிப் பிரச்னைக்கு இப்பொழுது அவசரமே இல்லை. சினிமாத்தொழிலில் இப்பொழுது காணப்படும் அடிப்படை ஊழல்கள் ஒழிந்தால் அடிப் பிரச்னை தானாக ஒழிந்துவிடும். ஊழல்கள் ஒழிந்தால் குறைந்த நீளமுள்ள விறுவிறுப்பான படங்கள் தானாக வெளிவரும். அப்பொழுது ஜனங்கள் மண்டை வலி எடுக்கும் அதிக நீளப் படங்களைப் பார்க்கமாட்டார்கள். படத்தின் நீளத்தை நிர்ணயம் செய்வது சுலபமான காரியமல்ல. படத்தின் தன்மைக்குத் தகுந்தபடி நீளம் அதிகமாகலாம் அல்லது குறையலாம். 'ஸ்டண்டு' படத்திற்குக் குறைந்த நீளம் போதும். ஆனால் ஒரு மகானின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லவேண்டுமானல் படம் நீளமாகத்தான் போகும். ஆகையால் குதிரைக்கு குர்ரம் என்றால் யானைக்கு யர்ரம் பூனைக்கு புர்ரம் என்று சொல்வதைப்போல் பட நீளத்தை ஒரு சீரடுத்துவதுபித்துக்குளித்தனம். சினிமா என்றால் என்ன என்று அடியோடு தெரியாத பேர்வழிகள் செய்யவேண்டிய வேலை. எதற்கெடுத்தாலும் சர்க்கார் கண்ட்ரோல் செய்துதான் ஆகவேண்டும் என்ற தற்கால ரீதியை உத்தேசித்து இதிலும் கண்ட்ரோல் கொண்டுவரலாம். ஆனால் மற்ற கண்ட்ரோல்களால் நாட்டுக்கு விளைந்திருக்கும் நன்மைதான் இதனாலும் விளையும். கமிட்டிதான் எல்லாவற்றையும் விசாரிக்கப்போகிறதாமே. வரட்டும், பார்ப்போம்.



உதயசங்கரின் "கல்பனா" அடுத்த வாரம் முதல் சென்னை வெலிங்டன் டாக்கீஸில் ஆரம்பமாகிறது. இதில் நடனமும், ஸங்கீதமும் பிரதான அம்சங்கள். இது ஜெமினி ஸ்டுடியோவில் தயாரான படமென்பதை நேயர்களறிவர். மேற்படி படத்தில் முக்கிய பங்கேற்று நடித்திருக்கும் உதயசங்கரும் அவரது மனைவியும் தோன்றும் கட்டம்.

துஷ்யந்தலம்!

நாகராஜன்

அங்கம் 1

இடம் — ராஜதானிக் கல்லூரியின் தோட்டம்
காலம் — காலை $9\frac{1}{2}$—மணி
பாத்திரங்கள் — பி. எஸ் ஸி. வகுப்பில் படிக்கும் மிஸ் துஷ்யந்தையும் அவள் தோழிகளும்

[மிஸ் துஷ்யந்தையும் அவளுடைய தோழிகளும் கல்லூரி முகப்பிலுள்ள தோட்டத்தின் வழியே உள்ளே வருகின்றனர்]

துஷ்யந்தை:—என் மனம் இன்று என்ன காரணத்தாலோ துள்ளி விளையாடுகிறது அனும்வதா! என்ன விஷயமோ தெரியவில்லையே!

அனும்வதா:—மனம் துள்ளி விளையாடுகிறதா? என்ன காரணமாக இருக்கும்?...... ஆமாம், பஸ்ஸிலே தானே வந்தே? பஸ்ஸிலே யாராவது இளைஞர்கள்......?

துஷ்:—சீ! என்னை என்ன அப்படி வியவஸ்தை கெட்டவள் என்று நினைத்துக்கொண்டு விட்டாயா? என் மனம் அப்படி ஒன்றும் பஸ்ஸிலேயும் கிஸ்ஸிலேயும் காதல் கொள்ளாது!

பிரியம்சூயா:—என்ன சொன்னாய், துஷ்யந்தை? பஸ்ஸிலே காதல் பண்ணாமலிருக்கலாம், உன் மனம் ஆனால் 'கிஸ்'ஸிலே காதல் பண்ணாமல் இருக்குமா?

துஷ்:—போடி, போ! உனக்கு எதற்கும் குதர்க்கம்தான்!

அனு:—பின்னே என்ன காரணத்தினால் ஒரு நங்கையின் மனம் துள்ளி விளையாடுமாம்?

துஷ்:—அதுதானேடி எனக்கும் தெரியவில்லை! (பாடுகிறாள்).

துள்ளி விளையாடும் எந்தன் மனமே....ஏ....ஏ....ஏ...
அனு:—துஷ்யந்தை, சித்தே இருடி!

துஷ்:—என்ன?

பிரி—நாங்கள் 'காண்டீனு'க்குப் போய் ஒரு 'கப்' காபி சாப்பிட்டுவிட்டு வருகிறோம்.

துஷ்:—ஏன், என் பாட்டு தலைவலியைக் கிளப்பிவிட்டு விட்டதா என்ன?

பிரியம்:—சே! அப்படியா பாடுவாய் நீ? (அனும்வதாவும் பிரியம் சூயாவும்போகிறார்கள்.)

அங்கம் 2

அதே காலம் — அதே இடம்
பாத்திரங்கள் — சகுந்தலன் எம். ஏ. யும் துஷ்யந்தையும்

சகுந்தலன்:—(தனிமொழி) ஆஹா! என்ன இருந்தாலும் இந்த வெள்ளைக்காரன் கெட்டிக்காரன் கெட்டிக்காரன்தான்! நம்ம ஊர்களில் எல்லாம் சாஸ்திர பாடசாலைகள் கட்டுகிறார்களே இந்த மாதிரியா இருக்கின்றன அவை? ஆஹா! இந்தத் தோட்டம் ஒன்றே போதுமே! அடடா! இந்தத் தோட்டத்துச் செடிகளின் பூக்களில் ஒன்றிலாவது நல்ல மணம் இல்லாவிட்டாலும் மனத்தை எவ்வளவு ஆனந்தமடையச் செய்கின்றன! அயோத்திகுடியின் ஜமீந்தாராகிய நாம் இதைக் காணக் கொடுத்து வைத்ததே ஒரு பாக்கியம்! இதோ இந்த மரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு இந்தத் தோட்டத்தின் அழகையும் காலேஜின் அழகையும் இன்னும் நன்றாகப் பருகலாம்.

[சகுந்தலன் சுற்றிக்கொண்டே வந்து துஷ்யந்தை உட்கார்ந்துகொண்டிருக்கும் அதே மரத்தின் மற்றொரு பக்கத்தில் தலையைச் சாய்த்து அண்ணாந்து படுத்தபடியே யோசனை செய்துகொண்டு இருக்கிறான்]

அப்பொழுது மரத்தின்மேல் 'கிரீச் கிரீச்' என்று கத்திக்கொண்டே சென்ற அணில் குஞ்சு ஒன்று ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவும்போது குறி தவறி, கிளையை எட்டிப் பிடிக்கமுடியாமல் போகவே, திடீ

ரென்று சகுந்தலன் மார்பின்மேல் விழுந்துவிடுகிறது. சிறிய பிரஷ்' மாதிரியிருந்த அந்த ஜந்து இப்படி எதிர்பாராத விதமாக மேலே விழுந்ததும் திடுக்கிட்டு எழுந்த சகுந்தலன் பாம்போ, பெருந்தேளோ என்று பயந்து திடு திடுவென்று ஓடுகிறன். மரத்தைச் சுற்றி ஓடும்போது கீழே ஒரு கொடி தடுக்கவே அப்படியே 'மடார்' என்று எதிரில், உட்கார்ந்துகொண்டிருந்த துஷ்யந்தையின் காலடிகளில் விழுந்துவிடுகிறன்.

துஷ்:—(தனிமொழி) அடடா! ஒரு ஆடவர்போல் அன்றோ காண்கிறது! ஒரு வயதுவந்த ஸ்திரீ முன்பின் அறியாத ஒரு ஆடவருக்கு உதவிசெய்யப்போகலாமா? ஆனல் யார் ஆபத்தில் இருந்தாலும் அவர்கள் எவ்வளவு கெட்டவர்களாக இருந்தபோதிலும்—உதவிசெய்ய வேண்டும்'' என்று புத்தரோ, இயேசு கிறிஸ்துவோ எங்கேயோ ஓரிடத்தில் செல்லியிருக்கிறர்போலிருக்கிறதே.........சரி. உதவி செய்வோம.........

[காலில்வந்து விழுந்த ஆடவனைக் கைதூக்கி உட்காரச் செய்து வியர்வை சொட்டும் அவன் முகத்தைத் தன் கைக்குட்டையால் துடைக்கிறுள.]

துஷ்:—(தனிமொழி) அடடா! இவ்வளவு அழகாக—ஒரு ஜமீன்தார்போல-இருக்கும் ஒரு யௌவன புருஷன் ஏன் தான் ஒரு ஸ்திரீயின் காலில் வந்து விழவேண்டுமோ, தெரியவில்லையே! (வெளிப்படை) சார்!...இல்லை.... சுவாமி!...சார்!...உம்...சுவாமி!

[சகுந்தலன் கண்ணைத் திறக்கிறன் பிறகு கண்ணை விழிக்கிறுன்]

சகு:—(மனத்துள்) அடே டே! ஒரு மங்கை போலல்லவா இருக்கிறது...ஆம். மங்கையேதான்...நிச்சயமாக.

துஷ்:—என்ன சுவாமி! ஏன் ஓடி வந்தீர்கள்? ஏன் கீழே விழுந்துவிட்டீர்கள்?...

சகு:—ஆ! நான் கனவு காண்கிறேனு?...என் எதிரே ஒரு பாம்பு...

துஷ்:—உங்கள் எதிரில் பாம்பு இல்லை சுவாமி, ஒரு நங்கை...ஒரு மங்கை...

சகு:—ஆ! நங்கையா...நஞ்சுடைய நல்ல பாம்பு...

[துஷ்யந்தை சகுந்தலனின் தோள்பட்டையைப் பிடித்து ஊறுகாய் ஜாடியை உலுக்குவதுபோல் நான்கைந்து தடவை உலுக்குகிறுள். சகுந்தலனுக்குப்பதட்டம் நீங்கிப் பிரக்ஞை வருகிறது]

சகு:—ஆ! நீங்களா!...ம்...

துஷ்:—ஏன் சுவாமி ஓடி வந்தீர்கள்? ஏன் விழுந்துவிட்டீர்கள்?

சகு:—ஆ! ஆ! ஓடி வந்தேனு!...ஆமாம்! ஓடி வந்தேன்...!

துஷ்:—ஏன் ஓடி வந்தீர்கள்? என்று கேட்கிறேன்.

சகு:—அதுதானே சொல்கிறேன்! நான் இந்தத் தோட்டத்தின் வனப்பைப் பார்க்க வந்தேனு?...வந்து அந்த மரத்தடியில் உடகார்ந்தேன் அப்பொழுது தலைக்குமேலே பத்து அடி நீளமுள்ள நல்ல பாம்பு ஒன்று...

துஷ்:—ஆ! பத்து அடி நீளமுள்ள நல்ல பாம்பா? கேட்கும் போதே பயமாக இருக்கிறதே!

சகு:—ஆமாம் பயம்... மாகத் தான் இருக்கும், நான் சொல்கி



றேன். ரொம்ப பயமாக இருந்தால் கண்ணை மூடிக்கொண்டே கேளுங்கள்...ஒரு பாம்பு கிளையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது. சிறிது நேரம் சென்றிருந்தால் அது என் கழுத்தைச் சுற்றிக்கொண்டு என் மென்னியை முறித்திருக்கும்!

துஷ்:—ஐயையோ!

சகு:—நான் பார்த்தேன்; அதை உடனே கொன்று விடலாமென்ருலோ கையில் கத்தியோ, கம்போ இல்லை. 'இருந்தாலும் சும்மா இருந்துவிடக்கூடாது, இது நங்கைகள் நடமாடும் இடம்; இன்று என்னைக் கடிக்காவிட்டால் நாளை வேறு யாராவது ஒரு நங்கையைக் கடித்துவிடும்' என்று யோசித்து தொங்கிக்கொண்டிருந்த அதன் தலையில் கண்ணை இறுக மூடிக்கொண்டு, ஒரு குத்து குத்தினேன்...

துஷ்:—ஆ! தலையிலா? ஆகா! அப்புறம்...?

சகு:—அப்புறம் அது அப்படியே 'பொத்'தென்று தரையில் குதித்துப் படமெடுத்தபடியே என்னைத் துரத்த ஆரம்பித்துவிட்டது. நான் எவ்வளவு வேகமாக ஓடியும் அதுவும் வேகமாகத் துரத்தவே, அதனிடமிருந்து தப்ப ஒரு யுக்தி செய்தேன்...

துஷ்:- ஊம்... என்ன யுக்தி?

சகு: — நான் ஓடுவது தெரிந்ததால்தானே அது துரத்துகிறது? திடீரென்று நான் தரையில் புல்லுடன் புல்லாகக் குப்புறப் படுத்துக்கொண்டுவிட்டேன். அந்தப் பாம்பு ஓடி வந்துகொண்டிருந்த வேகத்தில் அப்படியே 'சடக்'கென்று நிற்கமுடியாமல் ஒரு துள்ளுத் துள்ளி அப்படியே தாவி ஓடிவிட்டது...

துஷ்:—ஆ! எவ்வளவு வீரம்! நான் இங்கேயே உட்கார்ந்துகொண்டிருந்தும் இதையெல்லாம் பார்க்கவில்லையே!

[சகுந்தலன் சொல்ல வேண்டியது முடிந்துவிடவே, துஷ்யந்தை ஏதாவது பேசுவாள் என்று அவள் முகத்தை நோக்குகிருன். துஷ்யந்தையின் கண்களோ, தன் பிரதாபங்களைச் சொல்லும்போது ஒளி வீசும் அவன் கண்களையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. இருவருடைய கண்களும் சந்திக்கின்றன. நேரம் செல்கிறது.

சகு:—துஷ்யந்தை!...

துஷ்:—சுவாமி!...சார்...சுவாமி!

இருவரும்:—(மனத்துள்) உணர்ச்சி அதிகமாகிவிட்டால் பேச வராது என்பது எவ்வளவு உண்மை!

துஷ்:—ஆமாம்; நீங்கள் யாரென்று சொல்லவில்லையே!

சகு:—சொல்கிறேன்; உன் முகத்தின் சோபையானது என்னைப் பேசவொட்டாமல் செய்துவிட்டது!

துஷ்:—உங்கள் முகம் என்னை...!

சகு:—நான்...நான் அயோத்திகுடி ஜமீன்தார்.

துஷ்:—ஆ! அயோத்திகுடி ஜமீன்தாரா?

சகு:—ஏன் துஷு! உனக்கு எங்கள் வம்சத்தில் யாரையாவது தெரியுமா?

துஷ்:—இல்லை:...நீங்கள் ஜமீன்தார்...

சகு:—என்ன சொல்கிறாய் துஷு!

துஷ்:—ஆம்; நீங்கள் ஜமீன்தார்; நான்...நான்

சகு:—இதற்குத்தானா! நான் ஜமீன்தாராய் இருந்தால் என்ன?

சகு:—ஜமீன் எல்லாம்தான் போய்விட்டதே!

துஷ்: என்ன சொல்கிறீர்கள்?

சகு: ஆம்; என் ஜமீன் எல்லாவற்றையும்தான் இதோ இந்தப் பெண்ணின் காலடியில் வைத்துவிட்டேனே! இனிமேல் எனக்கு என்ன இருக்கிறது?

துஷ்: சுவாமி! உண்மையாகவா? நான் ஏழை என்று தெரிந்தும் என்னை நேசிக்கவும்.........

சகு: ஏழை, பணக்காரன்! யார் ஏழை? யார் பணக்காரன்? நல்ல மனம், நல்ல குணம், இவை யாரிடத்தில் இருக்கின்றனவோ அவன்தான் பணக்காரன்!

துஷ்: சுவாமி! என் மனத்தைக் கலங்க அடிக்காதீர்கள்!............

சகு: (அவளை ஒரு கையால் அணைத்துக்கொண்டு) துஷு! இதோ. பார்! உன் கழுத்தைத்தவிர வேறு யார் கழுத்திலும் இந்தக் கை தாலி கட்டாது!

துஷ்: உண்மையாகவா, சுவாமி!

சகு: இன்னும் சந்தேகமா? அப்படியானால் வா, இப்பொழுதே ஒரு ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்குப் போய்.......

துஷ்: வேண்டாம்.

சகு:—துஷு! எப்படியும் நாம் இப்பொழுதே விவாகம் செய்துகொண்டு விட வேண்டும். இதோ பார்: கந்தர்வ காலத்தில் மோதிரம் மாற்றிக்கொள்வது முறை. இந்தக் காலத்தில்............

துஷ்: ஆ! என்ன?

சகு: கைக்குட்டை......அதனுடைய முடிவு மணம் புரிந்துகொண்டதாக ஆகிவிடும்!

துஷ்: சுவாமி!

அங்கம் 3

இடம்	—	கண்வருடைய வீடு.
காலம்	—	பகல் பனிரெண்டு மணி.
பாத்திரங்கள்	—	மிஸ்டர் வார்துஸ்ஸும் துஷ்யந்தையும்.

வார்துஸ் (கண்வரின் வீட்டு வாசலில் வந்து நின்று) கண்வ்......! மிஸ்டர் கண்வ்......! மிஸ்டர் கண்வ்......! (பதிலே வரவில்லையாதலால் இன்னும் உரக்க) மிஸ்டர்......கண்வ்......கண்வ்......! யாருமில்லையா? (மனத்துள்) துஷ்யந்தையாவது இருப்பாளே!

(இன்னும் உரக்க) துஷ்யந்தை! துஷ்யந்தை! ஏ...... துஷ்யந்தை!.........

[வார்துஸ்ஸுக்குக் கோபம் வருகிறது.]

வார்துஸ்: துஷ்யந்தை! நீ யாரை நினைந்து இப்படி என்னைக்கூட அலக்ஷியம் செய்கிறாயோ, யாரை நினைந்து உருகி, வெய்யில் வேளையில் உன் வீட்டு வாயிலில் வந்து தொண்டைத் தண்ணீர் வரளக் கூப்பிட்ட இந்தக் கிழவனுக்கு ஒரு கிளாஸ் காபி கூடக் கொடுக்காமல் உட்கார்ந்திருக்கிறாயோ, அந்த சகுந்தலன் உன்னை முழுவதும் மறந்து விடட்டும்!

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த தேதி. நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2 3—க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன். சுருக்கமாக எழுத ரூ 35

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது

★

மானேஜர்,

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

[அடுத்த இதழில் முடியும்]



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூஞ்சோலையில்

பி. ஸ்ரீ.

46

கணவனும் தொழுத மனைவி

★

'பொய்யும் சொல்லக்கூடாது. பொருளும் நிறையச் சம்பாதிக்கவேண்டும்; தருமமும் வேண்டும் பெருமையும் வேண்டும்' என்றால் என்ன கஷ்டமான முரண்பாடு!' என்று தோன்றுகிறதல்லவா? காரைக்கால் வணிகர்கள் அத்தகைய வாழ்வு வாழ்ந்ததாகச் சொல்லுகிறார் சேக்கிழார் பெருமான் அவர்களை

மானமிகு தருமத்தின்
வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர்

[வாய்மை—சத்தியவாக்கு. ஊனமில்—குற்றம் இல்லாத]

இத்தகைய வணிகர்கள் அதிகமாய் வசித்ததால் புகழில் ஓங்கியிருந்ததாம் காரைக்கால் துறைமுக நகரம் அந்தக் கடற்கரையில் நின்று பார்த்தால் எத்தனையோ கப்பல்கள் ஏற்றுமதி இறக்குமதி—வியாபாரங்களுக்குத் தயாராயிருப்பது தெரியும். அந்தப் பெரு வணிகர்களின் சமூகத்தலைவர் பிரசித்தி பெற்ற தனதத்தன் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

'எங்கள் குலத்தலைவனார் தனதத்தனார்' என்று செருக்குடன் வணிகர்கள் அவரைக்குறித்துப் பேசுவார்கள்.

தனதத்தனுக்கு ஒரு புதல்வி. இந்தப் பெருஞ் செல்வரின் 'செல்வத்திற்கும் அழகிற்கும் அதிதேவதையான மகாலட்சுமியின் அவதாரம் தானோ'? என்று சந்தேகிக்குமாறு அத்தகைய பேரழகு வாய்ந்தவளாயிருந்தாள்.

அங்கவர்பால் திருமடந்தை
அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப்
புனிதவதி யார்பிறந்தார்

[திருமடந்தை—மகாலட்சுமி]

புனிதவதி—என்ன அழகான பெயர்! 'எங்கள் தனதத்தனாரின் செல்வப புதல்வி புனிதவதியார்' என்று தெரு வணிகர் இறுமாந்து பேசப் பேரழகின் கொழுந்தாக வளர்ந்தாள் புனிதவதி. உருவ அழகைப்போல் குண அழகும் அமைந்திருந்தது. ஆகவே புனிதவதியென்ற பெயர் பொருத்தமாகவும் இருந்தது.

அல்கியஅன் புடன்அழகின்
கொழுந்தெழுவ தெனவளர்வார்

[அல்கிய—இயல்பாகத் தங்கிய.]

சிவபெருமான்மீது இவளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட்டிருந்த அன்பும் அழகோடு வளர்ந்து வந்தது.

பிறந்து மொழிபயின்ற
பின்எல்லாம் காதல்
சிறந்து, நின் சேவடியே
சேர்ந்தேன்

என்று பின்னாளிலே இந்த அம்மை சிவபெருமானை நோக்கிப் பாடியுள்ளார் இதனால் புனிதவதியின் உள்ளம் இளமையிலேயே உலகப் பொருள்களையாவது உலக இன்பங்களையாவது காதலிக்கவில்லையென்று ஊகிக்கிறார்கள் அழகின் கொழுந்து பக்தியின் கொழுந்தாகவும் விளங்கினார் என்பர்.

தன் ஒரே அருமை மகளைத் தனதத்தன் ஆபரணங்களால் மட்டும் அழகு செய்து பாராமல் கல்வியறிவாலும் அழகு செய்து ஆனந்தம் அடைந்தானென்றும் அறிவின் அழகு அன்பின் அழகை அரண் செய்ததென்றும் ஊகிக்கலாம் சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்து அவர்களோடு இளமையிலேயே இவள் பழகி வந்தது பிற்காலப் பெருவாழ்விற்கு வித்தாக அமைந்திருக்க வேண்டும்.

மணப்பருவம் வந்ததும் தந்தை இவளை நாகப்பட்டினம் என்ற வேறொரு துறைமுகத்தில் நிதிபதி என்று பிரசித்தி பெற்றிருந்த வணிகத் தலைவன் மகனான பரமதத்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தான் திருமணம் காரைக்காலில் வெகு விமரிசையாக நடந்தது.

தனதத்தனுடைய சம்பந்தி நிதிபதி: மாப்பிள்ளை பரமதத்தன். மனப்பொருத்தமும் மணப்பொருத்தமும் ஏற்பட்டதுடன் பெயர்ப் பொருத்தமும் எப்படி அமைந்துவிட்டது பாருங்கள்!

தனதத்தன் தன் ஏகபுத்திரியைப் பிரிந்திருக்கமனமில்லாதவனாய்மகளையும் மருமகனையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்பாமல் தன் வீட்டருகே அழகுமிக்க மாளிகை பொன்று கட்டி அதில் அவர்களை மகிழ்ச்சியோடு வசிக்கச் செய்து வேண்டும் பொருள்களும் ஏராளமாகக் கொடுத்துதவினான் பரமதத்தனும் வணிகத் துறையிலிறங்கிப் பொருளை மேலும் மேலும் அதிகப்படுத்தி வந்தான் புனிதவதிக்கோ சிவபக்தி மேலும்மேலும் அதிகரித்து வந்தது மனைக்கு வரும் சிவனடியார்களை—எந்த நேரத்தில் எவர் வந்தாலும்—மிக மகிழ்வோடு வரவேற்று உணவளிப்பாள்; உடையும் பொருளும் கொடுப்பாள். இப்படிச்

சிவகைங்கரியங்களில் ஈடுபட்டிருந்தும் குடும்ப வாழ்க்கையையும் ஒழுங்காக நடத்தி வந்தான்.

இந்தவிதமாக இவர்கள் வாழ்ந்து வரும் காலத்தில் ஒருநாள் பரமதத்தனை வியாபார விஷயமாகப் பார்க்க வந்தவர்களில் சிலர் அவனுக்கு அருமையான இரண்டுமாம்பழம் கொடுத்துப் போனார்கள். அவன் அவைகளை மனைவிக்கு அனுப்பினான் மனைவி வாங்கிவைத்தபின் வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர் பசியால் வாடிக் களைப்புற்றவராய் வந்து சேர்ந்தார்.

உடனே புனிதவதி,

வேதங்கள் மொழிந்தபிரான்
மெய்த்தொண்டர் நிலைகண்டு,
'நாதன்தன் அடியாரைப்
பசி தீர்ப்பேன்' எனநண்ணி,

[நண்ணி—வந்தடைந்து.]
கால்கழுவ நீர் கொடுத்துக் கலத்திலே அமுது படைத்தாள். அப்போது கறிவகை ஒன்றும் சமைக்கப்படாமலிருந்ததால் தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டில் ஒன்றை எடுத்துப் படைத்தார்:

இல்லாளன் 'வைக்க'எனத்
தம்பக்கல் முன்இருந்த
நல்லநறு மாங்கனிகள்
இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து
படைத்து,மன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார்
தமைஅமுது செய்வித்தார்.

[இல்லாளன்—கணவன். வல்விரைந்து—அதிக விரைவாக.]
பசி தீர்ந்த கிழவர் புனிதவதி அம்மையை வாழ்த்திச் சென்றார்

பரமதத்தன் நடுப்பகலில் வீட்டுக்கு வந்தான் வழக்கம்போல் நீராடிச் சாப்பிட உட்கார்ந்தான். புனிதவதி அன்போடு உணவு படைத்தாள்.

நன்மதுர மாங்கனியில்
இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னம்அனை யார்தாமும்
கொடுவந்து கலத்தளித்தார்.

[நறுங்கூந்தல் அன்னம் அனையார் —வாசனை வீசும் கூந்தலோடுகூடிய புனிதவதி.]

நல்ல மதுரமான அந்த மாங்கனியைச் சாப்பிட்டுப் பார்த்த பரமதத்தன் என்ன சொல்லுகிறான் தெரியுமா? 'புனிதவதி! எவ்வளவு அபூர்வமான கனி இது! மற்றொரு பழத்தை நீ சாப்பிட்டுப் பார். நான் பாராட்டுவது மிகையில்லையென்று தெரிந்து கொள்வாய்!' என்று சொன்னானா? அதுதான் இல்லை. மற்றொரு பழத்தையும் கொண்டு வா என்றான் தனக்கு முன் அவள் ருசி பார்க்கட்டும் என்பதற்காகவும் அல்ல. 'மற்றொரு பழத்தையும் கொண்டுவந்து பரிமாறு' என்றுதான் சொன்னான்.

மனைவியார் தாம் படைத்த
மதுரம் மிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை
ஆராமைத் தார்வணிகன்,
'இனையதொரு பழம்இன்னும்
உள(து)அதனை இடுக'

என்று கட்டளையிட்டதாகத்தான் சேக்கிழார் பெருமான் சொல்லுகிறார்.

அப்போது புனிதவதி அடைந்திருந்த மனநிலையை என்னென்பது? அம்மன நிலையை அவள் செயலிலிருந்து எவ்வளவு பொருத்தமாக வருணிக்கிறார் சேக்கிழார்!

அனையதுதாம் கொண்டுவர
அணைவார்போல்அங்(கு)அகன்றார்

என்றும்,

அம்மருங்கு நின்(று) அயர்வார்,
அருங்கனிக்(கு) அங்(கு) என்
செய்வார்?

என்றும், புனிதவதியாரின் திகைப்பையும் அயர்ந்த நிலையையும் காட்டுகிறார்.

பிறகு மெய்ம்மறந்து பெருமானை நினைத்ததும் அவர் அருளால் ஒரு மாம்பழம் வந்ததென்றும் அந்தக் கனியைத் தந்த அருளின் திறத்தை வெளியிட அவள் முதல் முதல் அஞ்சினாளென்றும் பெரிய புராணம் சொல்லுகிறது அந்த அற்புதத்தை எப்படி நம்ப முடியும் பகுத்தறிவுகொண்டு?

புனிதவதி சொன்னபிறகுதான் தெளிவடைந்தானா பரமதத்தன்? அருளால்வந்த மாங்கனியைச் சுவைத்துப் பார்த்தவன், 'இது நான் அனுப்பிய கனி அல்ல' என்றான். மரத்திலே பழுக்காமல் மனசிலே பழுத்து உதிரக்கூடும் மாம்பழம் என்பதையும் புருஷன் தெளிந்துகொண்டானில்லை.

அந்த சந்தேகத்தைப் போக்கப் புனிதவதியார் அவன் விரும்பியபடியே வேறொரு மாம்பழமும் அருளால் வரவழைத்துக்கொடுத்தாராம். ஆனால், இந்த அருட்கனி பரமதத்தனுக்குச் சுவையூட்டிப் பிரமை கொடுக்கவில்லை. அதிசயித்து அவன் வாங்கிய பழம் அதிசயமாகவே மறைந்துவிட்டதாம்.

பரமதத்தன் பயந்து மனம் தடுமாறிப்போனான் என்றும் சிவனருளுக்கு அவன் அருகனாகவில்லையென்றும், அதனால் தெய்வமாகத்தான் கருதிய மனைவியை விட்டு நீங்க விரும்பினான் என்றும் கதை கூறுவதிலிருந்து பக்தியும் ஞானமும் பக்குவமுள்ளவருக்குத் தான் என்ற உண்மை இனிது விளங்குகிறதல்லவா?

புனிதவதியின் பக்திப்பெருநிலையை ஒருவாறு அறிந்துகொண்டபின், இனி இவளோடு வாழமுடியாது என்று தீர்மானித்த வணிகன் கடல் தாண்டி அன்னிய நாடுகளுக்குப் போய்ப் பெரும்பொருள் திரட்டினான் பிறகு வேறொரு வணிகப் பெண்ணை மணந்து பாண்டிநாட்டிலுள்ள துறைமுகம் ஒன்றில் வாழ்ந்து வந்தான் புதிய மனைவிக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது இந்தக் குழந்தைக்குத்தான் தெய்வமாக நினைத்துக்கொண்டிருந்த புனிதவதியின் பெயரை இட்டான்.

பாண்டி நாட்டிலே பரமதத்தன் இருப்பதைக் கேள்விப்பட்டதும், புனிதவதியின் உறவினர் இவளை அங்கே அழைத்துக்கொண்டு போனார்கள். இதைக் கேள்விப்பட்டதும் பரமதத்தன் தன் புதிய மனைவியோடும் பெண் குழந்தையோடும் எதிர்கொண்டுவந்து புனிதவதியின் அடிகளில் விழுந்தான்.

புதிய மனைவி, பழைய மனைவியோடும் மகளோடும் தெய்வத் தொழுகுலம் என்றே வணங்கிவிட்டான் புனிதவதியை.

விடுதலைக் கவிஞருக்கு விடுதலை

★

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலே தமிழகம் தனக்கு உரிய பங்கு எடுத்துக் கொண்டதே. அதற்கு ஒரு பெருந் தூண்டுகோல் பாரதியாரின் விடுதலைக் கவிதை என்பதை அறியாதார் யார்?

விடுதலை, விடுதலை, விடுதலை!
பறையருக்கும் தீயருக்கும்
புலையருக்கும் விடுதலை!

என்று விடுதலை முழக்கம் செய்த பாரதியாரின் பாடல்கள் அரசியல் விடுதலைக்கு மட்டுமல்ல, சமுதாய விடுதலைக்கும் தூண்டுகோலாகப் பயன்பட்டன என்பதையும அறியாதார் இல்லை

எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்.
எல்லாரும் இந்திய மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை,
எல்லாரும் ஓர் விலை.
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மனனர்-ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!

என்று சமுதாய விடுதலை பாடியவர்,

தனி ஒருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்?

என்று பொருளாதார விடுதலை— முரசும் கொட்டுகிறார்.

முழு விடுதலைக்கும் கவிஞர்

பாரதியார், மத விடுதலையும் எல்லாருக்கும உரியதென்று பாடியிருக்கிறார். பாரதியாருக்கு, மத விடுதலையென்றால், 'மத நமபிக்கையிலிருந்தே விடுதலை என்று பொருளல்ல; 'மதச் சுதந்திரம்' என்றுதான் பொருள், மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை என்று பொருள்; சர்வஜன சமரஸ சன்மார்க்கம் என்று பொருள்.

காவித் துணிவேண்டா,
கற்றைச் சடை வேண்டா,
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கே!

என்று மதச் சுதந்திரத்தை எப்படித் தெளிவுபடுத்தியிருக்கிறார், எல்லாருக்கும் எப்படி எளிதாக்கிக் காட்டுகிறார்!

பாரதியாரின் இதயமாகிய வீணையில் எப்போதும் இசைத்துக்கொண்டிருந்தது விடுதலைக் கீதம். பாரத சக்தி விடுதலை வேண்டப் பராசக்தி அன்பு நிறைந்த ஆசிகூறும் காட்சியைப் பாரதியார்—பராசக்தியின் இந்த ஆஸ்தானகவி—தமது இதயத்தின் வீணகானமாகக் கண்டார், கேட்டார். இந்த வீணகானத்தைப் பாரதியாரின் சுதந்திரப் பாடல்களில் மட்டுமா கேட்கிறோம்? வேதாந்தப் பாடல்கள் முதலான வேறு பாடல்களிலும் ஜீவநாதமாய்க் கேட்கிறோம். பாரதியார் பாடிய கூடி இதிகாசமாகிய 'பாஞ்சாலி சபத'த்திலும் இவருடைய இதயம் பாடும் விடுதலைக் கீதத்தைக் கேடகிறோம். ஏன், சிட்டுக்குருவி, பாட்டும்,

விட்டு விடுதலை யாகி நிற்பாய்
இந்தச் சிட்டுக் குருவியைப் போலே

என்பதையே பல்லவியாகக் கொண்டிருக்கிறது. இந்த விடுதலைப் புலவர் தமிழுக்கும் விடுதலை தேடிக் கொடுத்தார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பாரதியார்

மலிவான பதிப்பு

இத்தகைய விடுதலைக் கவிஞர், இந்தியா விடுதலை பெற்றும், தாம மட்டும் விடுதலை பெறமல் இருந்தார் என்றால், அது எவ்வளவோ வருத்தத்திற்கு உரியகாரியம் தான்; சமீபத்தில் இவர் விடுதலை பெறமல் இருந்தார் என்றால், அது எவ்வளவோ வருத்தத்திற்கு உரிய காரியம் தான்; சமீபத்தில் இவர் விடுதலை பெற்றது எவ்வளவோ மகிழ்ச்சிக்கு உரிய விஷயம் தான். சரி, 'பாரதியாருக்கும் விடுதலை' என்ற செய்தியின் பொருள்தான் என்ன?

பாரதியார் பாடல்களை வெளியிடும் உரிமை ஒருவரிடத்திலும, அவற்றைச் சினிமா நாடகங்களில் பாடும் உரிமை இசைத்தட்டுக்களில் எடுக்கும் உரிமையும் வேறொருவரிடத்திலுமாகப் பிரிந்திருந்தன என்பது தமிழ் நாடு அறிந்ததே இதனால் நல்ல மலிவான பதிப்புகளை வெளியிடவும் முடியவில்லை; எந்த நாடகமேடையிலும் பாடி மகிழவும் இயலவில்லை—என்ன பரிதாப நிலை பாருங்கள்! இப்போது, சென்னை அரசாங்கம் தலையிட்டுப் பாரதி பாடல்கள் விஷயமாகச் சகல உரிமைகளையும் தானே பெற்றுகொண்டது. இதனால் பாரதி பாடல்கள் எல்லாருக்கும் கிடைக்குமாறு மிகவும்மலிவான வெளியீடுகள் வரக்கூடும் என்கிறார்கள் இதைத்தான் 'பாரதியாருக்கு விடுதலை' என்று குதூகலமாய்ப் பேசுகிறார்கள் எழுதுகிறார்கள்.

சென்ற 25 ஆண்டுகளாகப் பாரதி பாடல்கள் சிலரின் தனி உடைமையாக இருந்து வந்ததே தவறு; பாரத ஸமுதாயத்தை,

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுஉடைமை

என்று பாடியவரும் தனிஉடைமையாக இருக்கலாமா?—என்ற ஆத்

திரம் தான் பாரதி அன்பர்களில் பலரையும் பல்லாண்டுகளாகக் கிளர்ச்சி செய்யத் தூண்டி வந்திருக்கிறது. அதே ஆகதிரம்தான் இன்று பலரையும மட்டற்ற மகிழ்ச்சியடையவும தூண்டிவிடுகிறது.

சிறந்த முறைப் பதிப்பு

ஆனால் பாரதியாருக்கு இந்த விடுதலை போதுமா? பாரதியார் பாடல்களும் வசனங்களும் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டியதுதான்; பாரதியார் பாடல்களைப் பரப்பும் வேலை சிறப்பாக நடைபெற வேண்டியதுதான். ஆனால் சிறந்த முறையில பாரதி நூல்கள் அச்சிடப்பெற வேண்டியதும் மிகவும் அவசியமல்லவா?

இதுவரையில் பாரதி நூல்கள் சிறநத முறையில் வெளிவரவில்லையா என்று கேட்கலாம். இந்தக் கேள்விக்கு இல்லை என்று தைரியமாக விடை சொல்லலாம் பாரதியாரின் பாடல்களைத் 'தேசிய கீதங்கள்' 'தோத்திரப் பாடல்கள்' 'வேதாநதப பாடல்கள்' 'கண்ணன் பாட்டு' 'ஸ்வசரிதையும பிறபாடல்களும்' 'பாஞ்சாலி சபதம்' 'குயில்' 'விநாயகர் நானமணி மாலை' என்றெல்லாம் ஒருவாறு முறைபபடுத்தித் தான் வெளியிட்டிருக்கிறார்கள். எனினும் பாடல்களை வரிசைப்படுத்தியிருப்பது சிறந்த முறையென்று சொல்லமுடியாது.

பாரதியாரின் சொந்தப் பாடல்களுக்கிடையே மொழி பெயர்ப்புப பாடல்களையும் சேர்த்திருக்கிறார்கள் இவரது புதுமுறைப் பாடல்களையும், பழைய கவிமுறைகளை அனுசரித்து இவர் பாடியிருக்கும 'திருததசாங்கம்' 'திருப்பள்ளியெழுச்சி' முதலான பாடலகளையும் சேர்த்து வெளியிட்டிருககிறார்கள சில பண்டிதர்களின சாதாரணச் செய்யுள-முறையைப் பின்பற்றி நவரத்தினங்களின் பெயர்களைச் சிலேடைப் பொருளாகவோ இயற்கைப் பொருளாகவோ அமைத்துப் பாரதியார் பாடிய 'நவரத்தின மாலை'யையும் நடுவிலே போடடு வைத்திருக்கிறார்கள். 'நடிப்புச் சுதேசிகள்' என்ற கிளிக்கண்ணிகள், 'பழித்தறிவுறுததல்' என்ற படாடோபப விளக்கப்பெயருடன் வெளியிடப் பெறறிருக்கின்றன.

'கோகலே சாமியார் பாடல்' என்ற ஒரு பாட்டும் இடையே வந்திருக்கிறது இது. குறளுககுக் 'கிறள்' பாடுவதுபோல்,

களக்கமறப் பொது நடனம்
கண்டுகொண்ட தருணம்

என்று ஆரம்பமாகும இராமலிங்க சுவாமியின் பிரசித்தமான பாட்டை வேடிக்கையாகத் திரித்துப் பாடியுள்ள ஓர் அரசியல் பாட்டு. அககாலத்து மார்லி என்பவரின் பேச்சிலே மிதவாதப் பிரமுகரான கோகலேக்கு உள்ள நம்பிக்கையைப்பரிகசித்துப் பாரதியார் பத்திரிகையில் 'தாற்காலிக மதிப்புடன்' வெளியிட்ட பாட்டு இது இதைப் பாரதியாரின் அருமையான தேசீய கீதங்களுக்கிடையே வெளியிடடிருப்பது சரியான பதிப்பு முறையன்று.

இத்தகைய குறைபாடுகளை நிறைசெயது தேசியப் பாடலகளையும் பிற பாடல்களையும் முறைப்படுத்தித் தக்க தமிழறிஞர் வாயிலாக வெளியிடுவதுதான் சிறந்த முறையில் பாரதி பாடல்களை வெளியிடுவதாகும். 'பாஞ்சாலி சபதம்' என்ற இதிகாசத் துணுக்கையும் 'குயில் பாட்டை'யும் 'கண்ணன் பாட்டை'யும் தனிப் பாடல்களுககிடையே வெளியிடாமல் பாடல தொகுதியின் இறுதியில் வெளியிடுவது நலம் இப்போதுள்ள பதிப்பில் பாரதி அறுபத்தாறு போலத்தான் மேலே சொன்ன மும்மணிகளும் மற்றப் பாடல்களுககிடையே வருகின்றன இந்தக் குறைகளெல்லாம் திருந்தவேண்டும

புதிய புதிய பதிப்புகள் வந்திருந்தும பாடல்கள் எல்லாம் பிழை இல்லாமல் வெளியிடப் பெறவில்லை. புதிய பதிப்புகளில் 'புதிய பிழைகளைக் கண்டோம்!' என்ற 'பெருமை' தான்!—இந்த ரீதியில் பதிப்புகள் வந்திருக்கின்றன பழைய பிழைகளும புதிய பதிப்பில் "பொன்போல்" போற்றப்பட்டு வந்திருககின்றன. உதாரணமாக,

பறையருக்கும் தீயருக்கும்
புலையருக்கும் விடுதலை

என்று இருகக வேண்டியது,

பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்தும் விடுதலை

என்று சிதைந்துதான் பதிப்புகளில் எல்லாம் அச்சு வாகனம் ஏறி வருகிறது இந்தச் சாதாரண விஷயம்கூட இதுவரையில் கவனிக்கப்படாததற்குக்காரணம், தக்க அறிஞர் தகக முறையில் பாரதி பாடல்களை வெளியிடவில்லையென்பதுதானே?

இனிமேல் வரும் பதிப்புகள் தகுந்த முன்னுரையுடன் வர வேண்டும் பாடல்கள் எழுந்த சந்தர்ப்பங்களுக்கும் சரியான குறிப்புகள் வேண்டும். சுருங்கச் சொன்னால், ஷெல்லி முதலான ஆங்கிலக் கவிகளின் பாடல்களை எவ்வளவு ஜாக்கிரதையாகப் புலமை வாய்ந்தவர்கள் வெளியிட்டிருக்கிறார்களோ, அவ்வளவு ஜாக்கிரதையாகத் தமிழ்ப் புலவர்கள் பாரதி பாடல்களையும் வெளியிட வேண்டும்

பிழையற்ற நல்ல பதிப்புகள் சிறந்த முறையில் வரும்போதுதான் 'நமது விடுதலைக் கவிஞருக்கு உண்மையாகவே விடுதலை கிடைத்து விட்டது!' என்று ரஸிகர்களும் அறிஞர்களும் ஒருங்கே குதூகலம் கொள்ளமுடியும்.

பாரதியார் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகமெங்கும் பரப்ப வேண்டும என்கிறார்கள். இந்துஸ்தானி முதலான இந்திய பாஷைகளிலும் பாரதியாரின் சிறந்த பாடல்களை மொழி பெயர்க்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதற்கெல்லாம் முன்பே தமிழில் நல்ல பதிப்பு வர வேண்டாமா? பாரதியாரை வட இநதியருக்கும் மேலை நாட்டாருககும் கொண்டு காட்டுவதற்கு முன் தமிழர்களாகிய நாம் எல்லாரும் இவரை உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டாமா?

பாரதியாரின் கொள்கைகளை ஆராய்ச்சிக் கட்டுரைகளின் வாயிலாகப் பரப்ப வேண்டும் பாரதியாரின் மதக் கொள்கைகளை ஒதுக்கி விட்டு அரசியல் பாடல்களையும தேசியப் பாடல்களையும் மட்டும் பாடிக கொண்டிருந்தால் போதாது பாரதியாரின் சொரூபம் முழுமையும் அறிந்துகொள்ள வேண்டாமா? அதற்கு இவர் பாடல்களையெல்லாம் கற்க வேண்டும்.

பாரதியாரின் எதார்த்த சொரூபத்தைத் தமிழர்கள் எதார்த்தமாகக் கண்டு மற்றச் சகோதரர்களுக்கும் காடடுமபோது, நமது விடுதலைக் கவிஞருக்கு உள்ளபடியே முழு விடுதலையும் கிடைத்துவிடும்.

தமிழுக்கு விடுதலை தந்தவருக்கு இந்த விடுதலையளிப்பது தமிழர் கடன்.

———

நிலைக் கண்ணாடி

'விந்தியா

[சென்றவாரத் தொடர்ச்சி]

"ஜானு! அந்தக் கண்ணாடியும் குடித்தனச் சாமான்களும் என்னவாயின!" என வினவினேன்

"அந்தக் கூத்தை ஏன் கேட கிறாய்?" என்றாள் ஜானு

"நான் இங்கு வந்த ஒரு வாரத்திற்குள் அந்தக் கடிதம்-அப்புறம் அடுத்த வாரத்திற்குள் கண்ணாடியும் இன்னும் சில சாமான்களும் வந்து விட்டன அங்கே என் புக்ககத்திற்கும் சில சாமான்கள் வந்தனவாம்! அவர் போன இடம்தான் தெரியவில்லை! ஏன் சுசீ? என்னைமட்டுமல்லாமல் பெற்றோரையும் துறக்கும்படி அப்படி என்ன மனம் விண்டு விரிந்திருக்கும்?...அதானே தெரியவில்லை கம்பெனி வேலையில் ஒரு அதிருப்தியும் கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை..."

"என்ன அதிசயமேமாம்மா!... போகிறது! எங்கே கண்ணாடியைக் காட்டு!" என்று சொன்னேன்.

"அதை விற்றுத் தொலைத்துவிட்டேன்! எனக்கு அது எதற்கு இனிமேல்?...எனக்குச் சத்துருவாயும் வந்து வாய்த்தது அது!...அது எனக்கு வேண்டவே வேண்டாம்!... கண்ணாடியில் காலையில் எழுந்து கண் விழித்தால் சுபம் என்பார்களே!..." வருஷப் பிறப்புக்கு 'விஷு'வில் வைப்பார்களே. சுசீ!...எனக்கு இது செய்த வினையைப் பாரேன்!...விற்று தலைமுழுகி விட்டேன்!..." என்றாள் ஜானு விரக்தியுடன்

"எப்போ விற்றாய் ஜானு! அதுதான் துரதிர்ஷ்டம் கொணர்ந்திருந்தால். அது வீட்டைவிட்டுப் போனப்புறம் ஏன்...உன் கஷ்டம் தீர்ந்திருக்க வேண்டாமோ?..." என்றேன் நான்

"நானும் நினைத்ததுண்டு ஒரு மாறுதலும் காணோமே என்று!... ஆனால் எனக்கு அதைவிட்டதில் வருத்தமில்லை. எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று வெகு உறுதியுடனும், அசாத்திய விரக்தியுடனும் கணணாடி மீது வெறுப்புடனும் சொன்னாள் ஜானு

நான் பரிதாபத்துடன் உணர்ந்தேன். அவளுக்கு இத்தகைய விரக்தி மனப்பான்மையும் உறுதியும் எதனால் என்றும். எத்தகைய மன வேதனையினால் ஏற்பட்டது என்றும் உணர்ந்தேன்

பிறகு வேறொரு சந்தேக நிவர்த்தியும் செய்துகொண்டேன்

"ஜானு இப்படி இருக்கிறாள்" என்பதை எனக்குச் சொல்லாமல்

"ஜானுவும் இருக்கிறாள் இங்கே" என்று என் வீட்டில் என் அன்னை சொன்னது ஏன்?

"எங்கோ வடக்கே வேலையில் இருக்கிறார். வீடு கிடைக்கவில்லை என்று அம்மா சொல்லிக் கொள்கிறாள் அம்மாவும், நானும் மட்டும் தான் இருப்பதால் விஷயம் வெளியாகவில்லை" என்றாள் ஜானு

"ஏதோ அம்மாவுக்குத் திருப்தியாயிருக்கட்டுமே என்று நானும் துக்கத்தை விழுங்குகிறேன் — ஆனால் எனக்கு அதனால் வேதனை அதிகம் தான்!" என ஒத்துக்கொண்டாள் அவள்.

வெற்றுக் கண்ணாடி நன்றாகவேயிருக்கிறது பாதரசப் பூச்சுப் பெற்றுவிட்டால் அதற்கு இன்னும் பெருமையும், சிறப்பும் உயர்வும் உண்டாகின்றன...... ஆனால் அப்புறம் அந்தப் பூச்சு அழிந்தும் அழியாமலும் மாறிவிட்டால். கண்ணாடியின் அலங்கோல நிலை?—அந்தோ — கணவன் இருந்தும் இல்லாதவளாக அவள் மனங் குமுறியழும் நிலைமையும்—அத்தகையதுதானன்றோ?

அவளிடம் அன்று விடைபெற்ற பொழுது என் மனப்பாரம் அளவு கடந்தது. ஆனால் அப்புறம் பத்து நாட்களுக்குப் பிறகு நான் அவளிடமும் என் பெற்றோரிடமும் மற்றும் ஏனையோரிடமும் விடை பெற்று எங்கள் ஊருக்குப் புறப்பட்ட போது—ஏனோ என் மனதில் உவகை!......

ஏன்?—மறுபடியும் எங்கள் குடித்தனம் நடக்கும் ஊர்போய். ஜோராக இருக்கப் போகிறோம் என்ற உள்ளுணர்வுனாலேதான்!...'ஏனோ' என்னும் ஐயம் எதற்கு?

ஊர் மீளும் வழியிலே நான் என் சிநேகிதையின் சோக அனுபவத்தைச் சொன்னேன் என் கணவருக்கு

"இந்தப் பத்து நாளிலேயே எனக்கு மறுபடியும் ஊரில் போய் இருக்கமாட்டோமா என்று ஆகிவிட்டதே!—பாவம்—அவளுக்கு—"

இந்த நினைப்புடன் நான் அவருக்கு என் ஜானுவின் வரலாற்றை வெகு உருக்கமாக எடுத்துக் கூறினேன்

"யாரோ அந்தக் கல்நெஞ்சுக்காரன்!...... அற்ப விஷயத்தைப் பிரமாதப்படுத்திவிட்டான்!...... அந்த

மகானுபாவன் பெயர் என்னவாம்?'' என்று கேட்டார் அவர்.

"ஐயோ!..." என்றேன் நான் அந்த மகானுபாவன் பெயரை விசாரித்து வைத்துக்கொள்ளத் தோன்ருதது ஏனே ஒரு குற்றம் போல தோன்றிற்று. வீட்டிலே, அங்கே பிறந்தகத்திலேயே, நான் இதுபற்றிச் சொல்லி. அவர் இந்தக் கேள்வி கேட்டிருந்தால், ஜானுவை விசாரித்து இருக்கலாமல்லவா?...ஆனல்?... யாருக்கும் 'அங்கே' தெரிய வேண்டாம் என்ற என் நல்லெண்ணம் விளைத்த வினையை நினைத்து வருந்தினேன்.

"கல்யாணப் பத்திரிகையிலே என்னமோ ராமன் என்று போட்டிருந்ததாக நினைவு!...எங்கே அவ்வளவு நினைவு!...ஜானகிராமனே கல்யாண ராமனே... பட்டாபி ராமனே. எத்தனையோ பேர்கள்!'' என்று சொன்னேன் அப்புறம்.

"சாப்பாட்டு ராமன்!'' என்ருர் அவர்.

எனக்கும் சிரிப்பு வந்தாலும் "உங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும்!' என்று கோபித்துக் கொண்டேன்.

என் பொய்க் கோபத்தை மெய்க் கோபமாக அவர் பாவிக்காவிடினும், அவர் பாவித்தாரோ அப்படி என்று ஐயுறுமாறுதான் அப்புறம் நடந்து கொண்டார்.

ஊர் சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம், ஒரு நாள் ஒரு செய்தி கொணர்ந்தார்.

''பாலு மகா மோசம்...கலாட்டா செய்யறதை யாரிடம் எப்படி எத்தனை செய்யலாம் என்கிற மிதமே கிடையாது!' என்ருர் உடை மாற்றிக்கொண்டே.

பாலு அவருடைய ஆபீஸ் நண்பர். எங்களைப்போலவே வட நாட்டில், உத்தியோகமும் வீடு வாசலும் உள்ளவர்.

நான் என் கணவரின் பேச்சிற்கு ''உம்'' கொட்டினேன்.

''இன்னிக்குக் கிளப்புலே ஒரு ஆசாமியை பாலு வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு வந்திருந்தான்!...ஏற்கெனவே ஒரு மாசமாய் வருவதற்கு இஷ்டமில்லாமல் ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்லி வந்த மனுஷனை, பலவந்தமாய் இழுத்துக் கொண்டு வந்தான்?... போகிறது...அதோடு நிற்க வேண்டாமா பெருதனமும். விளையாட்டும்!...அந்த மனுஷனை பாவம் ஒரே கலாட்டா பண்ணி அசடு வழிய வச்சுட்டான்!'' என்ருர் என் கணவர்.

''உம்?...அப்படி என்ன கலாட்டா பண்ணினுர்......யாரு அவர்?........'' என்று கேட்டேன் ஆவலுடன்.

"அந்த மனுஷன் இங்கே ஏதோ மோட்டார் கம்பெனிக்கு வேலைக்கு வந்து மூணு மாசமாகிறதாம் பாலுவுக்கு ஒருமாசமாய் பரிச்சயமாச்சாம்!......அது முதலே கிளப்புக்குக் கூப்பிட்டால் வரவில்லை கொஞ்ச நாளைக்கு முன்பு ''வீடு கிடைச்சு இருக்கே, 'செட்டில்' செய்யுங்களேன் மனைவியை அழைத்துக் கொள்ள!'' என்று பாலு சொன்னபோது மனுஷன் அசட்டு விழி விழித்து 'உஹூம்........வேண்டாம்!......'' என்ருராம்!...... ''வீடு கிடைத்தால் மனைவி வருவாள் வரவழைக்கணும்!'' என்று சொன்னவர் இப்படி அசட்டுப் பிசட்டு என்று விழித்ததைப் பார்த்து என்னமோ சந்தேகம் வந்ததாம் பாலுவுக்கு! ... இன்றைக்கு அவரை கிளப்புக்கு இழுத்துண்டு வந்து என்னென்னமோ கிண்டல் பண்ணி அவர் மானத்தை வாங்கிவிட்டான்!........பாவமாயிருந்தது அந்த ஆளைப்பார்க்க! என்று முடித்தார் என் கணவர்.

''அவர் பேர் என்னவாம்!......ஏன் அவரை சும்மா, பாவம், அசடு அசடு மாதிரி என்று சொல்றேள் நீங்களும்?'' என்று கேட்டேன் நான் ஆவல் மீற.

"பாவம் மனுஷன் சாது. கொஞ்சம் சங்கோசப்பிராணி! ஏதோ திகிலோ தயக்கமோ சேர்த்து அசட்டுப்பிசட்டு என்று முழிக்க வைக்கிறது!......'' என்ருர் அவர்.

'அவர் பெயர் என்னவாம், சொல்லுங்களேன்!'' என்றேன் 'உஹூம். தெரியாது!......நான் கிட்டப்போய் ஒன்றும் பேசவில்லை!... "என்ருர் அவர். அப்புறம் ஒரு குறும்புப் பார்வையுடன் "ஏன் அந்த ராமனே என்று சந்தேகப்படுகிருயோ?...... சாப்பாட்டு ராமனுகத் தோன்றவில்லை! ஒல்லியாய் உப்னு ஊதினுல் எகிறிப் போகிறவராகத்தான் இருக்கிருர்! ரொம்ப இளைப்பு!'' என்ருர் கணவர்.

"என்னென்னமோ சொல்கிறீர்களே!...எனக்கு எல்லா யோசனையும் தோன்றி என்ன பயன் வீட்டிலே கிடப்பவள் நான்! நீங்கள் கொஞ்சம் யோசனையாய் அந்த ஆசாமி பெயரை விசாரித்து வந்திருக்கக் கூடாதா? நாலுபேருடன் பழகி, நாலு இடத்தில் சுற்றி எத்தனையோ கவனிக்கக்கூடியவர், நீங்கள்!

உங்களுக்குக் கொஞ்சம் சிரத்தையோ அங்கலாய்ப்போ இருந்தால், எங்க ஜானுவின் புருஷனைக்கண்டு பிடிக்க முடியாதா?...போகிறது, அதுதான் முடியாது; இப்படி பெண்டாட்டி விஷயத்தில் அசந்தர்ப்பப் பேச்சில் மாட்டிக்கொண்ட ஆசாமி அகப்படடிருக்கிறாரே, அவரைப் பற்றிக் கொஞ்சம் விசாரிக்கக் கூடாதா? விசாரிக்க முடியாதா? பேஷாக, சிநேக பாவத்தில் நாலும் விசாரிக்க உங்கள் புருஷாளுக்கு என்ன கஷ்டம்!...என்னமோ...என் வேதனைதான் பிரயோசனமற்ற வேதனை, உதவாக்கரை வேதனை'' என அலுத்துக்கொண்டு சொன்னேன் நான்.

எனக்கு நிஜமாகவே ஏனோ அவர் கொணர்ந்த அரைகுறைத் தகவல் கேடடு கோபம் கோபமாக வந்தது.

''அடேயப்பா! கோபம் அந்தச் சேதுராமன் கோபத்தையும் தூக்கியடித்துவிடும்போலிருக்கே!'' எனக் கூறிச் சிரித்துவிட்டார் அவர் தூக்கிப் போட்டது என்னை.

“என்ன என்ன, சேதுராமனா?... அப்படித்தான் அவன் கல்யாணப் பத்திரிகையிலே பெயர் போட்டிருந்தது போலிருக்கே!' என வியப்புற்றுக் குதித்தெழுந்தேன் நான்.

“என்னென்ன விசாரித்து வந்தீர்கள், சொல்லுங்களேன்!'' எனக் கெஞ்சினேன் அவரை.

உண்மையில் அப்போது அவருக்கு வேறு தகவல்கள் தெரிந்திருக்கவில்லை இரண்டுநாள் கழித்து உத்ஸாகத்துடன் வந்தார்.

அன்றைக்கு மீண்டும் பாலு அந்த மனுஷரை அழைத்து வந்திருந்தார் கிளப்புக்கு என் கணவர் இரண்டு பேரையும் தனியாகச் சந்தித்து தன் வேலையைத் துவக்கிவிட்டாராம்.

“பாலு! என் மனைவிக்கு ஒரு நிலைக்கண்ணாடி வேணுமாம்!...வாங்கணும்!...கடைக்கு எப்போ போகலாம்!...என்று பாலுவைக் கேட்டாராம். சேதுராமன் ஒரு மாதிரி துணுக்கமாக தன்னைப் பார்த்துவிடடு, சமாளித்துக்கொண்டு சும்மாயிருப்பதைக் கவனித்தாராம்

எப்போதும் என் கணவருடன் கூடமாட எதிலும் நிற்பவர் பாலு, அதனால் ‘உம், போகலாம் நாளைக்கே!'' என்றார்

நீங்களும் வாங்கோ சார்'' என்று சேதுராமனை அழைத்திருக்கிறார் என் கணவர், அடுத்தாற்போல.

“வேண்டாம் சார்!”, “வேண்டவே வேண்டாம் சார்!'' “எனக்கும் கண்ணாடி சமாசாரத்திற்கும் ரொம்பதூரம். சார்'' என்றெல்லாம் அவர் மூன்று, நான்கு தடவை சொன்ன பிறகு, அதுவரை அவரையும் வரணுமென்று வற்புறுத்திக் கொண்டுவந்த என் கணவர் ‘ஏன் சார் பாாத்தால் கண்ணாடிக்கும் உங்களுக்கும்தான் ரொம்ப சம்பந்தம் இருக்கும்போலே எனக்குத்தோன்றுகிறது!...அதனால்தான் வரச்சொல்கிறேன்'' என்றாராம்.

“அப்படியென்றால்?...” என்று மிரண்டு கேட்டாராம் அந்த மனுஷன் பாவம்!

என் மனைவியின் சிநேகிதி, ஜானகி கண்ணாடி வந்தது குடும்ப சுகத்தைக் குலைக்க என்று அதை விற்றுவிட்டு, இப்போது கண்ணாடிப் பேச்சு எடுத்தாலே நடுங்குகிறாளாம்!... அதுபோலத்தான் நீங்களும் ஏதாவது வெறுப்பு வைத்திருக்கிறீர்களா கண்ணாடியென்றால்?...'' என்று என் கணவர் மெல்ல தாக்குதலைத் துவக்கிவிட்டார்!

“என்ன சார்!...உங்களுக்கு எப்படித்தெரியும்?...'' என்று பதறிப் போய்விட்டார் ஆசாமி!

என் கணவரும் பிடியை விடாமல் முடுக்கி முடுக்கி உண்மையைப் பொழிய வைத்துவிட்டார் சேதுராமனிடமிருந்து. அவர் ஜானுவின் புருஷர்தான்.



“ஏன் சார், உண்மையைச் சொல்லுங்கள்! கண்ணாடியை வாங்கிக் கொடுத்துவிட்டு, அதையே சாக்காகக் கூறி, அசல் ராமனைப்போல் “பிறந்தகத்திற்குக் கல்யாணம் பார்க்கப்போ!'' என்று நயமாக அனுப்பி பிறகு ஏற்க மறுத்தவர் நீங்கள் தானே!'' என்று என் கணவர் நேருக்கு நேர் கேட்டுவிட்டதும் சேதுராமன் உண்மை எதுவும் ஒளிக்காமல் கூறிவிட்டாராம்.

“என்னைவிட கண்ணாடி ஒசத்தியா அவளுக்கு என்று கண்ணாடி வாங்கு முன்பே தோன்றிற்று சார்! பிறந்தகம் போய் இருந்துவிட்டு வருகிறேன், கண்ணாடி வாங்க கையில் பணம் சேரும் என்று அவன் சொன்னபோதே இபபடிச் சொல்கிறாள். நான் ஒண்டியாய்த் திண்டாடுவேன் என்று நினைக்கிறாளா என்ற மனத்தாங்கல்தான் சார், எனக்கு! போகிறது. ரொம்ப ஆசைப்படுகிறாளே என்று வாங்கி விட்டேன் ஆனால் அப்புறமும் எனக்கு ஏனோ அந்தக் கண்ணாடி மேலே அருவருப்பு குறையவில்லை! கண்ணாடி எதற்கு, சார்? சொந்த உருவத்தைப் பார்த்துக்கொள்ள! அவளுக்கு கண்ணாடி மேலே மோகம் என்றால் என்ன அர்த்தம், சார்? தன் உருவத்தின் மேலே தனக்கே மட்

டற்ற மோகம், பெருமை என்று அர்த்தம்! "இப்படி நினைக்கலாமா?" என்று அந்தக் கோபமும் சேர்ந்தது சார்?......என்னெதிரில் அவள் கண்ணாடிப் பித்தாகி நடந்துகொள்ளாவிட்டாலும், முந்தி அப்படி இருந்தவள் தானே என்று எனக்குப் பிடிக்கவில்லை சார்!......எனக்காகத் தவிர்க்கப் பார்க்கிறுளே. தவிர, மனதில் அவளுக்குப் பழையவெறி, தான் தன்னழகு என்ற எண்ணம் இருக்காதா என்று எனக்கு எண்ணம், சார்! அவளுக்குக் கண்ணாடி வெறி போகப் பண்ணனும் என்று தோன்றிற்று சார்!......அதனுல் அவளைப்பிறந்தகம் அனுப்பிவிட்டு, அப்படிக் கடிதமும் எழுதிப் போட்டுவிட்டு, வேலையை விட்டு விட்டு அந்தக் குடித்தனத்தை கலைத்து விட்டேன் சார்!......எனக்கு தெலுங்கு ஜில்லாவில் வேலைக்கு ஆர்டர் வந்ததும்தான் அவ்வளவும் செய்தேன்......ஆனுல் அங்கே இருந்தாலும் நம் தமிழ் நாட்டுக்குக் கிட்ட இருந்ததால் மனசு சாந்தியாய் இருக்கவில்லை என்று, மூன்று மாசத்திற்குமுந்தி இந்தப் பக்கத்துக்கு வந்துவிட்டேன் சார்!......என்னமோ என் அப்பா. அம்மாவுக்கும் ஒன்றும் தெரிவிக்கக் கூடாது என்றும் மனதில் பிடிவாதம் இருந்தது சார்!...... இந்தப் பக்கமே நாடோடியாய் சுற்றுகிறேன்!...இப்பத்தான் என்னுலே எத்தனை பேர் மனசு புண்பட்டு விட்டதோ என்று கவலை வந்தது சார்!—பானு வீடு கிடைச்சிருக்கு என்று சொன்னதிலிருந்து ஆலோசனை தான்—ஆனுல் இதற்குள் அவள் மனசு மாறியிருக்குமா என்ற சந்தேகம் சார்!—இப்போ—"

சேதுராமன் உண்மையைச் சொல்லிவிட்டதும், "ஜானு தற்கொலை பண்ணிக்கொண்டு விட்டாளாமே. ஐயா!" என்று சொல்லி அவரை இன்னும் கொஞ்சம் அழ அடிக்கத்தான் தோன்றிற்றும் என் கணவருக்கு. ஆனுல அவர் பரிதாபமாய், "சார், சார்" என்று சங்கதிக்கு ஒரு 'சார்' போட்டுப் பேசவே அவர்மீது அனுதாபம் கொண்டாராம்! ஒரு நல்ல ஏற்பாடு செய்துவிட்டு வந்து சேர்ந்தார்.

ஜானுவை விரைவிலே அழைத்து வந்து குடித்தனம் அமர்த்தி மண வாழ்க்கையைத் தொடரும்படி, சேதுராமனுக்கும் மகிழ்ச்சியூட்டும் அந்த ஏற்பாடுதான் செய்துவிட்டு வந்தார்

உடனுக்குடனே பேனுவும் கையுமாக, பேப்பரும் மேஜையுமாக அமர்ந்தேன் ஜானுவுக்குக் கடிதம் எழுத.

அந்தக் கண்ணாடியை வாங்கினதும் சந்தோஷித்து பிறகு வருத்தத்திலே மூழ்கிய ஜானுவுக்கும் தமிழ்நாடு போனதும், என் பிறந்தகத்தின் நன்னிலத்தை மிதித்ததும் மகிழ்ச்சியுற்று பிறகு வேதனையிலே மூழ்கிய எனக்கும் அனுபவம் எப்படியிருந்தது? பானகமோ, இளநீரோ என்று ஆவலுடன் எடுத்துக் குடித்த நீர் எட்டிக்காயாக கசக்கும் பண்டமாச்சே என்ற ஏமாற்றமே குடிகொண்டிருந்தது!......ஆனுல் அந்த கசப்புபண்டம் மருந்தாகி நல்லதே செய்ததல்லவோ?

"தமிழ்த்திரு நாடுதனைப் பெற்ற தாயென்று கும்பிடடி!" என முணுமுணுத்தது என் உள்ளம். ஆனுல் எழுதினது வேறு.

"என்னதான் தாய்நாடு. தாய் வீடு என்று பெண்கள் உள்ளம் ஆர்ப்பரித்தாலும். அவர்கள் அந்தரங்கம், "கணவனிருக்குமிடம் சொர்க்கம்!" என்று தானே பறையறைகிறது ஜானு!...வா!...நீயும்என்னைப்போல இங்கே மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்த வா!" என்றுதான் நான் எழுதினேன் என் அந்தரங்கம் எழுதச் சொன்னது

மாசு மரு நீக்கப்பட்டு புது மெருகு கொண்ட கண்ணாடிபோல் முகம் ஒளி வீச துலங்குகிறுள் ஜானு. அந்த மகிழ்ச்சி ஒளியிலே நாங்கள் 'எங்கள் இருவர்' உருவத்தைப் பார்த்துக் கொள்கிறோம்.

ஆனுல்—என் மனதைக் கொள்ளை கொண்டு எனக்குப் பெருமிதம் அளிப்பது, அந்த ஒரு காட்சிதான்.

ஒரு அழகிய புதுநிலைக் கண்ணாடிக்கெதிரே ஜானுவை நிற்க வைத்து அவள் தலையில் தானே பூவைச் செருகிவிட்டுக் கொண்டே, கவிழ்ந்திருக்கும் அவள் முகத்தை கண்ணாடி தனக்குப் பளிச்சென்று எடுத்துக் காட்டுவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார் சேதுராமன், நான் அங்கு போனபோது!

"வேண்டும்!" என்று அவள் கேட்டு அவர் வாங்கிய அந்தக் கண்ணாடி அளித்த பலனுக்கு நேர்மாறுன பலனைத்தான், "வேண்டாம்!" என்று அவள் மன்றுடியும் அவர் வாங்கி விட்ட இந்தக்கண்ணாடி அளித்து வருகிறது என்பதைச் சொல்லித் தானு அறியலாம்?

"கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டும்!" என்று சொல்லக் கூடியவர்கள் வேணுமானுல் நேரில்போய்ப் பார்த்துவிட்டு வரலாம்!

"கண்ணாடி ஆசை" செய்த விபரீதத்தை ஆசைக் கண்ணாடி" ஓட்டி விட்டது என்பதைக் கண்டு வியந்து வரலாம்!

ஆனுல், நான் பெருமைப் படுவது போல யாரும் பெருமிதப்பட முடியாது!

நான் முன்பு என் கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடவில்லை. டாக்டரை நாடும்படி இருந்தது! ஆனுல், என் தோழி ஜானுவின் வாழ்க்கையில் கண்ணாடி செய்த துன்பத்தை நான் என் கணவரின் ஒத்துழைப்பால் சுவடு தெரியாமல் அகற்றிவிட்டேன்!......எனக்குப் பெருமையிராதா?



தேர்த்தட்டு வார்த்தை

'குருசரண்'

வாரன்

'**த**காத விஷயங்களைச் சிந்திப்பதிலிருந்து அவற்றில் பிரியம் உண்டாகின்றது அது படிப்படியாகத் தன் வம்சத்தை விருத்தியாக்கிக் கொண்டே வந்து ஜீவாத்மாவினால் எளிதில் விலக்க முடியாத பெருங்கேடாய்ப் பெருகி விடுகிறது' என்று கண்ணன் ஜீவாத்மாவின் விரோதி பரம்பரையின் தன்மையை எடுத்துக் காட்டினார் அல்லவா? அதை ஊன்றிக் கவனித்தால் விஷய சிந்தனைக்கிடம் கொடுப்பதும் இடம் கொடாதிருப்பதும் ஒருவன் (ஜீவாத்மா) வசமே இருப்பது நன்கு தெரிய வரும் அதுவே (சிந்தனையே) பெருங் கேட்டிற்கு அஸ்திவாரமாயிருப்பதால், 'துன்பத்திற்குப் பொறுப்பாளி பகவான்' என்றோ 'விரோதியை உண்டாக்குபவன் பரம்பொருள்' என்றோ வாதம் செய்து சோம்பி இருப்பதிற்கிடமில்லை இக்கருத்தைத்தான் காலஞ்சென்ற தேசீய கவி நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை என்று அழுத்தமாக அழகாக வெளியிட்டார் ஜீவாத்மாவே பொறுப்பாளியாயிருப்பதால், ஒவ்வொருவரும் தம் மனத்தைத் தகாத விஷய சிந்தனையில் செலுத்தாதிருக்கவேண்டும். அத்தகைய சிந்தனையைத் தூண்டும் சம்பவங்களை நிகழ்ச்சிகளைக் கூடியவரை விலக்க வேண்டும். தகாத சிந்தனையைத் தூண்டுபவைகளாய், விலக்க முடியாமல வரும் சம்பவங்கள் பலருக்குப் பலவிதமாய் நேரலாம். அக்காலங்களில் மனம் விஷயங்களில் பிரவேசிக்கின்ற இந்திரியங்களைப் பின்பற்றிச் சென்று விடவும் செய்யலாம். தவறான முறையில் பொருள் சம்பாதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. வியாபாரி அவ்வழிகளில் பொருள் தேடவேண்டுமென்று கனவிலும் சிந்திக்காதிருந்திருக்கலாம். அரசாங்க அதிகாரியும் அவ்வாறே சிந்தியாதிருக்கலாம். அரசாங்க

20

உலகின் இரவு யோகியின் பகல்

★

சட்டத்திற்கு விரோதமாக, ஒருவன் தனக்குரிய அளவிற்குமேல் ஒரு சாமானைப் பெற வேண்டுமென்று வியாபாரியிடமோ அதிகாரியிடமோ போய் மிகுந்த பணத்தைக் காட்டித் தகாத விஷய சிந்தனையைத் தூண்டலாம் சிந்தனையில் இறங்கினால் பிரியம், அதிலிருந்து ஆசை என்று படிப்படியாகப் பெருங்கேடு வரை பெருகிவிடும் அத்தகைய தூண்டுதல்கள் ஏற்படும காலங்களிலும் மனம் விஷயங்களைப் பற்றிச் செல்லும் இந்திரியங்கள் வழிச் செல்லாதிருக்க வேண்டும். மனம் இந்திரியங்களைப் பின்பற்றினாலும் விவேகம் மனதைப் பின்பற்றாமல் அடக்கித் தன் சுவாதீனத்தில் வைத்திருக்கப் பழக்கப்பட்டிருக்கவேண்டும் அடிக்கடி தியானத்தில் ஈடுபடுபவனுக்கே இந்திரியங்களைப் பின்பற்றும் மனதினால், விவேகத்தை இழக்காமல் மனதைத் தன் சுவாதீனத்தில் அடக்கிவைக்க முடியும். ஆத்மதயானம் செய்ய முடியாதவர்கள் எல்லாரும் பிரதிதினமும், கால்மணி அல்லது அரை மணி நேரமாவது விழித்திருக்கும் காலத்தில், தகாத விஷய சிந்தனை தவிர்ந்து தக்கதில் மனதை நிறுத்தவேண்டும். தியானம் ஒழுங்குபட்ட பிரார்த்தனையுப துணை செய்யும். ஆராதனை அல்லது பூஜையும் நியமமாகச் செய்யப்படின். தியானத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.

தியானத்தாலோ யோகத்தாலோ இந்திரிய சுவாதீனம் ஏற்பட்டாலொழிய. ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்படுவதற்கில்லை. அதில்லாமல் ஆத்மத்யானம் இல்லை. ஆத்மத்யானம் அற்றவனுக்கு ஆத்மாவிடம் மனம் நிற்பதில்லை. அவனுக்கு மெய்யான சுகம் என்பதில்லை கடலில் செல்லும் கப்பலை இழுக்கும் காற்றுப்போல் விஷயங்கள் இந்திரியங்களை இழுக்கின்றன இந்திரியங்கள் மனதை இழுக்கின்றன அம்மனம் விவேகத்தை இழுத்துச் செல்கிறது. ஆதலால், விஷயங்களினின்றும விடுவிக்கப்பபட்ட இந்திரியங்களையுடையவனுக்கே, ஞானம் நிலைத்திருக்கிறது அத்தகைய ஞானயோகிக்கு இரவும் பகலும் உலகினரைப்போல் சூரியனைப் பொறுத்து ஏற்படுவதில்லை என்று அடுத்தபடியாகச் சொல்கிறார்:

யாது உலகர்க்கு இருள் இரவாம்
ஆங்குணர்ந்து
போதம் மருவும் புலன் வென்றான்—
ஏதில்
உணர்வுறுவர் ஈங்கிவர்கள்
உற்றுணர்ந்த யோகிக்கு
இணர்இல்லா தாகும் இருண்டு.

(இ-ள்) உலகர்க்கு—உலகிலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் யாது இருள் இரவாம்—எது எந்த ப்ரும்ம நிஷ்டை) இருள் நிறைந்த இரவோ (இரவு போன்றதோ) ஆங்கு—அதில் (அந்த ப்ரும்ம நிஷ்டையில்), புலன் வென்றான்—இந்திரியங்களை அடக்கிய யோகி போதம் மருவும்—உணர்வுபெற்று விழித்திருப்பன், ஏதில் இவர்கள் உணர்வு உறுவர்—எப்பொழுது உலகினர் உணர்வுடன் விழித்திருப்பார்கள், ஈங்கு — அப்பொழுதில், உற்று உணர்ந்த யோகிக்கு — ஆத்மஸ்வரூபம் கிட்டித் தெளிந்த யோகிக்கு இணர் இல்லாது இருண்டு ஆகும்—சுடர் (ஒளி) இல்லாமல் இருண்ட இரவு போன்றதாகும்:

4
யா நிசா ஸர்வ பூதாநாம்
3
தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ
3 4
யஸ்யாம் ஜாகர்தி பூதாநி ஸா
நிசா பஸ்யதோ முநே:

(இ-ள்) யா—எந்த ப்ரும்ம நிஷ்டை யானது (ஆத்மஞானமானம்) ஸர்வ பூதானாம்—எல்லாப் பிராணிகளுக் கும், நிசா—இரவோ, தஸ்யாம்—அதில், ஸம்யமீ—யோகி, ஜாகர்(த்)தி—விழித்திருக்கிறான், யஸ்யாம்—எந்த (சப்தாதி விஷய புத்தியோடு கூடிய) காலத்தில், ஸர்வாணிபூதானி—எல்லாப் பிராணிகளும், ஜாக்ரதி—விழித்திருக்கின்றனவோ, ஸா—அது பச்யத: முநே:ஆத்ம தரிசனமபெறற யோகிக்கு, நிசா—இரவு (இரவு போல்).

அர்ஜுனன் 'ஆத்மக்ஞானி எவ் விதம் இருப்பான்?' என்று கேட்ட கேள்விக்கு விடையாகக் கண்ணன் இவ்வளவு தூரம் சொல்லிவந்து, கடைசியில் இப்பகுதியில், ஆத்மக் ஞானம் பெறுமல் அஞ்ஞான தசை யில் இருக்கும் சாமானியரால் அறிந்துகொள்ள முடியாத நிலையிலே, ஞானயோகி இருப்பதாகச் சொல்லு கிருர். ஆத்மாவிடம் நிலைத்த புத்தியையுடைய யோகியின் பேச சும் நடையும் வியவகாரமும் உலகி னரையொத்து இருக்கலாம். அது யோகியின் சமாதிநிலையைச் சிறிதும் பாதிககாது. யோகியின் சமாதிநிலை அல்லது பிரும்ம நிஷ்டை உலகின ருககு இருள்போன்றது. அதைப பற்றி அவாகளுக்கு ஒன்றும் தெரி யாது. அவாகள் இருக்கும் அஞ் ஞான தசையில் இருந்தபடியே, பிரும்ம நிஷ்டையின் தன்மையைத் தெரிந்துகொள்ளவும் முடியாது. மனத்தைக் கொண்டு இந்திரியங்க ளால் விஷயங்களைக் கிரகித்து உணருவதே உலகினருக்கு ஞான தசை; பகல். ஞானிககு ஆத்மாவில் லயித்த புத்தியோடுகூடிய ப்ரும்ம நிஷ்டையே ஞானதசை: பகல். ஒரு வர்ன் பகல் மற்றவருக்கு அதனல் இரவாகவே இருக்கும். ஞானியும் ஒரு காலத்தில் உலகினரைப்போல் அஞ்ஞான தசையில் இருந்தவன் தான் என்றாலும் ஆத்மக்ஞானம் கிட்டியபின் அவன் மனம் உலக விஷயங்களில் பிரவேசியாது. ஆத்மக் ஞானம் இன்றிச் சென்ற காலங்கள் எல்லாம் இரவாகவும், ஞானம் கிட டிய காலமுதலே மெய்யான பகல் வந்ததாகவும் தோன்றும். இதை அனுபவத்தால் உணர்ந்த பெரியோர் வாக்கினல் அறியலாம்.

கடல் நீரால் நிறைந்து இருக் கிறது. நிலையான இருப்புடையது. எவ்வளவு நதிகள் வந்து சேர்ந் தாலும் அதன் நிலை பாதிக்கப்படுவ தில்லை.

அவ்வாறே, ஆத்மக்ஞானத்தால் திருப்தியடைந்த ப்ரும்ம நிஷ்டனை ஸகல உலக விஷயங்களும் போய்ச் சேரலாம். ஆசையும் அகங்காரமும் அற்ற அந்த ஞானயோகியை அவை பாதிப்பதில்லை. ஆத்ம சாந்தி குலைவ தில்லை. அத்தகையவனே மோக்ஷத் தை அடைகிறன் என்று சொல்லி, அர்ஜுனன் மனதில் பதியவைப்ப தற்காகக் கண்ணன், ஞான நிஷ்டை யைப் பெருமையாகவும் சுருக்கமாக வும் மறுபடி ஒரு சுலோகத்தால் கூறுகிறர்.

இதுகாண் பிரமம் எனும்
இவ்வுயிரின் தன்மை
இதுகாண்பெறின் மயக்கம்
எய்தான்—இதுதன்னில்
அந்தகா லத்துஅமர்ந்
தும் பிரமா னந்தமெனும்
சந்தமாம் தன்மை பெறும்.

(இ-ள்) இ உயிரின் பிரமம் எனும் தன்மை—இந்த உயிரினுடைய, ப்ரும்மஞான நிஷ்டை, இதுகாண்—இதுவரை சொலலப் பட்டது; இது காண்பெறின்—இப் பிரும்மஞான நிஷ்டையை அடைந் தால், மயக்கம் எய்தான்—(ஒருவன் மறுபடி) ஸம்ஸார மோஹத்தை அடையமாட்டான், இது தன்னில்—இந்த நிஷ்டையில் அந்த காலத்து அமர்ந்தும்—(மரண) அந்த காலத் தில் (சிறிது நேரம்) இருந்த போதி லும் சந்தமாம் பிரமானந்தம் எனும் தன்மை பெறும்—(உயிர்) சிறந்த தான ப்ரும்ம நிர்வாணம் என்ற நிலையைப் பெறும்.

3 2 2
ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த
நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி
2
ஸ்தித்வாஸ்யா மந்தகாலேபி
3 1 2
ப்ரஹ்ம நிர்வாண மருச்சதி.

இச் சுலோகத்திற்குப் பல பெரி யோர்கள் விரிவாக உரை எழுதியுள் ளார்கள். (ஸ்ரீதரர்) 'ஏற்கனவே சொல்லிய ஞான நிஷ்டையை, பின் னும் சிறப்பாகச் சொல்வதற்காக, அதை இந்தச் சுலோகத்தில் சுருக்கிக் கூறுகிறர். பரிசுத்தமான அந்தக் கரணங்களோடு கூடிய புருஷன் பரமேச்வர ஆராதனத்தாலே ப்ரும் மக்ஞான நிஷ்டையை அடைந்தால் மறுபடி ஸம்ஸார மோகத்தை அடைந்து பிறப்பதில்லை. மரண காலத்தில்கூட க்ஷண நேரமாவது இந் நிஷ்டையில் இருப்பவன் பிரும மத்தில் லயமடைகிறன் என்றால், இளமைப் பருவத்திலிருந்தே பிரும்ம நிஷ்டையிலிருப்பவன், ப்ரும்ம நிர் வாணம் அடைகிறன் என்று சொல்ல வேண்டியது அவசியமா?'

மரணந்த காலத்தில் சிறிது நேரம் ப்ரும்ம நிஷ்டையிலிருந்து மோக்ஷம் அடையலாம் என்பதற்கு, பாகவதத்தில் சொல்லப்பட்ட ராஜ ரிஷியான கட்டுவாங்கனை உரை யாசிரியர் திருஷ்டாந்தமாகக் காட்டு கிருர். இவ்வரசன் தேவர்களால் தனது மரண காலத்தை முன் கூட்டியே தெரிந்துகொண்டான். மரண சமயத்தில் சிறிது நேரம் இந் நிஷ்டையிலிருந்து முக்தியை அடைந் தான் இது புராண உலகில் பிர சித்தமான கதை.

இச்சுலோகத்தில் வந்த 'அந்த காலே' என்ற தொடரைத் தமிழ்ப் பாடலில் அப்படியே எழுதிவிட்டார். இத்தொடருக்கு (ச), (ஸ்ரீத), (ராமா) ஆகிய உரையாசிரியர்கள் 'மரண காலத்தில்' என்று பொருள் கூறியிருக்கின்றனர். இச்சுலோகத் திற்கு உரை எழுதுவதுபோலவே கண்ணனிடம் பரம பக்தி கொண்ட பெரியாழ்வார் பத்து பாடல்கள் கொண்ட ஒரு பதிகமே பாடிவிட் டார். சங்கரர் முதலிய உரையாசிரி யர்கள் கொண்ட பொருளின் பொருத்தம் ஒரு பாடலைமட்டும் படிக்கும்போதே தெரியவரும்.

ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகி
அன்னை, அத்தன் என் புத்திரர், பூமி,
வாசவார் குழலாள்' என்று மயங்கி
மாளும் எல்லைக்கண் வாய் திறவாதே
கேசவா! புருடோத்தமா! என்றும்
கேழல் ஆகிய கேடிலீ! என்றும்
பேசுவார் அவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் நம் பரம் அன்றே

[அத்தன்—தந்தை, வாசவார் குழ லாள்—வாசனை ஊட்டிய நீண்ட கூந்தலுடைய பெண், அதாவது மனைவி, மாளும் எல்லைக்கண்—மரண காலத்தில், கேழல் ஆகிய கேடிலீ—வராகவதாரம் செய்த கேடில்லாத வனே, நம் பரம் அன்றே—நம் சொல் லுக்கு அடங்காது அப்பாற்பட்டது.

த்வைதபரமாக வியாக்கினம் செய்த ராகவேந்திர ஸ்வாமிகள் 'அந்த காலே' என்பதற்கு வேறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர். 'ஜனன கால முதற்கொண்டே மரண காலம் வரையில் பிரம்மஞான நிஷ்டையில் இருந்தால்தான் மோக்ஷம் ஸித்திக்கும்!

ஸாங்கிய யோகம் என்னும் பெய ருடைய கீதை இரண்டாவது அத் யாயம் இச்சுலோகத்தோடு முடி வடைகிறது ஒவ்வொரு அத்யாயத் திலும் பல பொருள்களைக் கண்ணன் சொல்லியிருக்கிறர். ஒரே பொருளைப் பலவிதங்களிலும் தெரிவித் திருக் கிறர் படிப்போருக்கு தாங்களே அவற்றையெல்லாம், ஒரு சேரத் தொகுத்து மனதில்வைப்பது கஷ்ட மாயிருக்கும் என்பதை வெகு காலத்திற்கு முன்னே பல பெரி யோர் அறிந்துகொண்டனர். பரோப காரமாக வேண்டி ஒவ்வொரு அத் யாயத்தின் சாரத்தையும் சுருக்கி வெளியிட்டனர். பாத்ம புராணம் ஒவ்வோர் அத்யாய பலனையும் கதை யாகத் தெரிவித்தது ஸாரத்தையும் பலனையும் பிறகு காண்போம்.



அறுவடையின்போது மழை பெய்யும் வழக்கம் உண்டு. இம் மழை சில சமயங்களில் நாடு முழுவதிலும் பரந்த அளவில் பஞ்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் மிகப் பெரிய தேசீய விபத்தென்ற தன்மையையும் எய்தி விடுகிறது அறுவடையின்போது மழை பெய்வது விவசாயியின் மனதை உடைததும் விடுகிறது.

ஆனால் இனி, விவசாயிகளுககு அக்கவலை வேண்டாம் சமீபத்தில் பிரிட்டனில் கண்டுபிடிக்கப் படடுள்ள ஒரு இயந்திரம் விவசாயியின் பிரச்னைக்கு வழி காட்டுகிறது ஒப்பர் மேன்ஸ் மொபயில் அண்ட் ஸ்டேஷனரி கிராஸ் டிரையர் என அழைக்கப் படும இச்சாதனம் மணிக்கு 336-448 ராததல் நிறையுள்ள கதிர்களை உலர வைக்கக்கூடியது. இந்த இயந்திரம் டீசல் அல்லது காஸ் எண்ணெயில் வேலைசெய்ய முடியும். மேற்படி யந்திர ததின் தோறறமும அதன் வேலைகளையும் காட்டும் படங்கள்.



சிறு விளம்பரங்கள்

உயர்ந்த ஜவுளிகள்
கிடைக்குமிடம்

V. N. சுப்ரமணிய அய்யர் ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

•

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

லெப்பர் க்யூர்

18 வகை குஷ்டங்கள். வெண் குஷ்டம். ரேகை தழும்புகள். திமிர். முதலிய சர்மவியாதிகளுக்கும் சவாய். கனேரியா. முதலிய வற்றிற்கும் உத்தரவாத சிகிச்சை. விவரங்களுக்கு

லக்ஷ்மி & கோ
ரிஜிஸ்டர்ட்

H.O. வால்டேர் R.S. போஸ்ட்

2/135 மிண்ட் ரோடு (?) Opp. P.S. No. 137 மதராஸ்

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு பித்தம், காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக் கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது பத்தியமில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனாம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)

189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திட சாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

இதில் வசீகரண மூலிகை பிரதி ஸாஸ்திரம ஸ்ரீ தன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருப்பதால் ஸகல விதமான பலன்கள் அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. கவசம் 1-க்கு ரூ. 3. (கேட்லாக் இனாம்) ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

ஆனந்த பற்பொடி ஒர்க்ஸ், மதராஸ் 4.

சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம் கணிக்க ரூ 2 சக்தி கவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

அறிவிப்பு

★

மாயவரத்தில் எமது ஜவுளிக்கடையை 10-3-49 முதல் காளியாக்குடி லாட்ஜ் காபி கிளப்புக்கு எதிர்புறம் மாற்றப்பட்டிருக்கிறபடியால் அன்பர்களனைவரும் விஜயம் செய்து வேண்டியவற்றை வாங்கி ஆதரிக்க கோருகிறேன்

V. S. ராமஸ்வாமி
(S/o. V. N. S. Iyer.)

Prop :

ஸ்ரீகாமகோடி வஸ்த்ராலயம்

பட்டமங்கலத் தெரு,
மாயவரம்.

•

H.O. சுப்பிரமணிய விலாஸ்
பெரிய தெரு. கும்பகோணம்.



> 'ஓடி விளையாடு பாப்பா,
> நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'
>
> —பாரதி.

விளையாட்டு குழந்தையின் உடன் பிறப்பு இயற்கையின் வரப்பிரசாதம் பாலகிருஷ்ணனை அன்னை யசோதை மர உரலில் கட்டிப்போட்டடும், குழந்தை விளையாட ஆரம்பித்துவிடுகிறது நீங்கள் என்ன செய்தாலும் அதைத் தடுக்க முடியாது—தடுக்கவும் கூடாது குழந்தையின் சரீர. அறிவு மனோ வளர்ச்சிக்கு விளையாட்டு இன்றியமையாதது விளையாட்டைப் பலர் பல விதமாக விளக்கி இருக்கிறார்கள் குழந்தையின் தேகத்திலிருக்கும் அதிக சக்தி வெளிவர ஒரு வழியாகவும்; தன் பிற்கால வாழ்க்கைக்கு குழந்தை தான் உணராமலே செய்து கொள்ளும் முன்னேற்பாடாகவும்; ஏன் குழந்தை மனித குலத்தில் சரித்திரத்தையே திருப்பிச் செய்கிற காரியமே விளையாட்டு என்றுகூட சிலர் வியாக்கியானம் செய்கிறார்கள்.

குழந்தைகள் விளையாடுவது அவசியமானால் அதற்கு விளையாட்டுக் கருவிகளும் அவசியமாகும் இக்கருவிகளை வெறும் பொழுதுபோக்கும் சாதனங்களாக மட்டும் தற்போது கருதுவதில்லை. அவை குழந்தையின் சரீர. மனோ வளர்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாகும் ஆகவே பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குப் பள்ளி தேர்ந்தெடுப்பதிலுள்ள கவனத்தை விளையாட்டு சாமான் வாங்குவதிலும் காட்ட வேண்டும் குழந்தைக்கு நேரம் போவதற்காக மாத்திரம் விளையாட்டுக் கருவிகள் இருத்தல் கூடாது அத்துடன் அவன் முன்னேறி வளரவும் தானாகவே செய்து கற்றுக்கொள்ளவும் அவை உதவவேண்டும் குழந்தை தானே விளையாடும்படியான ஓர் சூழ்நிலையை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுப்பது வெகு அத்யாவசியமானது ஆனால் குழந்தைதானே விளையாடித்தான் அனுபவம் பெற வேண்டும். இதை முதலிலேயே பெரியவர்கள் தெரிந்துகொள்வது வெகு முக்யம்.

விளையாட்டுச் சாமான் வாங்கிக் கொடுப்பதற்கு அடுத்தபடியாக செய்யவேண்டிய முக்யமானதொரு காரியம், வாங்கின சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொள்ள இடம் வசதி செய்து தருவது இதற்கு ஒரு சிறிய அலமாரியோ, பெட்டியோ, கூடையோ. எதுவானாலும் சரி. போதும். ஆனால் குழந்தை விளையாடி முடிந்ததும், சாமானை ஒழுங்காக அதன் இடத்தில் வைத்துவிட வேண்டுமென்பதை மட்டும் 'உணரும்படிச் செய்யவேண்டும சுமார் இரண்டு வயதுவரை இக்காரியத்தை பெரும்பாலும் பெரியவர்கள்தான் செய்யவேண்டும் ஆனால் அதற்குப பிறகு இதை குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்து விடலாம். நாளடைவில் சுயமாகவே இதைச் செய்யும் ஆற்றல் குழந்தைக்கு வந்துவிடும் இதற்காக குழந்தையை அடிக்கவும் திட்டவும் வேண்டியதில்லை இதையும் ஒரு விளையாட்டென்றே குழந்தை கருதும்படி செய்வது உங்கள் சாமர்த்தியம். என்ன சொன்னாலும் குழந்தை கேட்கவில்லை என்றால் கடைசியாக ஒரு வழி இருக்கிறது இது பலனளிக்காமல் போகாது குழந்தை குறிப்பிட்ட சாமானை அதனிடத்தில் சேர்ப்பிக்கத்தவறினால், மறுமுறை விளையாடும்போது அச்சாமான் கிடைக்காது என்று கண்டிப்பாகத் தெரிவித்து விடுங்கள். ஓரிருமுறைக்குப பிறகு அவன் நீங்கள் சொல்லாமலேயே ஒழுங்காகத் தன் விளையாட்டுக் கருவிகளை வைத்து விடுவான் குழந்தைகளுக்கு சீக்கிரமே ஒழுங்கு, முறை, சுத்தம் கீழ்ப்படிதல் போன்ற குணங்கள் தாமாகவே அமைந்து விடும்.

அனேகர் விளையாட்டுக் கருவிகள் வாங்கும்போது குழந்தையின் வயது, அறிவு தேகவளர்ச்சி இவற்றைப் பற்றி சிந்திப்பதே இல்லை ஏதோ அவர்களுக்குப் பிடித்ததும் பணப் பைக்கு ஏற்றதுமாக வாங்கிவிடுகிறார்கள் மூன்றுமாதக் குழந்தையிடம் பத்து ரூபாய் விலை பெறுமான அழகான பொம்மையைக் கொடுத்தால் அதை அலட்சியமாகத்தான் தள்ளும். அதற்குப் பதில் நாலணாவுக்கு ஒரு பெரிய சிவப்பு பலூனை அதன் முன் கட்டுங்கள் உத்ஸாகமாக குழந்தை காலையும் கையையும் ஆட்டிக்கொண்டு பிடிக்க முயலும்

சில செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகளுக்குத் தேவைக்கு அதிகமாகவே விளையாட்டுச் சாமான்கள் இருக்கும். ஒரு விளையாட்டுக் கருவியில் ஊன்றிக் கவனம் செலுத்தி விளையாட குழந்தையால் முடியாது சாப்பாட்டில் சீரான உணவு என்கிறார்களே அதுபோல் குழந்தைகளுக்கு இருக்கவேண்டும்—அதாவது விளையாட்டுக் கருவிகளிலும் தேவையானவையை வேண்டிய அளவில் அளிக்கவேண்டும். அவர்களுக்கு வயது ஆக ஆக. அவர்கள் உபயோகிக்காமல் வைத்திருக்கும் விளையாட்டுக் கருவிகளை ஏழைக் குழந்தைகளுக்கு கொடுக்கலாம். இதில் குழந்தையையும் கலந்து கொண்டு அவன் எந்தச் சாமானை பிறருக்கு அளிக்க விரும்புகிறானோ அதை அவன் கையாலேயே கொடுக்கச் சொல்லவேண்டும் அப்பொழுது சண்டைக்கு இடமே இல்லை வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை சிறு வயதிலேயே அறிய முடிவதோடல்லாமல் தயாள குணமும், பரோபகார சிந்தையும் வளரும்

நாம் வாங்கும் விளையாட்டுக் கருவிகள் குழந்தையின் தேக, மனோ வளர்ச்சிக்கு உதவுவனவாக அமைதல் வேண்டும் என்று முன்பே கூறினோம். குழந்தையின் அறிவை வளர்க்கும் விளையாட்டுக் கருவியானது, அவன் சுயமாகத் தன் மூளை, கை, கால் இவற்றை உபயோகித்து விளையாடும் கருவியாக இருக்குமேயன்றி, அவனுக்காகத் தானாகவே

இயங்கி வித்தை காட்டாது. குழந்தை அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு ஏற்ற விளையாட்டுச் சாமானாக இருந்தால் மாத்திரம் போதாது அவன் வளர்ச்சிக்கு ஒருபடி மேம்பட்டதாகவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அது குழந்தையின் சரீர, அறிவு வளர்ச்சியை மேலே தூண்டும். இழுக்கும் பொம்மைகளும் தள்ளும் வண்டிகளும் குழந்தை தவழ்ந்து. நடக்கக் கற்றுக்கொள்ளும் பருவத்திற்கு ஏற்றவை நன்றாக நடந்து ஓடப்பயின்றபின் இச்சாமான்களில் குழந்தையின் சிரத்தை குறைந்துவிடும். இது இயற்கை அதன் முழுப்பலனை அடைந்த பிறகு அதே சாமானை குழந்தைவைத்துக்கொண்டு விளையாட வேண்டும் என்று பெரியவர்கள் நிர்ப்பந்திப்பது தவறு. அவ்விளையாட்டுக் கருவியினால் ஏற்படும் பலனை குழந்தை அடைந்துவிட்டான். இனி அதனால் அவன் வளர்ச்சி விருத்தியாக இடமில்லை வேறு விளையாட்டுக் கருவிகளை அவன் வேண்டுவது சகஜமே தேவையை உணர்ந்து அறிவுள்ள பெற்றோர் பூர்த்தி செய்ய வேண்டும்.

2

குழந்தைகளின் விளையாட்டில் சாதாரணமாக 6, 7 வயதுவரை ஆண் பெண் என்ற வித்தியாசம் பெரிதாகத் தோன்றுவதில்லை. அதுவரை சேர்ந்தேதான் விளையாடுகின்றனர். பொதுவாக ஆண் குழந்தைகள் ஓடி ஆடும் விளையாட்டுக்களையும் போட்டி, கட்சி விளையாட்டுகளையுமே அதிகம் விரும்புகின்றனர். இதே போல் பெண்குழந்தைகள் சாமான்யமான விளையாட்டுகளிலே ஈடுபடுகிறார்கள் இவர்களுக்குப் பிடித்தவை பொம்மைகள் சொப்பு, கலர் சாக்கு, கத்திரி, பலவித நிறமணிகள், புஸ்தகங்கள் ஆகியவையாகும். ஆண் குழந்தைகளோ சிறு மரக்கட்டைகள் பந்துகள், சிறிய மோட்டார், ரயில் வண்டிகள் போன்றவையே விரும்புகின்றனர். 8 10, வயது ஆகும்போது ஆண், பெண் குழந்தைகளுக்குள் வித்தியாசம் அதிகரித்து வேறாக விளையாடத் தொடங்குகிறார்கள் எனவே சிறு குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான் வாங்கும்போது, குழந்தை ஆணா. பெண்ணா என்பது அவ்வளவு முகயமல்ல.

நாம் வாங்கும் விளையாட்டுச் சாமான் குழந்தையின் தேவையையும், ஆசையையும் பூர்த்தி செய்வதாக இருக்கிறதா என்று முக்யமாகப் பார்க்கவேண்டும். அது குழந்தையின் வயதுக்கு யுக்தமானதா என்பதைக் காட்டிலும், அதன் மனோ வளர்ச்சிக்கு ஏற்றதாகவும், குடும்பத்தின் வாழ்க்கை ரீதிக்கு தக்கதாகவும் இருக்கிறதா என்றே பார்க்க வேண்டும். மேலும் விளையாட்டுக் கருவிகள் எதோ உதவாக்கரை சாமான்கள், குழந்தை சிறிது காலம் உபயோகித்த பின்னர் தூர எறிய வேண்டியவை என்னும் கருத்து மாறிவிட்டால், நாம் அவை வாங்கும்போது முக்யமாகக் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. வாங்கும் விளையாட்டுக் கருவி உறுதியானதும். ஈடு நிற்கக்கூடியதும் அழகாக, நன்றாகச் செய்யப்பட்டதும், குழந்தைக்கு அபாயம் விளைவிக்காததும், சுகாதாரத்துக்கு ஏற்றதாகவும் இருக்கிறதா என்று பரிசீலித்தே வாங்கவேண்டும். சிறந்த விளையாட்டுக் கருவிகளை விவேகத்துடன் தேர்ந்தெடுத்தால் அவை பல ஆண்டுகள் உழைக்கும்

இம்மாதிரி பல வநஷங்கள் உபயோகப்படக்கூடிய விளையாட்டுச் சாமான்களில் சில அடியிற் கண்டவை:—(1) கட்டைகள் (2) பொம்மை (3) பந்து (4) கலைக் கருவிகள் இவை போன்ற விளையாட்டுக் கருவிகளில் எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் விருபபம் இருக்கிறது. அவர்கள் இச்சாதனங்களை பிரயோகிக்கும் முறை வயதுக்கு வயது மாறுகிறதே தவிர, சுவாரஸ்யம் குன்றுவதில்லை மேலும் இவைகளில் குழந்தைகளுக்கு திடீரென்று அசிரத்தை உதிப்பதில்லை அது நாளடைவில் சிறிது, சிறிதாகத்தான் தலைகாட்டுகிறது. உதாரணமாக (1) கட்டைகளை எடுத்துக்கொண்டால் —முதலில் 2-வயதுவரை கட்டைகளை கையில் எடுத்துப் பார்க்கவும் அவைகளை வீசி எறிந்து பொறுக்கவுமே குழந்தை செய்கிறது. மூன்றும் வயது முதலே கட்டைகள் வைத்துக் கட்டத் தொடங்கி விடுகின்றது ஆரம்பத்தில் சிறிய எளிய கட்டிடங்கள். பின்னர் வயது ஆக, ஆக பெரிய கடினமான கட்டிடங்கள் திட்டப்படி கட்ட ஆவல் ஏற்படுகிறது விளையும் பயிர் முளையிலே என்பதுபோல குழந்தைகள் இச் சிறிய கட்டை விளையாட்டில் ஆரம்பித்து பெரிய என்ஜினீயர்களாகவும், கட்டிடக் கலை நிபுணர்களாகவும்கூட ஆகலாம். இவ்விளையாட்டினால் குழந்தைகளுக்குப் பொறுமை நிதானம், முன் யோசனை புதுமோஸ்தர்கள், கண்டு பிடித்தல் போன்ற குணங்கள் தாமாகவே படிந்துவிடும்.

(2) அடுத்தது பொம்மை:— பொம்மையை இரண்டு வயதுவரை கையில்வைத்து அழகு பார்ப்பதுடன் குழந்தை திருப்தி அடைந்து விடுகிறது. மூன்று வயது ஆனதும பொம்மையை தூங்கச் செய்யவும், வண்டியில் உலாவ அழைத்துச் செல்லவும் ஆசை கொள்கிறது வயது நான்கானதும் பொம்மைக்கு உடுப்பு அணிவிப்பதிலும், சோறு ஊட்டுவதிலும் மெய்ம்மறந்து விடுகிறது. 5-வயதானதும் பொம்மையை தங்களுள் ஒன்றாகப் பாவிக்கிறது —'அபபா, அம்மா விளையாட்டு' விளையாடும்போது பொம்மை பாப்பாவாக உயிர்பெற்று விடுகிறது வயது ஆக, ஆக பொம்மைக்குச் சட்டை தைப்பது, சட்டை வெட்டுவது, பூப்போடுவது. புதுமாதிரி நெய்வது விதவிதமாக 'டிஸைன்கள்' சிருஷ்டிப்பது என்று இப்படியாக கற்றறிந்து தங்கள் ஆடைகளையும் கூடத் தைக்க விளையாட்டாக அறிந்து கொண்டு விடுகிறார்கள்.

(3) பந்துகளோவெனில் குழந்தை நீந்தப் பயன்றதிலிருந்து பெரிய மனிதனை பின்னரும் விளையாட்டுகளிலிருந்து மறைவதில்லை பந்துகளைப் போல் மனிதனின் தேகத்தில் வலுவிருக்கும்வரை உபயோகப்படும் விளையாட்டுக்கருவி வேறெதுவுமே இல்லை என்பது என் துணிபு பாலர் முதல் நடுவயதினர்வரை சகலரும் விரும்பும் பொருளது.

பொம்மை வீடுகள், சொப்புகள் முதலியவற்றை 10 12 வயதுவரை பெண் குழந்தைகள் வைத்து விளையாடுகிறார்கள். இதேபோல் 10 வயதுவரை மணலில் விளையாடவும், 14 வயதுவரைகூட பம்பரம் சுற்றவும், கோலி ஆடவும் அதற்கு மேலும் கூட பட்டம் விடவும் விரும்புகிறார்கள் சிறுவர்கள். கத்திரியை வைத்துக்கொண்டு கடுதாசை பலதினுசாக வெட்டி விளையாட 2 வயது முதல் 14 வயதுவரை ஆசையுண்டு ஒரு நல்ல சுத்தியும். ஆணிகளும் வாங்கிக்கொடுத்தால் 2 வயது முதலே அதில் சிரத்தை காணப்படும் இது 16 வயதுவரைகூட காணப்படுகிறது. இந்த விளையாட்டு அவர்களுடைய தசை நார்களுக்கு முறுக்கேற்றுவதோடு நரம்புகள் ஒழுங்காக இயங்கவும் உதவுகிறது

ரயில்வண்டி. விளையாட்டுக்கருவிகளிலேயே அடைந்திருக்கும் பிராபல்யத்தை விவரிக்கவே முடியாது சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு சாதாரண ரயில் வண்டிகளையே வாங்கிக் கொடுக்கவேண்டும. வயதான பின்னரே சாவிகொடுக்கும் வண்டிகளையும், மின்சாரத்தால் ஓடும் வண்டிகளையும் வாங்கவேண்டும்.

3

விளையாட்டுச் சாமான்களை இரு வகையாகப் பிரிக்கலாம் (1) வயதுப் பிரகாரம் (2) அவைகளால் ஏற்படும் பலன்கள் பிரகாரம் பலனுக்கேற்றவாறு கீழ்க்கண்ட மாதிரி பிரிக்கலாம்.

(அ) பலத்தையும் திறமையையும் விருத்தியாக்கும் விளையாட்டுக் கருவிகள்.

உதாரணம்:—முக்கியமாக மைதானங்களில் ஓடி ஆடும் விளையாட்டுகளும், அவைகளுக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான்களும். தேகப் பயிற்சி. ஆஸனங்கள் முதலியவை,

(ஆ) சுயமாகக் கட்டவும் சிருஷ்டி செய்யவும் உதவும் கருவிகள்.

உதாரணம்:—சிறு கட்டைகள்; சுத்தி, ஆணி; தச்சு வேலை சாமான், கத்திரி, காகிதம்; கப்பல், ரயில் ஏரோப்ளேன் முதலியவை கட்டும் கருவிகள்.

(இ) பெரியவர்கள் செய்வதைத் திருப்பிச் செய்யத் தூண்டும் சாமான்.

உதாரணம்:—பொம்மை, சொப்பு; ரயில். மோட்டார் முதலியவை.

(ஈ) சமூகத்தில் பழகும் விதத்தைக் கற்பிக்கும் சாமான்,

மற்றொரு குழந்தையுடனோ அல்லது பல குழந்தைகளுடனோ சேர்ந்து விளையாட வேண்டிய எல்லா விளையாட்டுக் கருவிகளுமே நாலுபேரிடத்தில் எப்படிப பழகுவதென்று குழந்தைகளுக்கு அறிவுறுத்தும்.

(உ) கலை வளர்ச்சி, கைத்தொழில் சாமான்கள்

உதாரணம்:—களிமண், கலர் சாக்கு அல்லது பென்ஸில் காகிதம், வர்ணங்கள் சங்கீதக் கருவிகள், சிறிய மத்தளங்கள். புத்தகங்கள், கத்திரியும் காகிதமும் தச்சு வேலை ஆயுதங்கள், ராட்டினம், கைத்தறி. கூடை, பாய் நெய்தல் இன்னும் பல.

(ஊ) அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவை.

உதாரணம்:—சிறிய டைப்மிஷின் அச்சடிக்கும் யந்திரம், எண்ண உதவும் சட்டங்கள். கரும்பலகை. புத்தகங்கள் போன்ற பல

(எ) விஞ்ஞானத்திலும், இயந்திர சாஸ்திரத்திலும் சிரத்தையைத் தூண்டும கருவிகள்.

உதாரணம்:—பல விதப் பட்டுப் பூச்சி, வண்ணாத்திப் பூச்சி இலை பூ. ஸ்டாம்ப் முதலியவை சேகரித்தல். மீன் வளர்த்தல். சிறிய பூதக் கண்ணாடி சிறிய கிருமி தருசினி, மெகானோ வாகன்கள் ட்ரக்குகள் ரயில் வண்டி முதலியவையாகும்.

மளிகைக் கடைக்காரனாகவும், பெட்ரோல் பங்க்காரனாகவும், பஸ் கண்டக்டராகவும் பாவித்து விளையாடும்பொழுது பள்ளியில் கசந்த கணக்கு இனித்துவிடுகிறது பூகோளத்தை பூதமெனக்கருதும் குழந்தைகளுக்குக் கூட அதை விளையாட



டாக்கி ரஸமுள்ளதாக்கி விடலாம். இந்தியாவின் படமொன்றை எடுத்து அதை 16 துண்டுகளாக்கி பையனிடம் சரியாக ஒன்று சேர்க்கச் சொல்லுங்கள். நாளடைவில் எந்த எந்த ஊர் எங்கிருக்கிறது என்று உங்களைக் காட்டிலும் சரியாக பையன் சொல்லிவிடுவான்.

4

விளையாட்டினால் குழந்தைகள் அடையும் லாபத்தை விவரிப்பது எளிதல்ல. நற் பழக்கங்கள். சுத்தம் ஒழுங்கு முறை கீழ்ப்படிதல், தைர்யம் பலம் திறமை விடா முயற்சி, ஊக்கம், தன்னடக்கம், பொறுமை, மற்றவருக்கு விட்டுக் கொடுத்தல், அறிவு வளர்ச்சி, முன் யோசனை சாதுர்யம் யாவும் அவர்களிடம் அடைக்கலம் புகும். உத்தம மனிதனுக்கு வேண்டிய லட்சணங்கள் யாவும் வரும். இதைக் காகிதத்தில் கருமையில் பார்க்கும் போது நம்புவது கடினமே. எனினும் அனுபவம் உண்மை அறியும்.

ஆனால் 'பொறுமை, இன்னும் கொஞ்சம் பொறுமை. இன்னும் கொஞ்சம்கூட பொறுமை' பெரியவர்களுக்குக் கட்டாயம்வேண்டும். இதை எத்தனை தரம் வற்புறுத்தினாலும் போதாது குழந்தை சாக்கை வைத்துக்கொண்டு ஏதோ கிறுக்குகிறது, நாம் பொறுமையை இழக்கிறோம். "அப்படி இல்லேடா மண்டூ" என்று திட்டி நம் திறமை முழுதும் உபயோகித்து அழகாக வெகு சிரமப்பட்டு ஒரு யானை வரைகிறோம். ஆனால் குழந்தைக்கு அதில் துளிக்கூட சிரத்தை இல்லை இதில் ஆச்சர்யப்பட ஒன்றுமே இல்லை. மேலும் அப்பாவைப்போல் தனக்கு எழுத முடியவில்லையே என்ற எண்ணம், குழந்தை மேலும் முயற்சிப்பதி

விருந்து தடுக்கிறது இதனால்தான் சிலகுழந்தைகள் "எனக்குத் தெரியாது, நீ எழுதிக் காட்டு" என்று பெற்றோரைக் கேட்கும். தவறு நம்மீதுதான். நாம் ஏன் அவசரப்பட வேண்டும்? அவர்கள் தாமாகவே எழுதிக் கற்றுக்கொள்ளட்டுமே. குழந்தைக்கும் அதுதான் ஆசை. கட்டையை வைத்துக் கட்டும் போதும் இதே கதைதான். தயவு செய்து பெரியவர்கள் வந்து விளையாடாமல் இருங்கள். குழந்தைகளும் உங்களைத் தொந்திரவு செய்யமாட்டார்கள்.

5

இச்சந்தர்ப்பத்தில் குழந்தைகளின் அறிவை வளர்க்கும் முக்ய சாதனமான புத்தகங்களைப் பற்றி சிறிது ஆராய்வது அவசியமாகிறது. குழந்தைகளின் புத்தகம் இலக்கியத் துரையில் ஒரு தனிப் பெரும் அம்சமாகும். குழந்தைகளுக்கு எழுதுவதென்பதே ஒரு தனிக் கலை. இவ்வாற்றல் எல்லா எழுத்தாளரிடமும் இராது. இந்தக் கலைக்கு உத்ஸாகமூட்டி அதை மேன்மேலும் வளர்க்க வேண்டும். நம் நாட்டில் சிறுவருக்கான எத்தனையோ ரஸமான பழங்கதைகளும் உள்ளன. புதிய கதைகளும் ஏராளமாக வர வழியுண்டு. குழந்தைகளுக்கான புத்தகங்கள் உறுதியான அட்டையுடன் நல்ல காகிதத்தில், தெளிந்த அச்சில் கொட்டையான எழுத்துக்களையும் நேர்த்தியான சித்திரங்களை பல நிறங்களில் கொண்டதாயும் இருக்க வேண்டும். தற்போது வெளிவரும் புத்தகங்களில் பெரும்பாலும் விகாரமான கோடிட்ட சித்திரங்கள் கொண்டதாகவே இருக்கின்றன. நல்ல கலைஞர்களை வைத்து உயர்ந்த படங்களை அச்சிட வேண்டும்.

துணிப் புத்தகங்கள் வெகு பிரபலமாயிருக்குமென்பதில் ஐயமில்லை. செலவு அதிகமானால் அதை ஈடு கட்ட, பிரசுரிக்கும் பிரதிகளின் எண்ணிக்கையை அதிகரித்து விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். சிக்கனத்தை உத்தேசித்து மோசமான புத்தகங்களை வெளியிடுவது பெருங் குற்றமாகும்.

இத்துறையில் மேலை நாட்டவர், அதிலும் குழந்தைகளைக் கொண்டாடுர் அமெரிக்கர் முன்னணியில் இருக்கின்றனர்.

6

வாழ்க்கையின் பல அம்சங்களான சங்கீதம் சித்திரம் அல்லது டென்னிஸ் க்ரிக்கெட போன்ற விளையாட்டுகளிலோ எதிலாவது ஒன்றில் உங்கள் குழந்தை நல்ல தேர்ச்சி பெற்று நிபுணனாக விளங்க வேண்டுமென்று விரும்பினால் சிறு வயதிலிருந்தே அவனை அதில் பழக்க வேண்டும். கோஷ்டி விளையாட்டுகளினால் குழந்தைகளுக்கு பலருடன் சேர்ந்து ஒத்துழைப்பதும், ஒரு தலைவனை ஏற்படுத்தி அவன் சொல் கேடபதும் எளிதாகிவிடுகிறது. இந்த 'டீம் ஸ்பிரிட்' இவர்களுக்குப் பிற்காலத்தில் வெகுவாக உதவும் என்பதில் ஐயமுண்டா? வாஷிங்டனில் ஒரு அறிக்கையில் விளையாட்டை 'சமூகத்தில் பழகும் விதம்' என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இதே நாம் முக்யமாக இந்நாளில் வேண்டுவது. ஆங்கிலத்தில் கில் அன்ட்டேக் என்பார்களே அதாவது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை. இது மாத்திரம் மனிதனிடத்து இளமையிலேயே அமைந்துவிட்டால் உலக யுத்தங்களுக்கே இடமிராது என்று கூறினால் அது மிகையாகாது. இம் மனப்பான்மை விளையாட்டு ஒன்றின் மூலமே மனிதனிடத்து எளிதில் அமைகிறது.

குழந்தைகள் ஆயிரங்காலத்துப் பயிர். எதிர்காலம் அவர்கள் கையில் இருக்கிறது. நாம் உலகப் பிரஜைகள் அதன் பொறுப்புணர்ந்து நடக்க வேண்டும் என்றார் ராஜாஜி. வருங்காலப் பிரஜைகள் தாய்நாட்டிற்குப் பெருமை அளிக்கும் வகையில் வாழத்தக்கவர்களாகச் செய்வது நம ஒவ்வொருவரின் கடமையுமல்லவா?

கேவலம் விளையாட்டைப்பற்றி இவ்வளவு சிந்தனை செலவழிக்க வேண்டுமா என்று சிலர் கேட்கலாம். வோட்ஸ்வர்த் மகாகவி எழுதியது போல் 'குழந்தை எதிர்கால மனிதனின் தகப்பனானல்' விளையாட்டு வாழ்க்கையின் அஸ்திவாரமாகும். பிள்ளைப் பிராயத்தின் முதல் வேலை- முழு வேலை என்றுகூடச் சொல்லலாம். விளையாட்டை. விளையாட்டுக் கருவிகளே இவ்வேலையின் ஆயுதங்கள் ஆகும். ஐந்தில் கற்றது ஐம்பது வரை அன்றோ? நாம் முன்னே பார்த்தபடி விளையாட்டின் மூலம் வாழ்வுக்கு இன்றியமையாத அருங்குணங்கள் சிறுவரிடம் தாமாகவே குடிபுகும். இவ்வரிய தொண்டாற்றும் விளையாட்டுக் கருவிகளைப் பற்றியும் விளையாட்டைப்பற்றியும் அறிவுடையோர் சிந்திப்பது எவ்வளவு அவசியமாகும்!

முன் ஒரு காலத்தில் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகளிருந்தார்கள். நாட்டு ஜனங்கள் அரசனிடம் மிகவும் அன்புடன் பழகிவந்தார்கள்

பக்கத்து தேசத்தரசன் எப்படியாவது இந்த தேசத்தை ஜெயித்துவிட வேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். தன்னுடைய ஒற்றர்களைக் கொண்டு எதிரியின் சேனாதிபதியைத் தன் வசப்படுத்தினான் சேனாதிபதியும் பொருள் ஆசையினால் எதிரி வசமானான்

திடீரென்று ஒரு நாள் அந்நாட்டின்மீது படையெடுத்துவிட்டான் எதிரி அரசன் இங்கேயோ சேனைகள் தயாராக இல்லை சேனைத் தலைவனையே காணவில்லை அரசன் என்ன செய்வான்? சேனைகள் தயாராயில்லாத சமயம் சண்டை செய்து நாட்டு மக்களைப் பலியிட அவன் மனம் சம்மதிக்கவில்லை உடனே தன் பிள்ளைகளுடன் காட்டிற்குச் சென்றுவிட்டான்.

காட்டில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. எவ்வளவோ நாட்கள் பட்டினியாய் கிடக்க நேரிட்டது இதனால் அரசனின் மனம் கலக்கமடைந்தது. கொஞ்ச நாளில் அவன் நோய் வாய்ப்பட்டான்.

ஒரு நாள் தன் மூன்று பிள்ளைகளையும் தன்னருகில் அழைத்தான். "பிள்ளைகளே! எனக்கு வயதாகிவிட்டது, வியாதியும் ஏற்பட்டுவிட்டது நான் இந்த வியாதியிலிருந்து பிழைக்க வேண்டுமென்றால், இங்கிருந்து பல மைல்களுக்கப்பால் ஒரு நாடு இருக்கிறது அந்நாட்டு அரசன் மகா துஷ்டன் அந்த நாட்டில் ஒரு பச்சிலை கிடைக்கிறது. அந்தப் பச்சிலை கிடைத்தால் என் வியாதி தீர்ந்து விடும். ஆனால் அந்த நாட்டிலிருந்து அதைக் கொண்டு வருவது எளிதல்ல. அந்தப் பச்சிலையை எடுக்கும்போது கண்டு விட்டால் உடனே கொன்றுவிடுவார்கள் அதனால் நீங்கள் ஒருவரும் செல்லவேண்டாம்" என்றான்.

நீங்கள் உங்கள் சாமர்த்தியத்தினால் பிழைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னான் அரசன்.

பிள்ளைகள் அரசனுடைய வார்த்தையைக் கேட்டதும் துள்ளி எழுந்தார்கள் "தாங்கள் வியாதியால் படும் கஷ்டத்தை நாங்கள பார்த்துக் கொண்டிருக்க முடியாது நாங்கள் இப்பொழுதே சென்று அந்தப் பச்சிலையை எடுத்துக் கொண்டு வருவோம்" என்று சொல்லிப் புறப்பட்டார்கள்.

மூன்றாவது பையன் தானும் வருவதாகச சொன்னான். ஆனால் பெரிய பிள்ளைகளிருவரும் "நீ சின்னப் பையன். நீ இங்கேயே இரு" என்று சொல்லிவிட்டு, கிளம்பிச் சென்றார்கள் பல நாட்கள் சென்றன மாதங்கள் முடிந்தன ஆனாலும் பச்சிலை தேடச் சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அரசனின் வியாதி அதிகரித்துக்கொண்டே வந்தது

மூன்றாவது குமாரன் மிகவும் கெட்டிக்காரன். அவன் தன் சகோதரர்களைத் தேடி வருவதாயும், பச்சிலையைக்கொண்டு வருவதாகவும், தகப்பனிடம் சொல்லிப் புறப்பட்டான் அவனுடன், அவன் வளர்க்கும் பூனைக்குட்டியும் புறப்பட்டது

பல இடங்கள் சுற்றி பச்சிலை இருக்கும் நாட்டை அடைந்தான்.

அந்த நாட்டில் ஒரு விசித்திரமான செய்தியைக் கேட்டான் அந்த தேசத்து அரசனுக்கு ஒரு மகள். அவள் மிகவும் அழகுள்ளவள் அவள் தனிமையாக வசித்து வருகிறாள் அவளைக் கல்யாணம் செய்து கொள்பவர்கள் குறிப்பிட்ட மைதானத்திற்கு வரவேண்டும். அங்கு

இரு பெரிய கூண்டுகள் இருக்கும். ஒரு கூண்டில் அரசகுமாரியும, மற்றொன்றில் ஒரு பெரிய சிங்கமும் இருக்கும். கலியாணம் செய்துகொள்ள வருபவர்கள் இரண்டில் ஒரு கூண்டைத் திறக்க வேண்டும். கூண்டிலிருந்து சிங்கம் வந்தால் அதற்கு ஆகாரம். ராஜகுமாரி வந்தால அவளுடன் கலியாணம். அது மட்டுமா? பாதி இராஜ்யம வேறு மணம் செய்துகொள்கிறவனுக்கு” இந்த விசித்திரச் செய்தியைக் கேட்டவுடன் எப்படியாவது அரச குமாரியை அடைந்தே தீருவது என்று தீர்மானித்துக்கொண்டான் அந்த ஊரிலுள்ள காடுகளில் எல்லாம் தகப்பனின் வியாதியைப போக்கக் கூடிய பச்சிலையைத் தேடி அலைந்தான். அவன் தன்னுடன் பூனைக் குட்டியை எடுத்தே செல்வான். அது அவனுடன் விளையாடிக்கொண்டே இருக்கும்

ஒரு நாள் அவன் பல இடங்களில் சுற்றிவிட்டு ஒரு மரத்தடியில் அயர்ந்து தூங்கி விட்டான். அவனுடைய பூனைக்குட்டி காவல் காத்துக்கொண்டிருந்தது அந்த மரத்தடிக்குப் பக்கத்தில் அரச குமாரி விளையாடுமிடம் இருந்தது. தன் தோழிகளை வரச் சொல்லிவிட்டு தான் விளையாடுமிடத்திற்கு முன்பாகவே வந்து விட்டாள் மரத்தடியில் பூனைக் குட்டி கண்களை மூடிக்கொண்டு “குர்ர் - குர்ர்” என்று முனகிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் அரசகுமாரிக்குவேடிக்கையாயிருந்தது பூனைக்குட்டியும் அவளுடன் விளையாட ஆரம்பித்தது அரச குமாரன் கணவிழித்தான் எதிரே அழகான பெண்ணுடன் பூனைக்குட்டி விளையாடிக் கொணடிருக்கிறது அரச குமாரனைக் கண்டதும் ராஜகுமாரி திடுக்கிட்டாள். பிறகு மெள்ள இருவரும் பேச ஆரம்பித்தார்கள் அந்தப் பூனைக்குட்டியைத் தனக்குத் தரும்படி வேண்டினுள் அரச குமாரி. அவனும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

மறுநாள் அரசகுமாரன் அரண்மனைக்குச் சென்று தான் ராஜகுமாரியை மணக்க வந்திருப்பதாகத் தெரிவிததான்

வழக்கப்படி மைதானத்தில் இரண்டு கூண்டுகள் வைக்கப் பட்டன ஒரு கூண்டில் அரச குமாரி, மறறொன்றில் பசியினுல் வாடும் சிங்கம அரசன், மநதிரி மற்ற ஜனங்கள் யாவரும் மைதானததில் வந்து கூடினுர்கள்.

அரசகுமாரன் தயாராக நின்ருன் எதாவது ஒரு கூணடைத் திறக்கும்படி அவனுக்கு உத்திரவிடபபட்டது கூண்டின் அருகே சென்ருன் சற்று நேரம் தயங்கினுன் எல்லா ஜனங்களும் “ஐயோ ஒரு நிமிஷத்தில் ஒரு அழகான அரச குமாரன் சிங்கத்திற்கு பலியாகப் போகிருனே” என்று வருததப்பட்டார்கள்

கூண்டின் கதவைத் திறந்தான். கையில் மாலையுடன் ராஜகுமாரி அழகாக வெளியே வந்தாள் எல்லோரும் சந்தோஷத்தினுல் ஆரவாரம செய்தார்கள் அவர்களுக்குத் தெரியுமா அரச குமாரன ராஜகுமாரி யிருக்கும் கூடடை எபபடித் தெரிந்து கொண்டான் என்று. ராஜகுமாரி அவனுக்கு மாலையிடடாள். பூனைக்குட்டியும் வாலைக் குழைத்துக் கொண்டு வந்து இருவருக்குமிடையே வந்து நின்றது.

பாதிராஜ்யம் கொடுக்கப்பட்டது அந்தப் பாதி ராஜ்யததில் தான் அவன் தேடி வந்த பச்சிலை இருந்தது பச்சிலையை நிறைய எடுததுக் கொண்டு தன் தந்தையைப் பார்க்கப் புறப்படடான். தந்தையின் வியாதி பச்சிலையால் நீங்கிவிடடது

பிறகு தன் சைன்னியத்துடன் தந்தையிடமிருந்து நாடடைப் பறித்துக்கொண்ட அரசன் மீது படையெடுத்து சண்டையில் தோறகடித்தான் அங்குள்ள சிறையைத திறந்து பார்ததால், இரு சகோதரர்களும் அங்கு வாடிக் கிடக்கிருர்கள சகோதரர்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்.

பிறகு மூத்த சகோதரனை சிம்மாசனத்திலமர்த்தி மற்ற இருவரும் அவனுக்கு உதவி செய்து வந்தார்கள்



தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

லோகல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

"நூரேஜிஸம்" யூனானி டானிக் ஹல்வா.

25 வருஷங்களாக இந்த அற்புத டானிக்கை உபயோகித்தவர் இதன் ஆச்சரிய குணத்தை மெச்சாதவர் இல்லை. உபயோகித்த அன்றே அபார பசி ஆச்சரிய சக்தி வந்துவிட்டது புலனாகும். சகல விடமின்களும் நிறைந்த இது பாலர்கள். கர்பிணிகள் பிரசவித்த தாய்மார்கள், பல குறைவாய் உள்ளவர்கள், நரம்பு தளர்ந்தவர்கள், வியாதிக்கு பிறகு சக்தி குறைவாய் உள்ளவர்களுக்கு அபார சக்தியை கொடுக்கும். இதனால் அநேக பலஹீன வியாதிகள் பரக்கும் அபார ஜீவ சக்தியை உண்டாக்கும்—பத்தியமில்லை பரீக்ஷியுங்கள்

விலை 1பவுண்டு 40-நாள். 80-வேளை. ரூ 16-0-0
½பவுண்டு 20 ,, 40 ,, ரூ. 9-0-0
V P செலவு தனி

Dr. H. B. S. அத்திபழ ஹல்வா பேதி மருந்து இல்லாத பல சிக்கல் நிவாரணி பழய மலங்களை அன்றாடம் கழிக்கும் அநேக வியாதிகள் இதனால் நிவர்த்தியாகும் வாய்வு திரேகிகளுக்கு ஏற்றது கற்பிணிகளும், பிள்ளைகளும், உபயோகிக்கலாம். தின்பதற்கு ருசி. பத்தியமில்லை. நினைத்தபோது சாப்பிடக்கூடியது.

விலை 1-பவுண்டு ரூ. 5-0-0 ½பவுண்டு ரூ. 3-0-0
V P செலவு தனி

யூனானி வைத்தியம்:—பல கஷ்ட சாத்திய வியாதிகளை பத்தியமில்லாத லேசான இட்காமுறைகளால் தீர்த்துக் கொள்ளலாம். நேரில் இலவச ஆலோசனை கேளுங்கள்.

RAHAMATH PHARMACY (ESTD 1925)
55. Parish Venkatachala Iyer St. G T. Madras.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து,, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B A.

உங்கள் முறை தவருனது

தரகர்கள் — நிபுணர்கள் — அவரவர் சொந்த நலனுக்காக லாபம் சம்பாதிக்கும்பொருட்டு, தமது அன்பான (!) உதவியின்றி வியாபாரியிடம் நீங்கள் நேரடியாகச் செல்லாமலிருக்க சாதுர்யமாகப் பேசுகின்றனர்.

ஆகையால், நீங்கள் வியாபாரியை அடையும் முறை தவருனது. வியாபாரி பைசாச மானுலும், உமது அறியாமையை எளிதில் கண்டுபிடிப்பார்; அதுவே அவரது கொள்கை. உமது அறியாமையை அறிய எவ்வளவோ வழி அவருக்கு இருக்கிறது. நீங்கள் மிகவும் புத்திசாலியாயிருந்தாலும் வியாபார விஷய மறியாதவர்தானே.

ஜப்பானிய விலைகளில், பிரிட்டிஷ் நம்பிக்கையுடன் ஜெர்மன் சரக்குகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். விலை விகிதங்களை மட்டும் பரிசீலித்து உமது நிபுணரை ரகத்தை தெரிந்தெடுக்க அனுமதிப்பது நெருப்புக்கோழி வழிபோலாகும். உமது நிபுணர் சொல்லிக் கொடுத்துள்ள வழியைப் பின்பற்றுவதாலும் நன்ருக விவரித்துக் கூறுவதாலும் சரியான ரகம் கிடைக்காது நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற சரக்குதான் கிடைக்கும்.

நேர்மை, நம்பிக்கை, பெயர், நீண்டகால சேவை இவை பொருந்திய வியாபாரி கிடைப்பது உமக்கு அனுகூலமாகும். உமக்கு நம்பிக்கையான சரக்கு கிடைக்கக்கூடும். உங்களுக்குத் தேவையான நகையை அவரிடம் சொல்லுங்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய தொகையும் கூறுங்கள். சரியான விலையில் சரியான சரக்கு பெறுவதற்கு அது போதுமானது.

உமது வாங்கும் முறையைச் சீர்படுத்துங்கள். சுயநலம்பெற்ற தரகர்களின் வம்பு பேச்சில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

நேர்மையான வியாபாரியை நம்புங்கள்
நாணயமுள்ள சரக்கு கிடைக்கும்.

வியாபாரி உண்மையில் நேர்மையானவர்

ஸூரஜ்மல்ஸ்

"1895 முதல்"

நம்பிக்கையான நகை வியாபாரிகள்

વણિકસ્ય તુલા

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.